இலவச வெளியீடு: GERMANY , ENGLAND மார்கழி.Dec. 2015

Free Circulation

# வெற்றிமணி

Vettimaniy

மணி 65

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A

Orientalische Textilien & Schmuck
மாபெரும்
தொடர் மலிவு விற்பனை!
விபரம் பக்கம் 10
தரமான தங்க நகைகளுக்கு உத்தரவாதமிக்க நகைமாளிகை
Königswall 16 (Am HBF) 44137 Dortmund
Tel: 0231/162377 Fax: 49.0231/147836

## சமந்தா பவர் என்ன சொன்னார்?



## ஆண்பாவம் சொல்லாதது!!!



## ஒளியின் விழவு இருளின் முழவு!



## அனைவருக்கும் எங்கள் இனிய நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

## ஷங்கர்ஷன்

## பணிவு துணிவு நிமிர்வு

T.T.S.Brothers GmbH&Co.KG
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288
விபரம் பக்கம் 09

கனீன் எலக்ரோனிக்ஸ்
Schevenhofer Weg 24,- 42111 Wuppertal
Tel: 0205 3423 740
விபரம் பக்கம் 24

Gopara Gnanam Textiles & Jewellery Shop
நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு
Top Clearance Sale 18,19 Dec
Tel: 0231/5450028- Mob: 01713306542
Rheinische Str.81-- 44137 Dortmund
மேலதிக விபரம் 11ம் பக்கம்

Frankfurt:Tel:069 97 693 374
SARAVANAA BHAVAN

asiamarkt24.com
Online Supermarket - 0231 330 46 798

Lucky Fly
0234 239 90 32 Mobile:0179 14 84 892

StaR - Impex
Tel.: 0231/8602696



# கடல் அலைகள் வாசிக்கும் அதிசய ஓர்கன்



சிவஜெனனி

2005 ஆம் ஆண்டில் கிரோசியா (Croatia) நாட்டில் அங்குள்ள ஆர்கிற்ரேக் (கட்டிடக் கலைஞர்) ஒருவர் 230 அடி நீள அளவில் ஓர்கன் கருவியை வியக்கும் வண்ணம் செய்துள்ளார். இதில் என்ன அதிசயம் என்றால் இந்தக் கருவியை இயற்கையால் தான் வாசித்து மகிழ முடியும். அந்த இயற்கைக் கலைஞன் உலகின் மூன்றில் இரண்டு பகுதியை ஆக்கிரமித்துள்ள கடல் என்னும் பெரும் கலைஞன் அவனது அலைகள் பார்பதற்கு அழகாகவும் கேட்பதற்கு இதமானதுமான அலைஓசைகள்.



துளையூடாக அதிசய இசையை அணு அணுவாக இரசிக்கும் பெண்

புல்லாங்குளலில் காற்றுப்புகந்தால் புதுப்புது இசையாகும் அதுபோல் இங்கும் கடற்கரையில் அமைத்த துவாரங்களுக்குள் அலைகள் அழைத்துவரும் காற்கு புகுந்தால் புதுப்புது இசை ஆகும்.

அதாவது இந்த ஓர்கன் படிக்கட்டின் வடிவில் அடிறியாட்டிக் கடற்கரை (Adriatic Sea) அருகில் அமைக்கப் பட்டிருக்கின்றது. கடல் அலைகளே இந்தக் கருவியை மீட்டுகின்றன. கடலில் இருந்து அலைகளுடன் சேர்ந்து வரும் காற்று அந்தப் படிக்கட்டில் அமைத் திருக்கும் குழாய்களுடாக சென்று வெவ்வேறு அலைவரிசையில் எவராலும் வாசிக்க முடியாத புது இசையை உலகுக்கு வெளிப்படுத்துகிறது.

இயற்கையை வாசித்தவன் சிறந்த கலைஞன், இன்று உலகில் உள்ள எந்தக்கண்டு பிடிப்புக்களும் இயற்கையின் சாயலின்றி எதுவும் இல்லை. கணனி என்றால் மூளை. விமானம் என்றால் பறவை, கப்பல் என்றால் மீன். ரோபோ என்றால் மனிதன், இசை என்றால் தென்றல், அலை, பாட்டு என்றால் குயில், நடனம் என்றால் மயில், ஒளி என்றால் சூரியன் இப்படி எல்லாமே இயற்கை!


இயற்கையை சற்று இரசிக்த்தெரிந்த ஒவ்வொரு வரும் கலைஞர்களே!

பின்பு இந்தக் கடற்கரையில் இரசிகர்கூட்டத்திற்கு கேட்கவா வேண்டும். அலைகள் ஓய்வதில்லை! அப்படி என்றால் இந்தக் கடற்கரையில் ஓர்கனும் ஓயாது வாசித்துக் கொண்டே இருக்கும்.

அலை ஓசையை அணு அணுவாக இரசித்த ஒரு கட்டிடக்கலைஞனின் கரங்களுக்குள் இசை மீட்க ஒத்துக்கொண்டது அந்த மாபெரும் அலைகள்.



அந்த ஆனந்த அலைகளின் அலைப்பாட்டுத்தான் இக்கடற்கரையில் வாசிக்கப்படும் ஓர்கன் இசையாக அசத்துகின்றது. அதுவே அலை வாசிக்கும் அதிசய ஓர்கன் இசை!




## வெற்றிமணி விளம்பரத் தொடர்புகளுக்கு யேர்மனி

Tel: 02351/45 88 62

01575 83 94 325

e-mail: vettimaniy@hotmail.com

UK. Sanje:(0044) 07824 61 83 83

vai g (0044) 00 44 7788 195962










வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
—கவிஞர்.வி.க

ஓசை 231


ஆரம்பம்:1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
(முன்னாள் அதிபர்: குரும்பசிட்டி பொன்.பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
“ஓவியக்கலைவேள்”
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A.
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A.

Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
01575 83 94 325

e-mail: vettimaniy@hotmail.com
Company No: 8876276

“வெற்றிமணிமொழி”
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

பத்திரிகை வடிவம்
சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)
Vettimaniy Ltd
Sanje:07824 61 83 83
vai g (U.K) 00 44 7788 195962


## சமந்தா பவர் என்ன சொன்னார்?

# ரணில் விக்கிரமசிங்கவின் புதிய நகர்வு

**இலங்கைத் தேசியம் என்ற வரையறைக்குள் தமிழ்த்தரப்பும் இணங்கிச் செல்ல வேண்டும் என்பதுதான் அமெரிக்காவின் நிலைப்பாடு– பௌத்த தேசியவாதிகளை திருப்திப் படுத்தி தமது புசார் அரசியலுக்கு வலுச் சேர்ப்பதும் மற்றுமொரு இலக்கு**

இலங்கையில் இருந்து -அ.நிக்ஸன்-

-அ.நிக்ஸன்-

அமெரிக்காவின் ஐக்கிய நாடுகள் சபைக்கான நிரந்தர வதிவிட பிரதிநிதி சமந்தா பவர் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் சென்று வந்தன் மூலம் இரண்டு விடயங்கள் தெளிவாகியுள்ளன. ஒன்று இனப்பிரச் சினைக்கான தீர்வு தற்போதைக்கு இல்லை என்பது. இரண்டாவது சிங்கள அரசியல் கட்சிகளை திருப்திப்படுத்தி தமது புவிசார் நலன்களை முன்கொண்டு செல்வது. இந்த இரண்டு விடயங்களும் தமிழ்த் தரப்பினுடைய அரசியல் கோரிக்கைகளை நிராகரித்துள்ளன என்ற முடிவுக்கு வரலாம். அதாவது முந்தவரை அரசாங்கத்துடனும் நடைமுறை அரசியல் யாப்பில் உள்ள சட்ட திட்டங்களுடனும் இணைந்து போக வேண்டும் என்ற செய்தியை சமந்தா பவர் சொல்லாமல் சொல்லியிருக்கின்றார்.

மங்கள சமரவீர நண்பனா?

இணங்கிப் போக வேண்டும் என முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு சமந்தா பவர் ஆலோசணை கூறியிருக்கின்றார். அதேவேளை வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர தனது நண்பன் என்றும் புவிசார் அரசியலை புரிந்து செயற்படும் ஒருவர் என்றும் தனது ரூவிட்டர் தளத்தில் கூறியிருக்கின்றார். அதேவேளை ஏனைய சிங்கள அரசியல் கட்சிகளும் சமாதானத்தை விரும்புவதாகவும் சமந்தா பவர் செய்தியாளர்களிடம் கூறியிருக்கின்றார். ஆக தமிழ்த் தரப்பு மாத்திரமே தற்போது பிரச்சினை என்ற தொனியில் அவருடைய பேச்சுக்கள் அமைந்துள்ளன. ஆகவே 30 ஆண்டுகால அஹிம்சை போராட்டமும் அதற்கு அடுத்த 30 ஆண்டுகால ஆயுதப் போராட்டமும் தமிழ்த் தரப்பினுடைய புரிதல் இன்றி இடம்பெற்றது என்ற கருத்தின் அடிப்படையில் அமெரிக்கா செயற்படுகன்றது என்று கூறலாம். அத்துடன் இனப்படுகொலை என்ற விடயத்தை மூடி மறைக்க வேண்டிய தேவை அமெரிக்காவுக்கு உள்ளது என்பதை சமந்தா பவருடைய வருகையும் நிரூபித்துள்ளது.

அதேவேளை தற்போதைய அரசியல் சூழலில் தென்பகுதி சிங்கள அரசியல் கட்சிகளுக்கு பிரதானமாக மூன்று விடயங்கள் முக்கியம் பெறுகின்றன. ஒன்று போர்க்குற்ற விசாரணையை தவிர்ப்பது. இரண்டாவது அரசியல் வேறுபாடுகளுக்கு மத்தியிலும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, படை உயர் அதிகாரிகள் ஆகியோரின் புலிகள் தொடர்பான வேலைத் திட்டங்களை தேசிய நடவடிக்கையாக கருதுவது. மூன்றாவது சர்வதேச தலையீடுகளை முற்றாக தவிர்ப்பது. நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச கடந்த வாரம் செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்ட கருத்துக்கள் இந்த மூன்று விடயங்களையும் உறுதிப்படுத்துகின்றன.

அரசாங்கத்தின் நிலை

இந்த மூன்று விடயங்களும் தமிழ் மக்கள் சார்ந்து நோக்கப்படுகின்றன. சிங்கள தேசிவாதம் என்ற சிந்தனையின் கண்ணோட்டத்தில் கட்சி அரசியல்





வேறுபாடுகளுக்கு அப்பால் இந்த மூன்று விடயங்களும் பிரதானமாகின்றன. குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி

மஹிந்த ராஜபக்ஷ அணிக்கு புதிய பாதை ஒன்றை திறந்து விடுவதற்கான வழியை இந்த மூன்று விடயங்களும் ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய சந்தர்ப்பங்களும் உண்டு. ஆட்சி மாற்றம் என்பதை சாதகமாகக் கொண்டு ஜெனிவா மனித உரிமைச் சபையின் சர்வதேச விசாரணைகள் நீக்கப்பட்டு அது உள்ளக விசாரணையாக மாற்றப் பட்டுவிட்டது

ராஜபக்சவுடன் அரசியல் முரண்பாடுகள் இருந்தாலும் போர்க்குற்ற விசாரணை மற்றும் மனித உரிமை மீறல் குற்றச் சாட்டுக்கள் போன்ற விடயத்தில் சர்வதேச அணுகுமுறைகள் அவசியமற்றவை என்பதுதான் பௌத்த தேசியவாதத்தின் கருத்து. ஆகவே அந்த கண்ணோட்டத்தில் புதிய அரசாங்கம் செயற்படவேண்டிய கட்டாய நிலைமை. இதன் காரணமாகவே ஜெனிவா மனித உரிமைச் சபையின் விசாரணைகளை முற்று முழுதாக நிறுத்தக் கூடிய வல்லமை புதிய அரசாங்கத்திடம் வலிந்து உருவாக்கப்பட்டது.

### வடமாகாண சபையின் நிலைப்பாடு

அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் இனப்படுகொலை என்பதை இலகுவில் ஏற்றுக்கொள்ளாது என்று கூறினாலும் ஜெனீவா மனித உரிமைச் சபையில் அங்கம் வகிக்கும் ஏனைய நாடுகள் அல்லது வேறு சர்வதேச பொது அமைப்புகள் இனப்படுகொலை என்பதை வெளிப்படையாக ஏற்றுக்கொள்ள தயாராக இருப்பதாக கூறப்படுகின்றது.

தொடர்ச்சி 04ம் பக்கம்...




3ம் பக்கத் தொடர்ச்சி

## வடமாகாண சபையின் நிலைப்பாடு

ஆகவே அவ்வாறு வெளிப்படையாக எற்றுக்கொள்ள தயாராகவுள்ள நாடுகளின் பிரதிநிதிகளை சந்தித்து பேசுவதற்கான ஏற்பாடுகளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டு வருகின்றார். இதற்காகத்தான் இனப்படு கொலை என கூறி வரும் வடமாகாண சபையை கலைத்து புதிய தேர்தலை நடத்தி தமக்கு சாதமான ஒருவரை முதலமைச்சராக்க பிரதமர் முற்படுகின்றார் என்றும் அறிய முடிகின்றது. ஆனால் இந்த அணுகுமுறை சாத்தியப் படக்கூடியதல்ல. ஆனாலும் சம்பந்தன் சுமந்திரன் ஆகியோர் தமிழத்தேசிய கூட்டமைப்பில் முக்கிய பங்காற்றுவதனால் அந்த இருவரின் ஆதரவின் மூலமாக மேற்படி அணுகு முறையை நகர்த்தலாம் என்று பிரதமர் யோசிப்பதாகவும் தகவல்.

### இலங்கைத் தேசியம்

முடிந்த வரை சர்வதேச நாடுகளுக்கு இலங்கைத் தேசியம் என்பதை பாதுகாக்க வேண்டிய அவசியம் குறித்து பிரதமர் ரணில் விளக்கமளித்து வருகின்றார். சமந்தா பவரை சந்தித்தபோதும் பிரதமர் அவ்வாறுதான் கூறியுள்ளார். சர்வதே நாடுகள் இலங்கை என்ற சிறிய அரசை பிளவுபடுத்த முற்படுகின்றன என்பதுதான் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் குற்றச்சாட்டு.

அத்துடன் இனப்படுகொலை என்பதை அமெரிக்கா கூட தமக்கு சாதகமாக பயன்படுத்தலாம் என்ற கருத்தை மஹிந்த ராஜபக்ஷ அணி ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் கூறி வருகின்றது. அதனை பௌத்ததேசியவாதமும் ஏற்றுக் கொண்டுள்ளது. இதனால் தான் மைத்திபால சிறிசேன அரசாங்கம் பௌத்த தேசியவாதிகளை திருப்திப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோதபாஜ ராஜபக்சவுக்கு சொந்தமானது என கூறப்படும் அவன்காட் நிறுவன விவகாரம் கூட மூடி மறைக்கப்பட்டமைக்கு அதுதான் காரணம் என சிங்கள நாளேடு ஒன்றில் செய்தி வெளியாகியிருந்தது. சமந்தா வபருடைய வருகையும் அவர் வெளியிட்ட கருத்துக்களும் பௌத்த தேசியவாதத்தை திருப்திப்படுத்தியமையும் ரணில் அரசாங்கத்தை பாதுகாக்கும் உத்திதான்





## யாழ்ப்பாணம் ஒஸ்மானிய பெண்கள் கல்லூரி மாணவிகளுடன் விளையாடிய சமந்தா பவர்

இலங்கை வந்துள்ள ஐ.நாவுக்கான அமெரிக்க பிரதிநிதி சமந்தா பவர், கடந்த மாதம் யாழ் ஒஸ்மானியா பெண்கள் கல்லூரியின் புதிய கட்டடத்தை திறந்து வைத்தார்.
இவ்விழாற்கு பிரதம அதிதிகளாக சமந்தா பவர் மற்றும் சீ.வி. விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு கட்டடத்தை திறந்து வைத்தனர். இதன்போது, ஒஸ்மானிய பெண்கள் கல்லூரி மாணவிகளுடன் மழை வேளையிலும் மைதானத்தில் எல்லே விளையாட்டில் ஈடுபட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

எமது இளையோர் மத்தியில் ஒழிந்திருக்கும் திறமைகளை வெளிக்கொண்டு வருவதற்காக தமிழ் இளையோர் அமைப்பு தளம் அமைத்துக்கொடுத்திருக்கும் நிகழ்வே 'ஈழத்து திறமைகள்' ஆகும். இந் நிகழ்வில் தனிப்போட்டியாளராகவோ அல்லது குழுப்போட்டியாளர்களாகவோ பங்குபெற்றலாம்.
ஈழத்து திறமைகள் - The Talent Show*
15.12.2015 முன் விண்ணப்பிக்கவும்.
Kontakt: projects@tyo-germany.com

**"ஈழத்து திறமைகள்**
09.01.2016 15:30
Bürgerhaus Quadrath
Rilkstraße - Graf Beissel Platz
50127 Bergheim Quadrath


சாருகாஷ் நிரஞ்சலா தம்பதிகள்

## நன்றி நவிலல்

கடந்த 18.10.2015 ஞாயிற்றுக்கிழமை யேர்மனியில் டோட்மூண்ட் நகரில் நடைபெற்ற எங்கள் (சாருகாஷ் நிரஞ்சலா) திருமணவைபவத்தில் கலந்து சிறப்பித்த உற்றார், உறிவினர், நண்பர்கள் மற்றும் , வாழ்துக்கள் அனுப்பிய அன்பு நெஞ்சங்களுக்கும் எங்கள் இதயம் கனிந்த நன்றிகள்.
அன்புடன்





# ஆடை அணிகலன்கள்.

**அன்று யாழ்ப்பாணத்தில் குடுமியை அகற்றும் சங்கம் ஒன்று இருந்தது!**

## யாழ்ப்பாணப் பண்பாடு
# மறந்தவையும் மறைந்தவையும்

**பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா**

19 ஆம் நூற்றாண்டிலும் இருபதாம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியிலும் யாழ்ப்பாணப் பிரதேச மக்களின் உடை மற்றும் அணிகலன்கள் பற்றிய விபரங்களைக் கண்டுகொள்ள எமக்கு உதவுபவை இலக்கியங்களும் மிசனரிமாரின் குறிப்புக்களும். அக்காலத்திலே எடுக்கப்பட்ட புகைப்படங்களும் முதியவர்கள் தரும் வாய்வழிச் செய்திகளுமேயாகும். அக்காலத்து உடை மற்றும் அணிகலன் வகைகளை ஆண்களுக்குரியவை பெண்களுக்குரியவை என இரண்டாகப் பகுத்து நோக்கலாம்.

ஆண்களின் உடையும் அணிகலன்களும் யாழ்ப்பாணத்து வேளாளர்களின் உடையைப் பற்றி பல்டேயஸ் பின்வருமாறு குறிப்பிடுவர்.

வேளாளர் சீலையை இடுப்பிற் கட்டிக் கால்களுக்கூடாக இழுத்துச் சொருகிக் கொள்ளுவார்கள் (அதாவது தாறு பாய்ச்சிக் கட்டுதல்) காலில் செருப்புத்தொடுப்பார்கள். மேற்சொல்லிய அரைச்சீலையிலே மடிவிட்டு அதிலே வெற்றிலை பாக்கும் தேவையான போது பாவிப்பதற்குக் கொஞ்சம் கடதாசியும் (ஓலைச் சுவடியாக இருக்கவேண்டும்) வைத்துக்கொள்வார்கள். இடையிலேயே ஒரு வெள்ளி கட்டிய உறைக்குள்ளே ஒரு கத்தி தொங்கவிட்டுக் கொள்வார்கள். (வில்லுக் கத்தியாக இருக்க வேண்டும்.) இதனோடு ஓர் வெள்ளி கட்டிய எழுத்தாணியும் வைத்திருப்பதுண்டு.

பல்டேயஸ் இங்கு வெள்ளாளர்கள் என்று குறிப்பிடுவது சுதேச கிராம அதிகாரிகளை எனக் கருதலாம். வெள்ளாள சமூகத்தினரே யாழ்ப்பாண அரசர் காலம் முதல் கிராமத் தலைமைக்காரர்களாக இருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. பல்டேயஸ் குறிப்பிடும் சேலையிலே மடிவிட்டுக் கட்டும் மரபு மிக அண்மைக் காலம் வரை யாழ்ப்பாணத்திலே காணப்பட்டது.ஆண் பெண் இருபாலரும் மடிவிட்டுக் கட்டி அதிலே தமக்குத் தேவையான பொருட்களைப் (பணம் உட்பட) பத்திரமாக வைத்திருப்பர்.

உடுப்பிலே விடும் மடி பற்றி மரபுத்தொடர்களும் பழமொழிகளும், நாட்டுப்பாடல்களும் யாழ்ப்பாணத்திலே வழங்கி வருவதை இன்று அவதானிக்கலாம்.உதாரணமாக மடியிலே கை வைக்கிறார். மடியிலே கட்டி வளர்த்தல். அடிமடியைத்தேடுதல் மடிப்பிச்சை முதலானவற்றைக் குறிப்பிடலாம்.

பெரும்பாலான ஆண்கள் வேட்டி சால்வை முதலியவற்றையே அணிந்தனர். சால்வையைச் சவுக்கம் என அழைக்கும் வழக்காறும் இருந்தது. வேட்டியிலும் எட்டு முழவேட்டி நான்கு முழவேட்டி என இரண்டு வகை வேட்டிகள் பயன்படுத்தப்பட்டன. பொதுவாகத் தமிழர்களின் பண்பாட்டு அடையாளமாக இவை விழங்கின. உண்பதுநாழி உடுப்பது நான்கு முழம் என்ற நீதிப்பாடல் நாம் அறியாதது அல்ல.

அக்காலத்தில் ஒருவரின் உடையைக்கொண்டு அவரின் சாதி சமூக அந்தஸ்த்தைக் கண்டு கொள்ளலாம். வேட்டியை உடுக்கும் முறையிலும் வேறுபாடுகள் காணப்பட்டன. யாழ்ப்பாணத்திலே தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஆண்கள் சால்வை என்னும் மேலாடையை அணிய அனுமதிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.



ஒல்லாந்தர் காலத்திலே யாழ்ப்பாணத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பிலுள்ளோர் தங்கள் உடைகளில் மாற்றங்களைக் கொண்டுவர முற்பட்டபோது உயர் சாதியினர் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். யாழ்ப்பாணத்திற் கொமாண்டோராகப் பதவி வகித்த சுவாடக்குறூன் வேளாளரல்லாத மற்றைய சாதியினர் சிலருக்கும் உத்தியோகங்களைக் கொடுத்தான். வேறு சாதியினர் உத்தியோக உடை தரிப்பதை வேளாளர் விரும்பவில்லை.

யாழ்ப்பாண வைபவ கௌமுதியில் இடம்பெறும் பின்வரும் பகுதி அக்காலத்தில் யாழ்ப்பாணத்தவரின் உடை பற்றி எழுந்த பிரச்சனையை அறிய உதவுகின்றது. எளிய சாதிகள் தத்தம் உடைநடைகளை மாற்றத்தொடங்கியதைப் பற்றி அவன் (சுவாடக்குறூன்) பின்வருமாறு யாழ்ப்பாண அரசியற் சங்கத்தாருக்கு எழுதியிருக்கின்றான்.

கீழ் சாதிகள் தங்கள் உடை முதலியவைகளைப் பற்றிய ஒழுங்குகளை அனுசரிக்கும்படி செய்ய வேண்டும். இதிற் சில ஒழுங்கீனங்கள் உண்டாகி இருக்கிறதாகக் கேள்வி இவர்கள் சரியான மாதிரிச் சீலை கட்டிக் கொள்கிறார்கள் இல்லை. தலைமயிரை வெட்டாமலும் காதிற் பொன் கம்பிகள் போடாமலும் திரிகிறார்கள் இதனால்இவர்களை யாரென்று தெரியாமற் போகிறதென்றும் இது தங்களுக்கு ஒரு அவமானம் என்றும் சாதியாளரான கொனாறாடர்ஸ் (இவர்கள் மேல் சாதியினர் போலும்) முறைப்படுகிறார்கள் இவ்விடயமாக இலங்கைத் தேசாதிபதியாகிய லோறன்ஸ்பில் கவணரால் 1686 ஆம்ஆண்டு ஆவணி மாதம் 18 திகதி ஓர் பிளக்காற் கட்டளை பிறப்பிக்கப் பட்டது.

சமூக மேலாதிக்கமுடையவர்களே வேட்டி சால்வை தலைப்பாகை (இதில் பல ரகம்) அணிய அனுமதிக்கப்பட்டனர். காலனித்துவ அரசு சுதேசப் பிரபுக்களுக்கு அல்லது முதலியார்களுக்கென வரையறுக்கப்பட்ட சீருடைகளைப் பற்றிய விபரத்தினை உத்தியோகபூர்வமாகவே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

படித்த மத்திய தர வர்க்கத்தினர் வேட்டியுடன் சேட் கோட் முதலியவற்றை அணிந்தனர் படிப்பின் மூலம் தம் அந்தஸ்த்தினை உயர்த்திக் கொண்டவர்கள். காலனித்துவ நிர்வாகப் பணியில் இணைந்த சுதேசிகள் போன்றோர் வேட்டி அல்லது நீளக் காற்சட்டை சேட் கோட் முதலியவற்றுடன் தலைப்பாகையும் அணிந்தனர்.

தொடர்ச்சி 06 ம் பக்கம்...







5ம் பக்கத் தொடர்ச்சி

## மறந்தவையும் மறைந்தவையும்



காலனித்துவ பிரபுத்துவ பாரம்பரியத்திற்கும் சுதேச மேலாண்மைப் பாரம்பரியத்திற்கும் அமைதி காணும் வகையிலும் உடைகள் பயன்படுத் தப்பட்டன.

யாழ்ப்பாணத்துச் சுதேசிகள் மிசனரிமார் கொடுத்த ஆங்கிலக் கல்விப் பாரம்பரியத்தினால் விதேசிகள் ஆவதைப் பற்றி 1847 ஆம் ஆண்டு மானிப்பாயில் வைத்தியப் பணியாற்றிய டாக்டர் கிறீன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

வேட்டி ... காற்சட்டையாகவும் சால்வை...
மேற்சட்டையாகவும் தலைப்பாகை தொப்பியாகவும்
தாவர போசனம் மாமிச போசனமாகவும்
மண்குடிசை.. கல்வீடாகவும் மாற்றம் அடைகின்றன
என்றே எண்ணுகின்றேன். கிறிஸ்த்தவர்கள்
ஆகாமல் தேசியத்தை இழப்பவர்களையே நான்
காண்கின்றேன்.

டாக்டர் கிறீனின் கவலையெல்லாம் கிறிஸ்த்த வத்தை உண்மையாக உள்வாங்காமல் வெளித தோற்றத்திலே ஐரோப்பிய பண்பாட்டுக்கு மாறுகிறார்கள் என்பதாகவே அமைகின்றது. ஆனால் இக்கூற்றின் உள்ளீடாக அமைவது யாழ்ப்பாணச் சுதேசிகளின் பண்பாட்டு அடையாள மாக வேட்டி சால்வை தலைப்பாகை முதலிய னவே கருதப்பட்டன என்பதாகும்.

### அன்று யாழ்ப்பாணத்தில் குடுமியை அகற்றும் சங்கம் ஒன்று இருந்தது!

அக்காலத்தில் யாழ்ப்பாணத்திலே ஆண்களும் கொண்டை (குடுமி) வைத்திருந்தனர். மிக அண்மைக்காலம் வரை கிராமப்புறங்களிலே கொண்டை கட்டிய முதியவர்களைக் காணக் கூடியதாக இருந்தது. அரச உத்தியோகத் தவர்கள் அதிகாரிகள் கொண்டை கட்டியிருப் பதைக் காலனித்துவ அரசு விரும்பவில்லை.

19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆண்கள் கொண்டை அல்லது குடுமியை அகற்றும் சங்கம் ஒன்று நிறுவிச்செயற்பட்டார்கள். என்பது சுவாரசியமான செய்தியாகும். யாழ்ப்பாணத்திலே (இலங்கையிலும் தான்) புகைப்படக்கலையை முதன் முதலாக அறிமுகப்படுத்திய கென்றி மாட்டின் என்பவரே இச்சங்கத்தின் தலைவராக இருந்தார். என்பதுவும் குறிப்பிடத்தக்கது. கென்றி மாட்டினின் வரலாற்றை எழுதியவர் அவர் குடுமி அகற்றும் கழகத்தினை நிறுவியமை பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார்.

ஐம்பத் தெட்டி லழகிய நகரிடை (1858)
பம்மிய ஆடவர் பலரையு மழைத்துச்
சபையொன்று கூட்டிச் சான்றோனாமவர்
ஆண்பாலாவுகள் அழகுறு பெண்கள்
போல்கொண்டை வளர்த்துக் குடுமி கட்டுதல்
அழகல வென்று ஐரோப்பியர் போல்
கிறில் விடும் வழக்கைக் கேடற வைத்தனர்.

ஐரோப்பியரின் நடையுடைகளை யாழ்ப்பாணத் தவர்கள் பிரக்ஞை பூர்வமாகவே பின்பற்றினர். என்பதற்கு மேற்காட்டிய பகுதி சான்றாக அமைகின்றது.

கிறிஸ்த்தவத்தை தழுவியவர்கள் சுதேசிய விதேசிய உடைகளைக் கலந்து பயன்படுத்தினர். தமது பாரம்பரியப் பண்பாட்டு அடையாளங்கள் சிலவற்றை இழக்க விரும்பாத மனநிலையிலேயே அவர்கள் இருந்தார்கள். என்பதற்குச் சான்றுகள் பலவுள வகைமாதிரிக்கு வண. முருகப்பா சதாசிவம்(Rev.ThomasPeterHunt) என்பவரின் வாழ்க்கை வரலாற்று நூலில் இடம்பெறுவதைச் சுட்டிக்காட்டலாம்.

அவருடைய (Hunt) உடை எப்போதும் ஒரே தன்மையதே. கொய்யப்பட்ட ஒற்றைப்பட்டு வேட்டியை உடுத்து தலையிற் பழைய காட் லேஞ்சி தலைப்பாகையாகக் கட்டி பொத்தான் வெளியே தோன்றும் மூடுசட்டை போட்டுச் சாதாரண செருப்போடு வெள்ளை உறைபரவிய கறுப்புக் குடையுமே இவரது சபை சந்திக்குரிய உடுப்பு. தூதுவளங்காய்ப் பரிமாணமான கடுக்கன் ஒருசோடி இவர் காதில் மரண பரியந்தம் தொங்கியது.

யாழ்ப்பாணத்து ஆடவர்களிற் பலர் குடுமியுடனும் கடுக்கனுடனும் இருந்தார்கள். என்பதை இன்றை தயைமுறையினர் அறியமாட்டார்கள். இந்த மரபு இப்போது சற்று வேறுபட்ட கோலத்திற் புலம்பெயர் இளைஞர் களிடையே காணப்படுகின்மை குறிப்பிடத் தக்கது. 19 ஆம் நூற்றாண்டில் ஆண்கள் கடுக்கன் அணிந்தமை அவர்களது பொருளாதாரச் சிறப்பின் அடையாளமாகவும் அமைந்தது எனலாம். எல்லா ஆண்களும் கடுக்கன் அணிந்தார்கள் என்று கூறமுடியாது. யாழ்ப்பாணச் சமூகத்திலே பொன் சேமிப்பின் அடையாளமா கவும் விளங்கியது. பணத்தேவை ஏற்படும் பொழுது தம்மிடமுள்ள பொன் ஆபரணங்களை விற்றோ அல்லது அடகு வைத்தோ பணம் பெறும் வழக்கமும் இருந்தது. உதாரணமாக முருகப்பா என்பவரின் வாழ்க்கைச் சம்பவம் ஒன்றைச் சுட்டிக்காட்டலாம்.

முருகப்பா பிள்ளைகளின் கல்விப் பயிற்சியின் வாஞ்சையினாலும் பொருட் கஸ்ரத்தினாலும் தான் அணிந்திருந்த கடுக்கன்களைக் கழற்றிக விற்று ஒரு பாரத ஏடு வாங்கிப் பிள்ளைகள் படிப்பதற்காகக் கொடுத்தார்.

இம்மேற்கோளில் இரண்ட உண்மைகள் பொதிந்து கிடப்பதை அவதானிக்க முடிகிறது. ஒன்று யாழ்ப்பாணப் பிரதேசத்திலே பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்விக்காக வாழ்வை அர்ப்பணித்தனர் என்பது.

இரண்டு ஒரு சோடி கடுக்கன்களின் பெறுமதி ஒரு மகாபாரத ஏட்டிற்கு இருந்தது என்பது யாழ்ப்பாண மக்கள் பொன் விலை கொடுத்தே கல்வியைப் பெற்றனர் என்பதற்கு இககூற்று சான்றாகும்.

ஆண்கள் அரைஞாண் கொடி அல்லது அரைஞாண் கறிறு கட்டும் வழக்காறும் நம்மிடையே இருந்தது. வசதிபடைத்தவர்கள் வெள்ளியினாலான அரைஞான் கொடியினைக் கட்டுவர்.

ஆண்கள் இப்போது அரைஞாண் கொடி கட்டும் பழக்கம் முற்றாகவே அருகிவிட்டது. எனலாம். ஆனால் இன்றும் குழந்தைகளுக்கு அரைஞாண் சங்கிலி பஞ்சாயிதமும் சங்கிலியும் முதாலான அணிகலன்களை அணிவிப்பதைக் காணலாம்.

தைமாத இதழில் தொடரும்...

## நன்றி நவிலல்



பவானந் – சுஜீத்தா
புதுமணத்தம்பதிகள்

கடந்த 25.10.2015 ஞாயிற்றுக்கிழமை யேர்மனியில் டோட்மூண்ட் நகரில் நடைபெற்ற எங்கள் (பவானந் சிவகரன் - சுஜீத்தா. ஜெகதீஸ்வரன்) திருமணவைவபத்தில் கலந்து சிறப்பித்த உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் , வாழ்த்துக்கள் அனுப்பிய அன்பு நெஞ்சங்களுக்கும் எங்கள் இதயம் கனிந்த நன்றிகள்.
அன்புடன்
பவானந் – சுஜீத்தா



# அடுத்த அம்பிளில் (சிக்னலில்) என்னை யார் என்று யாருக்குத் தெரியும்?



வேலை முடிந்து வெளி யேறும் வேளை. ஒருவர் முந்தி ஒருவர் என்று காரை எடுக்க ஓடுவார்கள்.

ஏதோ நிமிடக் கணக்கில் வாழ்வை இழந்துவிடுவோம் என்ற பயம் பலருக்கு. உண்மையில் அப்படி ஓடி விபத்துக்குளாகி வாழ்வை இழந்தவர்கள்தான் பலர்.











2000 மேற்பட்ட தொழிலாளர் 50 வது பிறந்த தினத்திற்கு வாழ்துக்கள் எழுதிய புத்தகத்தின் முகப்பு கறுப்பு வெள்ளைப்படமாக வரைந்தது

ஒரு நாள் வேலை முடிந்ததும் வாசலில் வந்து பஸ்சுக்காக காத்து நிற்கின்றேன். முன்னே உள்ள சிக்கல் லைட் பழுதுகாரணமாக லைட் மஞ்சளில் விட்டு விட்டு எரிந்து கொண்டு இருந்தது. அதன் கருத்து தெரு விதிகளுக்கு அமைய பார்த்து போகும்படி, அதாவது யேர்மனியில் இடது பக்கம் வருபவர்களை விட்டுத்தான். வலதுபக்கம் வருபவர்கள் போகவேண்டும்.
என்னுடன் வேலைசெய்யும் எம்நாட்டவர் அல்ல பிறநாட்டவர் வேகமாக வந்தார். அவருக்கு முன் கீழே இருந்து ஒரு பென்ஸ்கார் மேலே நோக்கி வந்தது. உடன் மற்றவர் அந்த பென்ஸ் காருக்கு முன்னுரிமை கொடுத்து லைட்டை அடித்து போகும்படி காட்டினார்.
உண்மையில் அவருக்குத்தான் முன்னுரிமை பென்ஸ் காருக்கு அல்ல. இருந்தாலும் தன் அவசரத்திலும் தனது உரிமையை விட்டுக்கொடுத்தார். பென்ஸ்காரில் வந்தது யாரும் அல்ல அந்தப்பெரிய நிறுவனத்தில் சொந்தக் காரார். அதனை அறிந்துதான் அவர் தனது முதலாளிக்கு வழிவிட்டார்.
ஆனால் நடந்தது வேறு.

தொழிலதிபர் காரை நிறுத்தும் எச்சரிக்கை லைட்டைப் போட்டுவிட்டு இறங்கி வந்து. நன்றி! ஆனால் இந்த சிக்கனல் லைட்டுக்கு அடுத்த லைட்டில் யார் எனக்கு விட்டுத்தரப்போகிறார்கள். நான் இந்த இடத்திற்கு அப்பால் மற்றவர்களுக்கு உன்னைப்போல் ஒரு சாரதியே. எனவே தெருவிதிப்படி பயணம் செய்வோம் என்று கூறி தான் நின்றுகொண்டு, முன்னுரிமை உள்ள தொளிலாளியின் வாகனத்தை முன் செல்லவிட்டு அவர் பின் சென்றார்.

பார்த்துகொண்டு இருந்த எனக்கு எமது நாடாக இருந்தால்???




1994 ஆம் ஆண்டு நிறுவன அதிபரது 50 வது பிறந்த தினத்தில் வழங்ப்பட்ட சிற்பத்துடன்..

அந்த அளவிற்கு எளிமையாகவும், நேர்மையாகவும் தற்பெருமை அற்றவராகவும் உலகெங்கும் 17,000 தொளிலாளர் வேலை செய்யும் வாகனங்களின் ( BMW, Benz,Audi) மின்சார உபகரணங்கள் செய்யும் (Kostal) நிறுவனத்தின் அதிபராகவும் சொந்தக்காராகவும் இருந்த கெல்முட் கொஸ்ரால் கடந்த 06.11.2015 இறைவனடி சேர்ந்தர்.

அவரது 50வது பிறந்த தினத்திற்கு 80 சென்.மீ உயரமான வாகன உதிரிப்பாகங்களால் ஆன சிலையும், (இன்றும் நிறுவனத்தில் கண்ணாடிப் பெட்டிக்குள் நிமிர்ந்து நிற் கின்றது.) வாழத்துப் புத்தகத்தின் அட்டையை நாம் வேலை செய்யும் நிறுவனம் தயாரிக்கும் பாகங்களைவத்து வரைந்தும், அவருக்கு வழங்கும் சந்தர்பம் எனக்கு கிடைத்தது மகிழ்வான ஒன்று.
அவரது இறுதிக்கால இலட்சியங்களில் ஒன்று சிறந்த விஞ்ஞான ஆராச்சிமையத்தினைக்கட்டி (Educational and research institution ) எழுப்புவதாகும் அதன் படி யேர்மனியில் வடமாநிலத்தின் திட்டம் ஒன்றுக்கு கரம் கொடுத்தார். அதற்கான அத்திவாரம்(18.06.2013) இடும் வைபவத்திலும் கலந்துகொண்டு தனது பங்களிப்பினையம் செய்தார்.
அங்கு 75 மீற்றர் உயரமான ஒரு கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. அது எதிர்காலத்தில் நமது நகரத்தின் Land Mark ஆகும் தகுதிபெறும். என்றும். நம்பினார். அவரது மரணத்தின்போது அவருக்கு பிடித்த படிப்புக்கும் ஆய்வுக்கும் உதவும் வண்ணம் அவர்விரும்பிய தனது நகர ஆய்வுமையத்திற்கு (Science-Centers Phänomenta. ) உதவுங்கள் என்ற வேண்டுதல் விடுக்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

மு.க.சு.சிவகுமாரன்.






2012 ஆம் ஆண்டு Kostal நிறுவனத்தின் நூற்றாண்டு விழாவில் தந்தையும் மகனும்.

நம்பிக்கையும் நாணயமும்
சலுகையும் ஒரே இடத்தில்




அனைவருக்கும் எங்கள்
இனிய நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

BCN·TRAVELS

Consulting Network
Travels·Business·Worldwide

EMAIL:-bcntravels@hotmail.de
இலங்கை இந்தியா கனடா சிங்கப்பூர் அவுஸ்ரேலியா ஐரோப்பிய நாடுகள் உட்பட
அனைத்து நாடுகளுக்கும் சலுகை விலையில் விமானச்சிட்டைகளைப் பெற்றுத்தருகின்றோம்.

2016 கோடைகால விடுமுறைக்குரிய விமானச்சிட்டைகள் முற்பதிவு ஆரம்பமாகி விட்டது. உலகின் முன்னணி விமான நிறுவனங்களை ஒன்றிணைத்து சலுகை விலையில் உத்தரவாதமான சேவையினை வழங்குகின்றோம்

எமது துரித பணமாற்றுச்சேவை
இலங்கை - இந்தியா

BCN Travels// Consulting Network (TBW) UG Inh.Rasan.Sivalingam
bcntravels@hotmail.de,consultingnetwork@hotmail.de

Offnungszeiten:
Mo-Sa 90:00-20:00 Uhr

Rheinische str-72,44137 Dortmund Germany
Tel: 0231- 108 763 61, 0231 584 407 63 Fax: 0231 108 763 62 Mobile:0163- 871 43 69



# ஒளியின் விழவு இருளின் முழவு.

"ஒளி தோன்றுக" என்பது தான் பைபிளில் குறிப்பிடப்பட்டுள்ள கடவுளின் முதல் பேச்சு. ஆழத்தின் மீது பரவியிருந்த இருளை கடவுள் ஒளியின் துணையினால் விரட்டுகிறார். வெறுமையாய் கிடத்த பூமி இப்போது வெளிச்சத்தின் விழுதுகளைப் பற்றிக் கொண்டு ஊஞ்சலாடுகிறது

வரலாற்றில் இருள் என்பது தோல்வியின் அடையாளம். "வரலாற்றின் கருப்புப் பக்கங்கள்" என்றால், அந்த காலகட்டம் தோல்வியின் காலம் என்று பொருள். அந்தக் காலத்தில் வாழ்க்கை இனிமையாக இல்லை என்று பொருள். அந்தக் காலகட்டத்தில் பஞ்சமோ, பட்டினியோ தலைவிரித்து ஆடியிருக்கலாம் என்று பொருள்.

உலகத்தின் துவக்கம் முதல் இன்று வரை இருளுக்கும், வெளிச்சத்துக்கும் தொடர் போராட்டம் நடந்து கொண்டே இருக்கிறது. சதுரங்க விளையாட்டின் இரு காய்கள் போல அவை எதிரும் புதிருமாய் மாறி மாறி வெட்டிக்கொண்டிருக்கின்றன.

நோய்களின் காலத்தை இருளின் காலம் என்கிறோம். வலிகளின் காலத்தை இருட்டின் காலம் என்கிறோம். சோதனைகளின் காலத்தை இருளின் காலம் என்கிறோம். சிலருடைய வாழ்க்கை முழுவதுமே இத்தகைய இருள் சூழ்ந்து நிற்பதாகச் சொல்வார்கள்.

தொட்டதெல்லாம் தோல்வி, எங்கும் வெற்றி யில்லை. பட்ட காலிலே படும் என்பது போல, இருளைத் தாண்டினால் காரிருள் எனும் நிலமை பலருடைய வாழ்க்கையை ஆட்டிப் படைக்கிறது. அவர்கள் இருளோடு போராடிக் கொண்டே இருக்கிறார். இருளை விரட்ட பல்வேறு வழிகளை நாடுகிறார்கள்.

இருளை விலக்க ஒரே ஒரு வழி தான் உண்டு. ஒரு வெளிச்சத்தை ஏற்றுதல் ! ஒரு வெளிச்சப்புள்ளி இருளை விலக்கி வைக்கும் வலிமை கொண்டது. இருளை இறுக்கி அடைத்திருக்கும் ஒரு அறையில் ஒரு மின்விளக்கு எரியும் போது அந்த இருளெல்லாம் இருந்த இடம் தெரியாமல் ஓடிப் போய்விடுகிறது.

"காரிருளில் நடந்துவந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள் சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர்மேல் சுடர் ஒளி உதித்துள்ளது (எசாயா 9 : 2 )" எனும் இறைவாக்கு ஒளியின் நாயகனாம் இறைமகன் இயேசுவின் வெளிச்ச வரவை வார்த்தைகளால் குறிப்பிடுகிறது.இயேசு எனும் ஒளி இருளை விலக்குவதற்காக வந்த ஒளி. பாவம் எனும் இருளையும், அதன் ஆட்சியையும் இயேசுவின் வருகை வெளிச்சம்போட்டுக் காட்டியது. அந்த இருளை சிலுவையில் வெற்றி கொண்டது இயேசு எனும் ஒளி. இயேசுவின் வருகை இரண்டு நோக்கங்கள் கொண்டது. அந்த இரண்டையும் சரியாகப் புரிவதில் தான் கிறிஸ்மஸ் அர்த்தப்படும்.

ஒன்று, இயேசு ஒளியாக வந்து நமது பாவங்களுக்காக மரித்தார். அதன் மூலம் இருளில் இருக்கும் நமக்கு மீட்பின் ஒளியைக் காட்டினார். பலி இன்றி மீட்பு இல்லை.

இரண்டாவது, இருளின் பாதையில் நடக்கும் நமக்காக பூமியில் வந்து முன்னுதாரணம் ஆனார். ஒளியின் வாழ்க்கையை எப்படி ஒரு மனிதன் வாழமுடியும் என்பதை தனது வாழ்க்கையினால் வாழ்ந்து காட்டினார். இந்த இரண்டும் ஒன்றாய் பின்னிப் பிணைகையில் கிறிஸ்துவின் வரவின் முழுமை நமக்குப் புரிகிறது.

ஒன்றை விட்டு விட்டு இன்னொன்றை மட்டும் பற்றிக் கொள்ளும் போது , ஒருபக்கம் மட்டும் அச்சிடப்பட்ட ரூபாய் நோட்டைப் போல முழுமை யடையாமல், முழு மதிப்பைப் பெற்றுக் கொள்ளாமல் போய்விடுகிறோம்.

ஒளிக்கு ஒரு வலிமை உண்டு. அது எத்தனை மென்மையாய் இருந்தாலும், கும்மிருட்டையும் விரட்டி விடும். இருளுக்கு ஒரு பலவீனம் உண்டு அது எவ்வளவு தான் அடத்தியாய் இருந்தாலும் ஒரு ஒளியை அணைத்து விடும் வலிமை இருளுக்கு எக்காலத்திலும் இருப்பதே இல்லை. இருள், தோல்வியின் அடையாளம். ஒளி, தோல்வியை மேற்கொள்வதன் அடையாளம்.

"அந்த ஒளி இருளில் ஒளிர்ந்தது

இருள் அதன்மேல் வெற்றி கொள்ளவில்லை" (யோவான் 1 :5 ) எனும் வார்த்தைகள் நமக்கு தெம்பூட்டுகின்றன. இருளை விலக்கத் தேவை நமக்கு ஒரு ஒளி மட்டுமே எனும் உண்மையே நமக்கு மிகப்பெரிய உற்சாகத்தைத் தரவல்லது.

மீண்டும் மீண்டும் பாவத்தில் விழுகிறோம். துணிகர பாவங்களைச் செய்கிறோம். கோபத்தை , இச்சைகளை , எரிச்சலை , பொறமையை விட்டு வெளியே வர முடியவில்லை. நோய், வறுமை எனும் உலகக் கவலைகளும் வாட்டுகின்றன. இருளிலேயே இருக்கிறோம்? என்ன வழி ? ஒளி என்பது யாது ?

"உலகின் ஒளி நானே என்னைப் பின்தொடர்பவர் இருளில் நடக்கமாட்டார் வாழ்வுக்கு வழி காட்டும் ஒளியைக் கொண்டிருப்பார்" (யோவான் 8 :12 ) என்கிறார் இயேசு.

**என்னோட கஷ்டம் என்னன்னு எனக்கு தான் தெரியும்"**

"என்னோட கஷ்டம் என்னன்னு எனக்கு தான் தெரியும்" என நாம் சொல்வதுண்டு. அதற்குப் பதிலளிக்கும் வகையில் தான் இயேசுவின் வருகை இருந்தது. "அந்த கஷ்டமான வாழ்க்கையை நானும் வாழ்கிறேன். ஆயினும் பாவத்தை மேற்கொள்ளும் வாழ்க்கையை வாழ்கிறேன்" என்று வாழ்ந்து காட்டினார்.

"சாவின்மேல் ஆற்றல் கொண்டிருந்த அலகையைச் சாவின் வழியாகவே அழித்து விட்டார்" ( எபிரேயர் 2 ' 14 ). இயேசுவின் வருகை மரணத்துக்கான முயற்சி மட்டுமல்ல, வாழ்வுக்கான பயிற்சியும் கூட. அவருடைய வாழ்க்கை நமக்கு அகராதியாய் மாறிவிட்டது. கடவுள் மனிதர் மேல் எவ்வளவு அன்பு கொண்டிருக்கிறார் என்பதைக் காட்டவே அவர் மனித உரு எடுத்தார் எனலாம்.

அலகையை அதாவது சாத்தானை இயேசு சிலுவையில் அழித்துவிட்டது தான், இயேசு எனும் ஒளியோடு இருக்கும் போது நம்மை விட்டு சாத்தான் விலகி ஓடக் காரணம்.

கிறிஸ்மஸ் விழா ஒளியின் விழா. கிறிஸ்மஸ் விழாவை அதன் அர்த்தத்தோடு கொண்டாடுவோம்.

நமது வாழ்க்கையில் என்னென்ன இருள் இருக்கிறது என்பதை கண்டுகொள்வோம். அந்த இருளின் அறைகளில் ஒளியேற்ற இறைமகன் இயேசுவை இதயத்திற்குள் அழைப்போம். "கடவுள் ஒளியையும் இருளையும் வெவ்வேறாகப் பிரித்தார்" (ஆதி 1 : 4 ) காரணம் இருளும் ஒளியும் ஒரே இடத்தில் வசிக்க முடியாது. பாவமும் பரிசுத்தமும் ஒரே இதயத்தில் வசிக்க முடியாது. இருள் நம் வாழ்வில் இருக்கிறது என்பதை அறிவதும், அந்த இருளை அகற்ற விரும்புவதும் முதல் தேவை.

ஒளியான வாழ்க்கை என்பது, "இறைவனுக்கு ஏற்புடைய வாழ்க்கை வாழ்வதாகும்". " நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது" எனும் (2 கொரி 6 :14 ) வசனம் ஒளியான வாழ்க்கை என்பது நீதியான வாழ்க்கை என விளக்குகிறது. வாழ்க்கையில் நீதியை செயல்படுத்த முடிவெடுப்பது இரண்டாவது தேவை.

"ஒரு காலத்தில் இருளாய் இருந்த நீங்கள் இப்போது ஆண்டவரோடு இணைந்து ஒளியாய் இருக்கிறீர்கள். ஆகவே ஒளி பெற்ற மக்களாக வாழுங்கள். ஏனெனில், ஒளியே எல்லா நன்மையையும் நீதியையும் உண்மையையும் விளைவிக்கிறது ( எபே 5:8,9 )" எனும் வசனத்தின்படி வாழ்வது மூன்றாவது தேவை.

இந்த கிறிஸ்மஸ் காலம் நமது வாழ்க்கை யிலிருக்கும் இருளை அகற்றும் காலமாய் மாறட்டும். அப்போது தான் நமது ஒளி மனிதர் மேல் ஒளிரும். இறைவனை இதயத்தில் ஏற்றி, செயல்களை செப்பனிடுவோம். கரப்பான்பூச்சி யானது லைட்டைப் போட்டதும் ஓடி ஒளிகிறது. வெளிச்சம் அதற்கு எரிச்சல். அப்படியே தீயவர்களும் இருக்கிறார்கள். விட்டில் பூச்சியானது வெளிச்சத்தைக் கண்டதும் எங்கிருந்தோ ஓடி வந்து அதனோடு உறவாடுகிறது. வெளிச்சம் அதன் பிரியம்.

" ஒளி உலகிற்கு வந்திருந்தும் தம் செயல்கள் தீயனவாய் இருந்ததால் மனிதர் ஒளியைவிட இருளையே விரும்பினர். (யோவான் 3 : 19 ). நமது வாழ்க்கை, வெளிச்சத்தைத் தேடும் விட்டில் பூச்சிகளின் வாழ்க்கையாய் இருக்கட்டும். இருட்டுக்குள் பதுங்கும் கரப்பான் பூச்சிகளாய் இருக்கவேண்டாம்.

ஒளி மீட்பின் அடையாளம்.
ஒளி தீர்ப்பின் அடையாளம்.
ஒளியோடு வாழ்வோம்
ஒளியாமல் வாழ்வோம்.

அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு நல்வாழ்த்துகள்.


**சேவியர்**




# காதுக் குடுமி அகற்றுதல் எப்பொழுது எவ்வாறு









**டாக்டர் எம்.கே.முருகானந்தன்**
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
**குடும்பவைத்தியர்**

கண்களிலிருந்து நீர் வழிய, வேதனையில் முகம் சோர்ந்து கிடக்க காதைப் பொத்திக் கொண்டு வந்தான் பையன்.

"குளிச்சுப் போட்டு வந்தவனின்ரை காதுக் குடுமியை எடுப்பம் என்டு இயர் பட்சை வைத்தபோது ஆட்டிவிட்டான். குத்திப் போட்டுது போலக் கிடக்கு" என்றாள் அம்மா.
பையனின் காதைப் பரிசோதித்தேன்.
காதைச் சுத்தம் செய்ய வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் செய்தது வன்முறைபோல் ஆகிவிட்டது.

காதுக் குடுமியை மட்டுமின்றி, குளிக்கும்போதும் தலை முழுகும் போதும் காதிற்குள் போன நீரையும் எடுக்க வேண்டும் என்றெண்ணி, காதைக் கிண்ட முனையும் "18ம் நூற்றாண்டு தாய் தந்தையார்கள்" இன்றும் எமது சமூகத்தில் இருக்கிறார்கள்.
காதிற்குள் போன நீர் தானாகவே வெளியே வந்துவிடும். அல்லது சற்று நேரம் செல்ல தானகவே உலர்ந்துவிடும் என்பதை இந்த விஞ்ஞான யுகத்திலும் இவர்கள் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

**காதுக்குடுமி**

எமது காதிலுள்ள சுரப்பிகளால் காதுக்குடுமி சுரக்கிறது. தூசி, மற்றும் சிறு அந்நியப் பொருட்கள் காதினுள் செல்லாது தடுப்பதற்கானது இது என நம்பப்படுகிறது. தொற்று நோய்கள் காதுச் சருமத்தில் ஏற்படாமல் காக்கவும் செய்கிறது. இது பொதுவாக காய்ந்து உதிர்ந்து தானாகவே வெளியேறிவிடும்.

எல்லோருக்கும்தான் காதில் இவ்வாறு சுரக்கிறது. ஆனால் ஒரு சிலருக்கு மாத்திரம் அது காய்ந்து கட்டியாகி இறுகிவிடுகிறது.

**இதற்குக் காரணங்கள் சில.**

சிலரது காதின் சருமம் சொர சொரப்பாக இருந்து அதிகம் உதிர்ந்து குடுமியுடன் சேர்ந்து இறுகக் கூடும். அல்லது சிலரது காதின் அமைப்பு வளைவானதாக இருந்தால் இது வெளியேறுவது தடைப்படக் கூடும்.
சிலர் பட்ஸ் போட்டு எடுக்க முயலும்போது குடுமி வெளியே வருவதற்குப் பதிலாக மேலும் உட்புறமாகத் தள்ளுப்படுவதும் உண்டு. காலப்போக்கில் இவை சேர்ந்து இறுகிவிடலாம்.

சுமார் 100 போரில் 6 பேருக்கு காதில் குடுமி இறுகி அடைத்துவிடுவதாகத் தரவுகள் சொல்கின்றன. குச்சி, சட்டைப் பின், காது கிண்டி, பஞ்சுத் துண்டு எனப் பலவற்றைத் தேவையின்றி உபயோகித்து ஆபத்தை வாங்குபவர்கள் பலர். காதுக் குடுமிப் பிரச்சனை, காதுவலி, காதில் கிருமித் தொற்று, சீழ் வடிதல் போன்ற பிரச்சனைகளோடு வருபவர்களில் பலர் இவற்றைப் பயன்படுத்தி காதைக் கிண்டுபவர்களாகவே இருக்கிறார்கள்.

**மருத்துவரைக் காண வேண்டுமா?**

காதிற்குள் குடுமி இருந்தாலும் பலருக்கும் எந்தவித இடைஞ்சலையும் ஏற்படுத்துவதில்லை. இருந்தபோதும் அது அதிகமாக இருந்தால், அல்லது காய்ந்து இறுகி செவிக்குழாயை அடைத்திருந்தால் பல்வேறு அறிகுறிகள் ஏற்படக் கூடும். உதாரணமாக காது அடைத்துக் கிடப்பது போன்ற உணர்வு ஏற்படக் கூடும். சிலருக்கு காது கேட்பது மந்தமாகவும் கூடும். ஒரு சிலருக்கு தலைச் சுற்று ஏற்படலாம். இன்னும் சிலருக்கு காதினுள் கிணு கிணுவென ஏதாவது சத்தம் ஏற்படலாம். காதில் அரிப்பு ஏற்படவும் வாயப்புண்டு. இருந்தபோதும் சாதாரண காது அடைப்பு இருந்தால் மருத்துவரிடம் உடனடியயாக ஓட வேண்டியதில்லை. ஆயினும் கீழ் கண்ட அறிகுறிகள் இருந்தால் தாமதிக்காது மருத்துவரை நாடுங்கள்.

கடுமையான தலைச்சுற்று, உங்களைச் சூழ இருப்பவை கடுமையாகச் சுழல்வது போன்ற உணர்வு ஏற்பட்டால். வழமைபோல நடக்க முடியாது சமநிலை பாதிபுற்றால் காய்ச்சலும், கடுமையான வாந்தியும் சேர்ந்து வந்தால். திடீரென காது கேட்காமல் அடைத்துக் கொண்டால்

அக்கறை எடுத்து மருத்துவரைக் காண வேண்டும்.

நீங்கள் சொல்வதைக் கேட்டும், காதை பளிச்சிடும் வெளிச்சததிலும், அதற்குரிய கருவிகள் (otoscope) கொண்டும் பரிசோதித்து உங்கள் காதில் உள்ள பிரச்சனை காதுக்குடுமிதானா அல்லது கிருமித் தொற்று, அந்நியப் பொருட்களா அல்லது வேறு நோய்களா என்று கண்டறிவார்.

**காதுக் குடுமியை அகற்றல்**

தொடர்ச்சி 12ம் பக்கம்...



T.T.S.Brothers GmbH&Co.KG

உங்கள் வீட்டு தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள்-ஆடை அணிகலன்கள் மற்றும் உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவது முதல் அனைத்து தேவைகளுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

உங்கள் உறவுகளுக்கு
துரிதமாகப் பணம் அனுப்ப நாடுங்கள்!
0.01€ இருந்து 500€ வரை அனுப்ப 8.90 € மட்டுமே!
500€ இருந்து 1.500€ வரை அனுப்ப 15.00€ மட்டுமே!
MoneyGram Transfert d'argent

RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288

Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829

Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184

Johannes Str.35
53225 Bonn Beuel
Tel. 0228 40377846

Graphic design Vettimaniy Ltd

# காதோடு காதாக

**கலைக்கதிர் கதிர் துரைசிங்கம்**

1. செல்லர்: பழங்காலத்து திரைப்படங்களுக்கும் இப்பத்தைய திரைப்படங்களுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?
சோமர்: பெயரில இருந்து வித்தியாசம் கண்டு பிடிக்கலாம். மூன்றாக பிரிக்கிறன் பார்.

**திருநீலகண்டர் -திருவிளையாடல் . இப்போ -நானும் ரவுடிதான்**
**கண்ணகி - பெண்ணின் பெருமை. இப்போ வேதாளம்**

| 1950க்கு முன் | 1950க்கு பின் | 2000க்கு பின் |
|---|---|---|
| திருநீலகண்டர் | திருவிளையாடல் | நானும் ரவுடிதான் |
| மீரா | சரஸ்வதி சபதம் | பிசாசு |
| சிவகவி | திருவருட்செல்வர் | பரதேசி |
| மங்கையற்கரசி | மங்கையர்திலகம் | கிருமி |
| கீசகவதம் | ஆதிபராசக்தி | புலி |
| அருணகிரிநாதர் | உயர்ந்தமனிதன் | கொம்பன் |
| நந்தனார் | உத்தமபுத்திரன் | சிங்கம் |
| ஸ்ரீவள்ளி | குணசுந்தரி | வாலு |
| காரைக்கால்அம்மையார் | மணாளனே மங்கையின் | |
| | - பாக்கியம் | எலி |
| கண்ணகி | பெண்ணின்பெருமை | வேதாளம் |
| ஹரிதாஸ் | கந்தன் கருணை | புறம்போக்கு |
| அரிச்சந்திரா | மகாகவிகாளிதாஸ் | சிறுத்தை |




செல்லர்: தெய்வீகப் படங்களிலிருந்து நற்குணங்களைப் பிரதிபலிக்கும் படங்களுக்கு மாறி இப்ப கெட்ட குணங்களை பிரதிபலிப்பனவும் மிருகங்களாகவும் மாறிப்போச்சு.

2. செல்லர்: இப்ப விழாக்களுக்குப் போனால் நிகழ்ச்சிகளைப் பார்க்க முடியாமல் கமராக்காரர் மறைக்கினம்.
சோமர்: தூரத்தில் இருந்து எவரையும் மறைக்காமல் எடுக்கக்கூடிய நவீன கமராக்களை நிழற்பட நிபுணர்கள் பாவிக்கிறார்கள். அதே போல ஒளிப்பட நிபுணர்களும் எவரையும் மறைக்காமல் கிறேன் பாவித்து ஒளிப்படங்களை எடுக்கிறார்கள்.
செல்லர்: அவங்கள் இப்ப நல்ல திருத்தம் காணும். இந்த இணையத்தளக்காரர், டொட்கொம்காரர், செல்பிக்காரர் இருந்த இடத்திலிருந்து கமராவையும் ஐபாட்டையும் செல்போனையும் நீட்டிக்கொண்டு படம் எடுக்கிறது பக்கதிலிருப்பவர்களுக்கும் பின்னால் இருப்பவர்களுக்கும் இடஞ்சலாய் இருக்கு.
சோமர்: சோமர் இடஞ்சலிலும் இன்பமும் நன்மையும் இருக்கு. நிபுணர்களின் படம் வர பல மாதங்கள் எடுக்கும். வந்தாலும் நாங்கள் பார்க்க முடியாது.

ஆனால் டொட்கொம், செல்பிப்படங்கள் இரவோடு இரவாய் இணையத்தளம் மூலமும், முகப்புத்தகம் மூலமும் உலகெங்கும் போய்சேர்ந்திடும்.

செல்லர்: அங்கைதான் பிரச்சனை. நாங்கள் எப்ப, எங்க போனது, என்ன செய்தது, ஆரோட இருந்தது என்ர எல்லா விபரமும் எல்லாருக்கும் தெரிஞ்செல்லோ போகும்.









# இ.போ.சா வில் தமிழ் சாகிறது!

**வடபகுதி இலங்கைப் போக்குவரத்துச் சபையினரின் அசமந்தப்போக்கு ஏன்?..**

வ.சிவராசா யேர்மனி











17 வருடங்களின்பின்பு தாயகத்தைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்று இவ்வருடம் ஐப்பசிமாதம் இலங்கையின் பல பாகங்களையும் சென்று சுற்றிப் பார்க்கும் ஒரு அரிய வாய்ப்பு கிடைத்ததையிட்டுப் பெருமகிழ்வு கொள்கிறேன்.. பிறந்த நாடும் பெற்றதாயும் என்றும் நனிசிறந்தவைதானே.

நான் மூன்று வாரங்களில் இலங்கையின் வடக்கு கிழக்குப் பிரதேசங்களுக்குப் பிரயாணங்களை மேற்கொள்கையில் இலங்கைப் போக்குவரத்துப் சபையின் பேரூந்து வண்டிகளிலேயே பிரயாணங்களை மேற்கொண்டிருந்தேன். யாழ் பஸ் நிலையம் எப்போதும் மக்கள் கூட்டத்தால் நிரம்பிக் களை கட்டியிருப்பதுடன் போக்குவரத்து நெரிசல்கள் குறைவாகக் காணப்பட்டன. தனியார் பேரூந்துகளும் சிறிய ரக வான்களும் போட்டி போட்டுக் கொண்டு பிரயாண சேவைகளை மேற்கொண்டுவருவதைக் காணக்கூடியதாக இருந்தன. தற்போது இலங்கையின் பலபாகங்களுக்கும் அதாவது பலவருடங்களுக்கு முன் செல்லாத ஊர்கள் நகரங்களுக்கெல்லாம் வடபகுதி போக்குவரத்துச் சபையினரின் பேரூந்துகள் சென்றுவருவது நல்ல விடையமாகும். குறிப்பாகக் கண்டி, கொழும்பு, அம்பாறை, கல்முனை, மட்டக்கயப்பு, திருகோணமலை என விரிவுபடுத்தப்பட்டிருப்பது. சிறப்பான விடையமாகும் என்னவென்றால் குறிப்பிட்ட நேரத்திற்குப் பஸ்வண்டிகள் புறப்பட்டுச் செல்கின்றன. குறித்த நேரத்திற்குப் போய்ச் சேருகின்றன. இது உண்மையிலேயே நல்ல விடையமாகும்.

இனி விடையத்திற்கு வருகிறேன். யாழ் பஸ்தரிப்பு நிலையம் சிறிது அழகாகத்தான் இருந்தது. அங்குகாணப்பட்ட அதாவது ஒவ்வொரு பஸ்வண்டியும் செல்லும் இடங்களின் பெயர்கள் சிலவற்றைப் பார்த்தபோது எனக்கு ஆச்சரியமும் கவலையும் வேதனையும்தான் வந்தது. எழுத்துக்கள் தமிழ், சிங்களம், ஆங்கிலத்தில் நல்ல அழகாக எழுதப்பட்டிருந்தன ஆனால் தமிழ் கொலை செய்யப்பட்டிருந்தன. இவை யாவற்றையும் எனது போட்டோக் கமராவால் படம்பித்து இத்துடன் அனுப்பியுள்ளேன். அதாவது...

மன்னார் என்ற இடத்திற்கு - மன்னர்
கோவிலாக்கண்டி என்ற இடத்திற்கு - கேவிலாக்கண்டி
திருநெல்வேலி என்ற இடத்திற்கு - திரூநெல்வேலி
கனகன்புளியடி என்ற இடத்திற்கு - கனகன்புலியடி

இப்படியாக ன-னா, கோ-கே, ரு-ரூ, லி-ளி என்ற எழுத்துக்களுக்கு வித்தியாசம் தெரியாமல் யாரோ ஒரு புண்ணியவான் எழுதிமுடித்திருக்கிறார்.. இது எவ்வளவு தவறான விடையமாகும். இந்த இடங்களை எழுதும்போது இவற்றைச் சரிபார்ப்பதற்கு ஆட்களில்லையா?.. அவ்வளவுக்கு ஏனோ தானோ? என்ற அசமந்தப் போக்கா?. .இந்த விடையத்தை வடபகுதி இ.போ.ச அதிகாரிகள் கண்டுகொள்ளவில்லையா.. அதாவது தமிழர் வாழும் பிரதேசத்தில் தமிழர்களால் நடாத்தப்படும் இந்தப் போக்குவரத்துச் சேவையினரால் சிறுதுளி பெருவெள்ளமாகத் தமிழ் அழிந்துவருவதே உண்மையாகும். நம்மவர்களே நம் தாய்மொழியை அழித்துக்கொண்டு பிற இனத்தவர் தமிழை அழிக்கிறார்கள் என்று கூக்குரல் போடுவது எந்தவிதத்தில் நியாயம்?...

இப்படியான தமிழ் மொழி அழிப்பு விடையங்கள் பல தமிழ்ப்பிரதேசங்களில் நம்மவர்களாலே அழிக்கப்படுவது எவ்வளவு கொடுமையான விடையமாகும். நாளைய சந்ததிகளின் நிலை என்ன. இவ்விடையங்களை இங்குள்ள ஊடகங்களோ, சமூக ஆர்வலர்களோ, அதிகாரிகளோ, அரசியல்வாதிகளோ ஏன் கண்டுகொள்வதில்லை.. இன்றைய தமிழ்ச்சமூகத்தில் பொதுநலம் மனிதநேயம் அற்றுவருவதாகவே தெரிகின்றது. யாரைப் பார்த்தாலும் பணம்...பணம் எனத் தோற்றம் பெற்றிருக்கும் மனிதர்களாகவே மாற்றமடைந்திருப்பது வேதனைக்குரிய விடையமாகும். எங்கள் மொழியும் எங்கள் இனமும் உலகத்தில் மூத்த இனம் மொழி என நாம் வாய்கிளியக் கத்துகிறோம். ஆனால் செயற்படுகிறோமா?.. எங்கள் மொழியின்: அழிவுக்கு இங்கு சுட்டிக்காட்டிய இதுபோன்ற சம்பவங்களும் காரணம்தான். எனவே தமிழைக் கொலை செய்யும் விடையத்தில் வடபகுதி இ.போ.ச அதிகாரிகள் கவனமெடுத்து விட்டபிழைகளைத் திருத்தி எழுதவேண்டும். நமது தமிழை நாம்தான் பேணிப்பாதுகாக்கவேண்டும். உரியவர்கள் இவைபோன்ற விடையங்களில் கவனம் செலுத்தித் தமிழை வாழ வைத்தால் அதுவே தமிழுக்குச் செய்யும் பெருந்தொண்டாக அமையும்.



## காதுக் குடுமியை அகற்றல்

09 ம் பக்கத் தொடர்ச்சி...



ஒருவரது காதுக் குடுமியானது மிக இறுக்கமான பாறை போலவோ அல்லாது மெதுமையானதாக இருந்தால் அதைத் தானே அகற்ற முடியும். இருந்தபோதும் செவிப் பறையில் துவாரம் உள்ளவர்கள், காதால் நீர் வடிபவர்கள், காதில் கிருமித் தொற்று உள்ளவர்கள் அவ்வாறு தாங்களே அகற்ற முயல்வது ஆகாது. எவ்வாறு அகற்றுவது?

இயர் பட்ஸ், குச்சி சட்டைப் பின், காது கிண்டி போன்றவற்றை உபயோகிக்க வேண்டாம் என்பதை ஏற்கனவே குறிப்பிட்டோம். உள்ளங்கையில் சற்று நீரை எடுத்து அதைக் காதிற்குள் விடவேண்டும். பின்னர் தலையைச் சரிக்க உள்ளே விட்ட நீரானது குடுமியைக் கரைத்துக் கொண்டு வெளியே வந்தவிடும். இவ்வாறு சில தினங்களுக்கு குளிக்கும்போது செய்து வர காதுக் குடுமி அகன்றுவிடும். குடுமி சற்று இறுக்கமாக இருந்தால் ஒலிவ் எண்ணெய் அல்லது நல்லெண்ணெயில் சில துளிகளை ஒரு சில தினங்களுக்கு குறிப்பட்ட காதில் விட்டுவர அவை இளகி வெளியேறும். பேபி ஓயில், கிளிசரீன் போன்றவற்றையும் சிலர் பயன்படுத்துவது உண்டு.

### காதுக் குடுமியை இளக வைக்கும் மருந்துகள்

பல விதமான மருந்துகள் கிடைக்கின்றன. பெரும்பாலன அரச மருத்துவ மனைகளிலும் பல தனியார் மருத்துவர்களும் ஶுழனரைஅ டிஉைபசடிழயெவந நயச னசழிள துளி மருந்தைப் பயன்படுத்துகிறார்கள். இது விலை மலிவானது. இலகுவில் தயாரிக்கக் கூடியது. பொதுவாகப் பாதுகாப்பானது. காது சற்று வரண்டது போன்ற உணர்வு சிலரில் ஏற்படலாம். அது தானாகவே மாறிவிடும். உபயோகிக்க ஆரம்பித்த காது குடுமி கரையும் மருந்து குப்பிகளை 4 வாரங்களுக்கு மேல் வைத்திருக்க வேண்டாம். அகற்றிவிடவும். Waxol, Molcer, Cerumol போன்ற விலை உயர்ந்த குடுமி இளக்கி மருந்துகளும் (இலங்கையில் கிடைக்கினறன.)

### எவ்வாறு உபயோகிப்பது

தினமும் எத்தனை தடவைகள் விட வேண்டும், தொடர்ந்து எத்தனை நாட்களுக்கு விட வேண்டும் என்பவை பற்றி உங்கள் மருத்துவரின் ஆலோசனையைப் பெறுங்கள். துளி மருந்துகளுடன் வரும் ஆலோசனைக் குறிப்புகளையும் கவனமாகப் படிக்கவும். மருந்து விட ஆரம்பிக்க முன்னர் உங்கள் கைகளைக் கழுவிச் சுத்தப்படுத்த மறக்காதீர்கள். உங்களால் உங்களுக்கே துளிகளை விடுவது சிரமமாக இருந்தால் மற்றொருவரின் உதவியைப் பெறுங்கள்.

மருந்து விட வேண்டிய காதானது மேற்புறம் பார்க்குமாறு கட்டிலில் சரிந்து படுங்கள். காதுமடலை சற்று முற்புறமாக இழுத்தால் காதுக் குழாய் நேராகி துளி மருந்து விடுவதற்கு வசதியாக இருக்கும். 3-4 துளிகளை விடவும். காது மருந்தால் நிறைந்துவிடும். துளி மருந்துப் போத்தலின் முனை காதில் படாதவாறு மருந்தை விடுவது அவசியம். இல்லையேல் காது மடலில் உள்ள கிருமிகளால் மருந்து மாசடைந்து தொடர்ந்து உபயோகிக்க முடியாது போய்விடும். தலையை திருப்பாது 5 முதல் 10 நிமிடங்களுக்கு அந்த நிலையிலேயே படுத்திருந்தால் மருந்து காதிலிருந்து வெளியே சிந்தாது உள்ளேயே தேங்கி நின்று குடுமியை கரைத்துவிடும். நீங்கள் படுக்கையிலிருந்து எழுந்திருக்கும்போது மேலதிக மருந்து தானாகவே காதிலிருந்து வெளியேறிவிடும். மற்றைய காதிலும் குடுமி இருந்தால் இதைப் போல அதிலும் மருந்தை விடவும்.

பொதுவாக 3 முதல் 5 நாட்களுக்கு இவ்வாறு மருந்தை காதினுள் விட குடுமி கரைந்து வெளியேறிவிடும். ஆயினும் மருந்தை காதினுள் அவ்வாறு விட்டும் நிவாரணம் கிடைக்கவில்லை எனில் மருத்துவரைச் சந்திக்கவும். மிகுந்து இருப்பதை வெளியே எடுப்பதாக எண்ணி இயர் பட்சை காதினுள் வைத்து சுத்தப்படுத்த முயலாதீர்கள். அது வெளிளேநாது மிகுந்து இருப்பதை மேலும் உள்ளே தள்ளி நிலைமையை மோசமாக்கிவிடும்.

குடுமிக்கென மருந்து விட்ட காதினுள் அழுக்குகள் படர்ந்திருந்தால் சற்று தண்ணீரை காதினுள் விட்டு பின்னர் தலையை மறுபுறம் சரிக்க அவை அகன்றுவிடும். வெளிப்புறக் காதை சுத்தமான துணியினால் துடைத்து சுத்தப்படுத்தலாம்.

நன்றி :ஹாய் நலமா




கனகதுர்க்கா பூசாரி
பண்டித் சீனிவாஸ் சாஸ்திரி
கருமாரி அம்மன் துணை
Face Reading
முகத்தைப் பார்த்து உங்கள்
எதிர் காலத்தைக் கணிப்பார்
அத்துடன் கைரேகையும் பார்க்கப்படும்
வியாபாரங்கள் எதிரிகள் உடல்நிலை
வேலை குழந்தைப்பாக்கியம் திருமணம் பணம் காதல்
விவாகரத்து வழக்குகள் கண்திருஷ்டி படிப்பு
வாகனப்பொருத்தம் மற்றும் பலபிரச்சினைகளுக்கும்
தீர்வுகாணலாம். காத்துக்கறுப்பு இருந்தாலும் நிவாரணம்
செய்து கொடுக்கப்படும்
வாரத்தில் 7 நாட்களும் 09.மணி முதல் 22.00 மணி வரை வரலாம்.
பேசும் மொழிகள் :தமிழ் தெலுங்கு,
ஒரு முறை நம்பிக்கையுடன் வாருங்கள் நலமடைவீர்கள்.
Tel:0231 33 89 72 90 -Handy: 015166182886 015214145738
Adler Ster.30, 44137 Dortmund



A.tu.Z Dolmetscher -
und Übersetzungsdienst
Für alle weltsprachen
மொழிபெயர்ப்புச் சேவை!
V.Ramakrishnan
Tel:0201 977 4957
Mobile 0176 28 44 85 89
0152 11 98 9603
Fax:0201 24 82 888
உங்கள் சகல பத்திரங்களையும் தமிழ்,ஆங்கிலம் பிரஞ் மற்றும் உலகமொழிகளில் இருந்து யேர்மன் மொழிக்கு மொழிபெயர்பதற்கும் யேர்மன் மொழியில் இருந்து நீங்கள் விரும்பும் மொழிக்கு மொழிபெயர்ப்பதற்கும் நீதிமன்றத்தில் சத்தியபிரமாணம் ( allgemein Vereidigte) மற்றும் நீதிமன்றத்தால் அங்கீகாரம் (Ermächtigte)அளிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர்களால் குறைந்த செலவில் துரிதகதியில் மொழிபெயர்ப்பதற்கும் நாடவேண்டிய இடம். Lise-Meitner-Str.20
45144 Essen
e.mail:atuzuebersetzung@hotmail.com



அன்று யாழ் நகரில் ஓர் மொக்கன் கடை இன்று டோட்மூண்ட் நகரில் ஓர் நானா கடை!


Sweet Chilli
Original Srilankisches & Indisches Restaurant
100%Halal 100%Frisch 100%Naturgewürze 100%Naturkräuter
இலங்கை புரியாணி (ஒரிஜினால்) கொத்துரொட்டி, இடியப்பகொத்து, புட்டுக்கொத்து, தோசை,மட்டன்றோல். பற்றிஸ் மற்றும் ஊர் ஆட்டிறைச்சிக் கறி, ரோஸ்கறி, கோழிக்கறி.அத்துடன் இந்திய உணவுவகைகள், அறுசுவை மரக்கறிகளுடன் தினமும் வாழையிலையில் பரிமாறும் ஒரே கடை நானா கடை!!! தினமும் காலை 11.30 இருந்து மாலை 23.30 வரை
50 இருக்கைகளைக் கொண்டது
Sweet Chilli
சான்றிதழ்களை இருமுறை பெற்றவர்கள் நாம்!
Rheinische str.60- 44137 Dortmund
www.sweetchilli-do.de
Tel: 0231 315 46 84

# பிக்கப்பில் வந்து முருகனோடு சண்டைபோட்ட சூரன்!



மாத்தளை முத்துமாரியம்மன் ஆலய கந்த சஷ்டி சூரசம்ஹாரம் பிக்கப்பில் வருகிறார் சூரன்.17.11.205

இடத்திற்கு ஏற்ப சில மாற்றங்கள் தவிர்க்க முடியாதது. அது சமயமாக இருந்தாலும், மொழியாக இருந்தாலும் உணவுப்பழக்கவளக்கமாக இருந்தாலும் அது பொருந்தும். ஆனால் அந்த மாற்றத்தையே பெருமை என எண்ணி வலிந்து இழுத்துப் புகுத்துல் அழகல்ல முறையுமல்ல.
கலைகள் யாவும் ஆலயங்களைச் சுற்றியே வளா்ந்து வந்துள்ளன. கலைகளால் ஆலயமும், ஆலங்களால் கலைகளும் புனிதமாகின, தெய்வீகக்கலைகள் ஆகின.

இந்நிலையில் புலம்பெயர் நாடுகளில் குறித்த நேரத்தில் ஆலயங்களில் மக்கள் ஒன்றுகூடப், போக்குவரத்து நெரிச்சல், மற்றும் வேலை நேரங்கள் ஒத்துப்போகமை மற்றும் குடியிருப்புக்களின் தூரம், இப்படிப் பல காரணங்கள்.

ஊரில் ஒரு கோவில் நிறைய அந்த ஊர்மக்களில் ஒரு பாதி போதும். நடைத்தூரத்தில் ஆலயங்கள், கூப்பிடு தூரத்தில் கலைஞர்கள். கும்பிட அங்கு பக்தர்களுக்கு குறைவில்லை.
வடத்தின் நீளம் போதாது ஒரு ஊர் ஒன்றுகூடி தேர் இழுக்க.
இப்பேற்பட்ட தாயத்தில் அமைந்துள்ள ஆலங்களில் மின்சாரப்பேரிகை என்னும் முரசம் ஒன்று அண்மைக் காலமாக முக்கிய இடம்பிடித்துவருவதை வெற்றிமணி வாசகர்கள் அறிந்திருப்பார்கள். தேர் வீதிவலம் வர, அதனைப் பின்தொடர்ந்து இந்த மின்சாரத்தில் மேளம் அடிக்கும் பேரிகை இழுத்து வரப்படும். அன்று வடக்கு வீதி என்றால் சனம் அரக்காது, அங்குதான் பெரும் இசைமழையே பொழியும்.

வெளிநாடுகளில் சில ஆலயங்களில் இந்த மின்சாரப் பேரிகை இருக்கின்றது. தவிர்கமுடியாத காரணத்தால்.

தாய்நாட்டில் வலிந்து இழுத்து பாவிப்பது அழகல்லவே.

சரி அடுத்து இந்த வலிந்திழுப்பைப் பாருங்கள். தற்போது நடந்து முடிந்த கந்தஷட்டியின் இறுதியில் நடந்தது சூரன்போர்.
தாயகத்தில் அன்றும் இன்றும் பெரும்பாலான ஆலயங்களில் முருகனைத் தூக்குவதற்கும் மேலாக சூரனைத் தூக்கவே இளைஞர் பட்டாளம் முந்தியடிக்கும்.

பெண்கள் கூட அன்று பெரிதும் விரும்பலயிப்பது இந்தச் சூரன் தூக்கும் சூரன்களைத்தான். தோளிலே சூரனைச் சுமந்து கொண்டு ஓட்டமும் நடையுமாக வந்து முருகன் முன் ஒரு முறை மண்டியிட்டு எழும்பிடும் காட்சியும், மீண்டும் பின்னோக்கிச சென்று வேறு தலைமாற்றிக் கொண்டு சூரன் வரும் காட்சியும், உண்மையில் முருகனை விட விறு விறுப்பாகவே இருக்கும்.

இன்று சினிமாவில் வரும் வில்லத்தனமிக்க கதாநாயகன் போல். வேதாளம் கஜனி உத்தமிவில்லன், மங்காத்தா போல்த்தான் இந்தச் சூரனும். அந்தச்சூரனை கண்முன் நிறுத்துவது இளைஞர்களது வலிமையான தோள்கள்.



மேலே படத்தில் வலிமைமிக்க இளைஞர்கள் தோளில் சூரனைச் சுமந்து போரிடும் காட்சி

இப்படி இருக்க இன்று மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயத்தில் கடந்த 17.11.2015 நடைபெற்ற சூரன் போரில் சூரன் பிக்கப் (ஜீப்வண்டியில்) வந்து முருகன் முன் பிறேக்கடித்து, றிவேஸ் எடுத்து, சார்க்கஸ் காட்டுவது வலிந்து இழுத்த ஒரு வலியாகத் தோன்றுகிறது. இது காலத்தின் மாற்றம் அல்ல. பகட்டின் மோகமாகவே தோன்றுகிறது. சிலவற்றை முடிந்தவரை மாற்றாது உள்ளவரைதான் அவை கலைகளாக, இருக்கும். பக்தி மணம் கமழும் என்பது உண்மையானதே. சூரனுக்கு பிக்கப் என்றால் முருகனுக்கு அப்போ என்ன வாகனம். நீங்களே விரும்பியதை எடுத்துக் கொள்ளுங்கள். சூரன் போருக்கு பதிலாக கேம் ஸ்ராட் Game Start என்று இந்தப் பெயரை பயன்படுத்தலாமே!





Essen மாநகரில் Öffnungszeiten 14.00-19.00 Uhr

Oviyan textiles

ஓவியன் ஆடைகள் உலகம்

Tel:0201 330 99 464

அழகிய பட்டுச்சேலைகள் பாட்டிசாறிகள் பெரியவர் சிறுமிகளுக்கான
அழகிய பஞ்சாபிகள்,இமிற்ரேசன் நகைகள் அனைத்தையும்
மலிவாகவும் தரமாகவும் பெற நாடுங்கள்,ஓவியன் ஆடைகள் உலகம்!

எசன் நகர பிரதான புகையிரத நிலையித்தில் (Hbf) இருந்து 5 நிமிட நடைத்தூரம்

Ihn.Balasundaram

Baedecker Str.11
45128 Essen

Tips Ragu Dharmaratnam ACMA, CGMA
email: ragu.savetax@gmail.com









# ஓய்வூதிய பணத்தை உபயோகித்து இங்கிலாந்தில் வீடு கொள்வனவு செய்வது?

Is it worth while to buy Property using Pensions

அறிமுகம்:

இந்த வருடம் சித்திரை மாதம் முதல் 55வயதிற்கு ஏற்பட்டவர்கள் தமது தனிப்பட்ட ஓய்வுதிய *pension pot* பணத்தில் எவ்வளவு தொகையையும் பெற்றுக் கொள்ள முடியும். சித்திரை மாதத்திற்கு முன்னர் நீங்கள் உங்கள் *pension* பணத்தில் *25%* த்தை மட்டுமே ஒரே தடவையாக எடுக்க முடியும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. தற்பொழுது அமுலில் உள்ள புதிய சட்டத்தின் படி தங்களது *pension* பணத்தில் முதல் 25 வீதத்தை எந்த விதமான வரியும் செலுத்தாமல் பெற்றுக்கொள்ள முடியும். மிகுதி பணத்தை தங்களின் வரி செலுத்தும் வீதத்தை பொறுத்து அதாவது 20 வீதம், 40வீதம், 45வீதம் என்ற அடிப்படையில் செலுத்தி பெற்றுக் கொள்ள முடியும்.

முக்கிய குறிப்பு:

*Buy to let* வீடு வாங்கும் அடிப்படையில் கிடைக்கும் வருமானம். *pension* மூலம். கிடைக்கும வருமானத்தை விட (வரி கட்டிய பின்) அதிகமாக இருக்கும் உங்களது கணிப்பீடு இருப்பின் *pension* பணத்தை உபயோகித்து *buy to let* வீடு கொள்வனவு செய்யலாம்.
உதாரணம்:

சரவணன் என்பவர்க்கு தற்பொழுது 56 வயது. அவர் 20 வீத வரி செலுத்துபவர். அவரிடம தற்பொழுது உள்ள *Pension pot* பணம் £65000. அவர் இந்த £65000 பணத்தையும் முழுமையாக எடுத்து இரண்டு *Buy to let* வீடுகளுக்கு *deposit* பணமாக கொடுக்க முடிவு செய்திருக்கிறார். அடுத்த பத்து ஆண்டு காலத்தில் வீடுகளின் விலை 8 வீதம் ஒரு வருடத்தில் அதிகரிக்கும் என்ற அடிப்படையில் *Pension* பணத்தைவிட வீட்டு முதலீட்டில் அதிக வருமானம் கிடைக்கும் என்ற சரவணனின் எதிர்பார்பிலையே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்த £ 65000 பணத்தில் முதல் 25 வீதம் அதாவது £16250 எந்த விதமான வரியும் செலுத்தாமல் எடுக்க முடியும். மிகுதி £48750 பணத்திற்கு 20வீதம் வரி அதாவது £9750 செலுத்த வேண்டும். எனவே தற்பொழுது சரவணன் கையில் £55250 பணம் இருக்கின்றது (£65000- £9750).

இந்த £ 55000 இரண்டு சிறிய வீடுகளை £ 25000 *deposit* ராக ஒவ்வொரு வீட்டிற்கும் செலுத்தி £100.000 பெறுமதியான இரு வீடுகளை வாங்கி இருக்கின்றார். முற்றய மிகுதி £5250 பணத்தை வீட்டுக்கான *legal* மற்றும் அத்தியாவசிய வேலைகளுக்கு செலவு செய்துள்ளார். இந்த உதாரணத்தில் வீடுகளின் விலை அடுத்த பத்து ஆண்டுகளில் 8 வீதமாக ஒவ்வொரு ஆண்டும் அதிகரிக்கும் எனவும் வீட்டு *rental* வருமானமும் வீட்டுச் செலவுகளும் சமன் எனவும் கருதிக் கொள்வோம் எனவே அடுத்த பத்து ஆண்டில் சரவணனின் ஒவ்வொரு வீடும் £200000 ஆக அதிகரித்து இருக்கும். இவர் இதில் ஒருவீட்டை விற்பனை செய்து £20.000 *capital gain tax* செலுத்துவார் எனவும் *mortgage* முழுவதும் செலுத்தப்பட்டு விட்டது எனவும் கருதினால் இவரிடம் £30000 பணமும் *mortgage* முற்றாக செலுத்தப் பட்ட £200000 பெறுமதியான வீடும் இருக்க வாய்பிருக்கிறது.

*Pension* பணத்தை இவ்வாறு வீட்டில் முதலீடு செய்யாமல் *Pension* னில் வைத்திருந்து 8வீதமாக 10வருடத்திற்கு அதிகரித்தால் அதன் மதிப்பு £140 000 ஆக உயர்வடைந்திருக்கும். எனவே மேலே உள்ள உதாரணத்தின் படி *Pension* பணத்தை எடுத்து வீட்டில் கொள்வனவு செய்வது கூடிய வருவாயைக் கொடுக்கும்.

வீட்டு முதலீடு அதிக வருவாயைக் கொடுத்தற்கு மிக முக்கிய காரணம் *"Gearing"* என்பது குறிப்பிடத்தக்கது. *Gearing* என்றால் *borowed* பணத்தைப் பாவித்து அதிகளவு பலமடங்கு முதலீட்டுத் தொகையை அதிகரிப்பது ஆகும். ஆதாவது £200000 பெறுமதியான இரண்டு வீடுகளும் £400000 ஆக அதிகரிப்பதற்கு £150000 *mortgage* அதாவது *borrowed money* உதவி செய்து உள்ளது.
இப்படியான *geared* முதலீடு என்பது அதிக *risk* உள்ள முதலீடு என்பதால் தகுந்த ஆலோசனையை முதலில் பெறுவது அவசியமாகும்.









சுவையோ சுவை!
அனைவருக்கும் எங்கள் இனிய நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்கள்

Om Namaste
indisch/Sri-lankisches Restaurant

Offnungsziten
Mo-Do:11.00-24:00
Fr,Sa:11:00-03.00
So&Feiertage:
12:00-23:00

உங்கள் பிறந்தநாள்,கொண்டாட்டம், பூப்புனிதநீராட்டு மற்றும் ஒன்றுகூடல் நிகழ்வுக்கு உணவுடன் 100 இருக்கைகள் கொண்ட மண்டபம் இங்கு உண்டு
உங்கள் விருப்பம்போல் இலங்கை இந்திய உணவுகளை சுவையாக தயாரித்து ,உங்களுக்கு ஏற்ற வகையில் பரிமாறக் காத்திருக்கின்றோம்.



Every Saturday Buffet
இலங்கை உணவு
இல்லச் சுவை தரும் காரம் மணம் குணம் நிறைந்த உணவு!
- மீன்குழம்பு
- கோழி இறச்சி
- ஆட்டிறச்சி
- கணவாய்க்கறி
- கொத்துரொட்டி ,பிரியாணி
- இன்னும் பல

9,90€
all you can eat
(இலங்கை முறைப்படி தயாரிக்கப்பட்ட காரம் மணம் குணம் பொருந்திய சுவையான இலங்கை உணவு)

Brückstrasse 31-33 44135 Dortmund / Germany
Tel;0231 334 85 282



படங்கள் : கோணேஸ் செந்தில்

# பணிவு பக்தி துணிவு அவதானிப்பு இவற்றை மிதமாகக்கொண்ட மிருதங்கக் கலைஞன் சங்கர்ஷன்!

சங்கர்ஷன்சர்மா ஜெயந்திநாதக்குருக்களின் மிருதங்க அரங்கேற்றம் கடந்த மாதம் (01.11.2015) ஞாயிற்றுக்கிழமை யேர்மனியில் சுவற்ரா நகரில் மிகச்சிறப்பாக இடம்பெற்றது.
சங்கர்ஷன் சர்மா எசன் நுண்கலைக்கல்லூரி மிருதங்க ஆசிரியர் லயனஞானவாருதி அனுசாந்த் நயினை விஜயன் அவர்களின் மாணவனும்,சுவற்றா கனகதுர்க்க அம்பாள் ஆலய பிரதம குரு துர்க்கா பூஜா துரந்தரர் சிவஶ்ரீ ஜெயந்திநாதக்குருக்களின் மகனும் ஆவார்.

விழாவிற்கு சிவஶ்ரீ தெய்வேந்திரக்குருக்கள் ( டோட்மூண்ட் சிவன் கோவில் பிரதம குரு) தலைமைதாங்க பிரதமவிருந்தினராக சிவஶ்ரீ சோமஸ்கந்த சிவாச்சாரியர் ( முன்னாள் யாழ் பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர்) அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக கம் காமாட்சி அம்பாள் ஆலய பிரதம குரு பக்கவத்திருமணி சிவஶ்ரீ பாஸ்கரக்குரக்கள் அவர்களும்,சுவற்றா நகர் நகரபிதா Heinrich Böckelür அவர்களும் சுவற்றா தமிழாலய நிர்வாகி திரு.கோபிநாத்த மற்றும் வெற்றிமணி பிரத ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். வரவேற்புரை பிரம்மஶ்ரீ சிவதர்சன் ஜெயந்திநாதக் குருக்கள் நிகழ்த்தினார்.

நடராஜர் பூசை. சிவஶ்ரீ பிரணவக்குருக்கள் சோமாஸ்கந்தக்குருக்கள் நிகழ்த்த அரங்கமே தெய்வீக மணம்கமள குருவும், மாணவனும் ஏன் சபையோரும் கண்களில் ஒருவித நெகிழ்ச்சி பொங்க நின்றது அங்கு தெரிந்தது. அதனைத் தொடர்ந்து தமிழ்வேள் நயினை விஜயன் அவர்களும் அவரது புதல்வி ஜனனி சிவதாஸ் அவர்களும் சிறப்பாக தொகுத்து வழங்க அரங்கேற்ற நிகழ்வுகள் ஆரம்பமாகின.
சங்கர்ஷன் சர்மா அவர்களின் மிருதங்க அரங்கேற்றத்திற்கு பக்கவாத்தியக் கலைஞர்களாக, தமிழகத்தைசேர்ந்த பிரபல பாடகர் இசைப் பேரொளி ச. சாகேத்தராமன் அவர்கள் பாட, மிருதங்க அரங்கேற்றம் காணும் சங்கர்ஷன் சர்மா அரங்கேற்றம் போல் அன்றி ஒரு மாபெரும் கச்சேரிக்கு வாசிக்கும் திறனோடு வாசிக்க, தம்புராவை ஜனாத்தனி சுபசபாநாதசர்மா மீட்ட, கடம் மிருதங்க கலாஜோதி நகுஷாந் நயினைவிஜயன் வாசிக்க நடிகமணி வி.வி.வைரமுத்து அவர்களின் பேரன் பிரவீன் சாரங்கன் வயலின்வாசிக்க கலஜோதி அனுசாந் நயினைவிஜயன் அவர்களின் முதல் அரங்கேற்றம் கண்ட மாணவன் ராகுலன் ராமநாதன் கஞ்சிரா வாசிக்க, செல்வன் வாரணன் சுரேஷ்குமார் மோசிங்வாசிக்க, அரங்கேற்றம் இளைஞர் அணியோடு களம் இறங்கியது.

தொடர்ச்சி 19 ம் பக்கம்



# ஆண்பாவம் சொல்லாதது !



சேவியர்

பெண்பாவம் பொல்லாதது என்பார்கள். ஆண்பாவமோ சொல்லாதது. பெண்மனசு ரொம்ப ஆழம். அதில் என்ன இருக்கிறது என்பதைக் கண்டுபிடிப்பது ரொம்ப கஷ்டம் என்பார்கள். ஆண்களின் மனது ஆழமெல்லாம் இல்லை. ஆனால் அதில் இருப்பதைக் கண்டுபிடிக்க பெண்கள் பெரும்பாலும் முயல்வதில்லை என்பது தான் உண்மை.

பெண்களை மலர்கள் என்போம். காலங்காலமாக அப்படி கவிதை சொல்பவர்கள் ஆண்கள் தான். மலரினும் மெல்லினமாய் பெண்களை அவர்கள் தங்கள் கலைக் கண்களால் பார்க்கின்றனர். கிளைகளில் அவர்கள் பூத்துக் குலுங்குகையில் மகிழ்கின்றனர்.

ஆண்களை வேர்கள் என்று சொல்ல வேண்டும். அவை பூமிக்குள் மறைந்திருக்கும். எப்போதும் வெளியே வந்து, "நான் தான் வேர்" என அது விளம்பரப் படுத்துவதில்லை. ஆனால் அந்த குடும்பம் எனும் மரம் சாய்ந்து விடாதபடி எப்போதும் பூமியை இறுகப் பற்றிக் கொண்டே இருக்கும். பூக்களின் வசீகரம் குறைந்தால் உடனடியாக நீரை உறிஞ்சி கிளைகளுக்கு அனுப்பி வைக்கும்.

கிளைகள் பூக்கிரீடம் சூட்டிக்கொள்ளும் போது வேர்களில் விழா நடக்கும். ஆனால் அந்த விழாவை யாரும் காண்பதில்லை. அது ஆழ்கடலில் குதித்து விளையாடும் ஒரு மீனைப் போல வெளிப்பார்வைக்கு மறைவாகவே இருக்கிறது.

கிளைகளின் வசீகரமும், இலைகளின் வசீகரமும் வேர்களைப் பற்றிய நினைவுகளையே மறக்கடிக்கச் செய்து விடுகின்றன. அதற்காக வேர்கள் கவலைப்படுவதில்லை. தன் கடன் பணிசெய்து கிடப்பதே என அமைதியாய் இருக்கின்றன.

வெற்றிகரமான குடும்ப வாழ்க்கையைத் துருவிப் பார்த்தால் அதிகம் பேசாத ஆண்களே அங்கே இருப்பார்கள். குடும்ப வாழ்க்கையில் தனது வெற்றி என்பது மனைவியர் தோல்வியடையாமல் இருப்பதே எனும் ஞானத்தை அடைந்த ஞானியர்கள் அவர்கள்.

ஒரு சுவாரஸ்யமான கதை உண்டு. ஐம்பது ஆண்டு காலம் வெற்றிகரமான குடும்ப வாழ்க்கை நடத்திய ஒரு தம்பதியரை பேட்டி கண்டார்கள். கணவனைப் பார்த்து, "இந்த வெற்றிகரமான வாழ்க்கையின் ரகசியம் என்ன ?" என்று கேட்டார்கள்.

கணவர் சொன்னார், "பெரிய பெரிய விஷயங்களில் முடிவுகளை நான் எடுப்பேன். சின்னச் சின்ன விஷயங்களை என் மனைவியே பார்த்துக் கொள்ளட்டும் என விட்டு விடுவேன். அது தான் எங்கள் வெற்றிகரமான வாழ்க்கை ரகசியம்".

"அதென்ன சின்னச் சின்ன விஷயம் ?"

"என்ன டிவி வாங்கறது, என்ன கார் வாங்கறது, எங்கே டூர் போறது, எங்கே பிள்ளைகளை படிக்க வைக்கிறது...இப்படிப்பட்ட விஷயங்கள் "

"அப்போ பெரிய விஷயங்கள் ?"

"ம்ம்.... அமெரிக்கா ஈராக் கூட போரிடலாமா ? பிரான்ஸ் சிரியாவை தாக்கலாமா ? இந்த மாதிரி ! "

அதாவது குடும்பத்தின் சாவியை மனைவியிடம் ஒப்படைத்து விடுபவர்கள் ஆண்கள். காரணம் வேறொன்றுமில்லை குடும்பம் சமாதானமாக இருக்க வேண்டும் என்பது தான்.

அதனால் தான் சீரியல் பார்த்து ரொம்பவே துயரத்தில் இருக்கும் பெண்களிடம் தங்களுடைய பிரச்சினைகளை ஆண்கள் பகிர்ந்து கொள்வதில்லை. ஆனால் அதற்காக, "எதுவும் பேசமாட்டாரு" எனும் பட்டத்தையும் வாங்கிக் கொள்வார்கள்.

ஆண்கள் பேசாமலிருப்பதற்கு ஒரு முக்கியமான காரணம், "பேசப் போய் வீணா எதுக்கு பிரச்சினை" என்பது தான். பெண்களால் பேசாமலிருக்க முடிவதில்லை. காரணம் அவர்கள் பேசுவதற்காகப் படைக்கப் பட்டவர்கள். அவர்களால் பேசாமல் இருக்க முடிவதில்லை. அந்த ஒரே காரணத்துக்காகத் தான் ஏவாளைப் படைக்கும் முன் ஆதாமைப் படைத்து வைத்தாரோ கடவுள் எனும் சந்தேகம் எனக்கு உண்டு.

பெண்கள் உணர்ச்சிகளை கொட்டோ கொட்டெனக் கொட்டுவார்கள். அதைக் காயப்படுத்தாமலும், ஈரப்படுத்தாமலும் காதில் போட்டுக்கொள்ள வேண்டிய கடமை கணவனுக்கு உண்டு. திடீரென "நீங்க என்ன சொல்றீங்க ?" என மனைவி கேட்டால் கணவனுக்கு இரண்டு பதட்டங்கள் வரும். ஒன்று, "நான் என்ன சொன்னா பிரச்சினை இல்லாமல் இருக்கும்". இரண்டாவது, "இதுவரை மனைவி என்ன தான் பேசிட்டிருந்தா ?". மனைவியர் அந்த கேள்வியைக் கேட்காமல் இருப்பது என்பது என்ன ஒரு பாக்கியம் என்பது கணவர்களுக்கு மட்டுமே தெரியும் !!!.


ஸ்ரீ பேற்லா ஜோதிடம்
உலகப் புகழ்பெற்ற இந்திய ஜோதிடர்
ஆதிவாசி பண்டித் கே.சுவாமி



உறவுச்சிக்கல்கள் - தவறாகப் புரிந்துகொள்ளல் - நிதிச் சிக்கல்கள்
மன அழுத்தம் - காதல்பிரச்சினைகள் - வேலை தேடுதல் - குடும்பவாதங்கள்
குழந்தைகள் இல்லாத தம்பதிகள் - வாகனப் பொருத்தம்

தலை முறை தலைமுறையாக ஜோதிடக் கலையை
பயின்றுவரும் ஜோதிடவித்துவான்
பேசும் மொழி தமிழ் கிந்தி மற்றும் ஆங்கிலம்.

Tel: 015 21 46 02 865 / 0151 63 50 9059

கிழமை 7 நாட்களும் 09.00 முதல்
20.00 மணிவரை வரலாம்.

Make an Appointment
Prapa Super Market
Hindenburg Straß 212
41061 Mönchengladbach



தமிழ் -யேர்மன்
Nietharshan Magendiran
Vereidigter Dolmetscher und übersetzer
Tamil-Deutsch
Möbil: + 49 176 311 328 73
Email: nietharshan.magendiran@gmail.com



AMMA's food
ammas-food.de
அனைவருக்கும் எங்கள் இனிய நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்கள்
Amma's Food
Rheinische Straße 80A
44137 Dortmund

டோட்முண்ட் நகரில் புதிய உதயம்
அம்மா'ஸ் உணவகம்

அறுசுவைக்கறிகளுடன் சோறும், புரியாணியும்
கொத்து ரொட்டி ,இட்டலி , தோசை, வடை இடியப்பம்
இவற்றுடன் இன்னும் இன்னும் உங்கள் விருப்பறிந்து
தரக்காத்திருக்கின்றோம்!

உங்கள் இலத்தின் மங்கல வைபவங்கள் அனைத்திற்கும்
அம்மாவின் சமையலை நினைவூட்டும் உருசியுடன்
தயாரித்து பரிமாறுவோம்!

காலை 11.00 மணி முதல் மாலை 11.00 மணிவரை
செவ்வாய் கிழமை விடுமுறை!

அம்மாஸ் உணவகத்தின் சிறப்பு அம்சம்
சுவையைச் சுடச்சுடத் தருவதும் ஆகும்.



வெள்ளி சனி
நாட்களில் பாலப்பம்

Tel:0231 33 89 86 91
Fax:0231 33 89 86 93




மனைவியின் பேச்சில் உடன்பாடு இல்லாவிட்டால் நீங்கள் அமைதியாய் இருக்கலாம். உடன்பாடு இருந்தால் நீங்கள் அமைதியாய் இருக்கலாம். மறுபடி வாசிக்க வேண்டாம். சரியாகத் தான் சொல்லியிருக்கிறேன். "வாயை மூடிட்டு பேசறதைக் கேளு" எனும் ஒரு வரி தான் பெரும்பாலும் ஆண்களுக்கான உரையாடலின் பங்கு.

இன்னொரு முக்கியமான விஷயம் மறதி ! . மறதி என்பது ஆண்களுக்கு இறைவன் கொடுத்த வரம். பெண்களின் அதீத ஞாபகசக்தி ஆண்களுக்கு இறைவன் கொடுத்த சாபம். எல்லாவற்றுக்கும் ஒரு சமநிலை வைப்பவர் இறைவன் என்பதன் இன்னொரு வெளிப்பாடு இது. கல்யாணம் ஆன புதுசுல நீங்கள் சொன்னது முதல், நேற்று நீங்கள் வாங்க மறந்த விஷயங்கள் வரை மனைவியின் நினைவுப் பேழையில் இருக்கும். மறதிக்கு மனைவி தரும் பெயர், "உங்களுக்கு அக்கறையில்லை !!!". அப்படி மனைவி திட்டியதையே அரைமணி நேரத்தில் ஆண்கள் மறந்துவிடுவது தான் வரத்தின் அழகு.
வாரம் ஆறு நாட்கள் வீட்டிலேயே இருந்து தேவையான உதவிகளைச் செய்துவிட்டு ஏழாவது நாள் மாலையில் அரைமணி நேரம் வெளியே கிளம்பும் போது பின்னாடியிருந்து ஒரு குரல் கேட்கும், "எப்பவும் பிரண்ட்ஸ் கூட சுத்தினா போதும்... நாளைக்கு பிள்ளைகளுக்கு ஸ்கூல் இருக்கு.. வீட்ல அவ்ளோ வேலை இருக்கு...!!!". அந்த நேரத்தில் உள்ளுக்குள் எழுகின்ற எரிமலைக் குழம்பை, ஆலகால விஷத்தைப் போல தொண்டைக்குழியில் தேக்கி, "ஒன் அவர்ல வந்திடுவேன்" என சிரித்துக் கொண்டே சொல்லும் கலை அவ்ளோ ஈசியா என்ன ?



தான் செய்யும் செயல்களுக்கெல்லாம் ஒரு நன்றி, ஒரு பாராட்டு வேண்டுமென எதிர்பார்ப்பவர் மனைவி என்பது கணவர்களுக்குத் தெரியும். மறக்காமல் அதைச் செய்து விடுவார்கள். ஆனால் கணவன் செய்யும் செயல்களெல்லாம் "அது அவரோட கடமை" ரேஞ்சுக்குத் தான் பெரும்பாலும் மனைவியரால் எடுத்துக் கொள்ளப்படும். "மனைவி திட்டாம இருந்தா, பாராட்டினதுக்கு சமம்பா" என்பதே ஆண்களின் ஆழ்மன சிந்தனை. "இதெல்லாம் கூட நான் சொன்னா தான் செய்வீங்களா ?" எனும் குரல் கேட்காத வீடுகள் உண்டா ? மனைவியை திருப்திப்படுத்த அடுத்த முறை ஏதாவது தாமாகவே செய்தால், "ஏன் இதையெல்லாம் செஞ்சிட்டு திரியறீங்க?" எனும் பதில் வரும். அமைதியாய் ,"அப்போ என்ன செய்யணும்" என்று கேட்டால் "இதெல்லாம் கூட நான் சொன்னா தான் செய்வீங்களா ?" எனும் பதில் வரும். உலகம் மட்டுமல்ல உருண்டை எனும் அறிவியல் உண்மை உணர்ந்த களைப்பில் ஆண்கள் சிரிக்கும் சிரிப்பு அவர்களுக்கே புரியாதது. "மன்னிச்சிடும்மா" எனும் ஆண்களின் வார்த்தையில் "ஆள விடு சாமி... " எனும் பொருள் உண்டு. அந்தப் பொருள் வெளியே தெரியாத அளவுக்கு பேசும் வலிமையில்லாத கணவர்கள் வாட்ஸ்ஸப் பயன்படுத்துவதே நல்லது.

நடிப்பை விட ஜகான் ஈசி !! "ஆமா செய்றதையெல்லாம் செஞ்சுட்டு.. மன்னிப்பு வேற" என இரட்டையாய் எகிறும் மனைவியரை சமாளிப்பது கலிங்கப்போரை விடக் கடினமானது.
என்ன பரிசு கிடைத்தாலும், "வாவ்.. சூப்பர்" என்பது கணவர்களின் வழக்கம். மனைவியோ "சேலை..நல்லா "தான்" இருக்கு, பட் பார்டர் கொஞ்சம் சரியில்லை.. எவ்ளோ ஆச்சு... மாத்த முடியுமா ?" என பல கேள்விகளுக்கு நடுவே ஏண்டா கி.்.ப்ட் வாங்கினோம் என கலங்கும் கணவர்கள் அப்பாவிகளா இல்லையா ? வெளியே போக தயாராகி ஒருமணி நேரம் காத்திருப்பார் கணவன். மேக்கப் முடித்த மனைவி சொல்வார், "சீக்கிரம் வாங்க, காரை வெளியே எடுத்திருக்கலாம்ல, ஷூ போடுங்க, கார் சாவி எங்கே? எல்லா இடத்துக்கும் லேட்டாவே போக வேண்டியது". "இதப்பார்ரா..." என கவுண்டமணி கணக்காய் மனசுக்குள் ஒலிக்கும் குரலை வெளிக்காட்ட முடியுமா என்ன ?
"இதெல்லாம் என்கிட்டே சொல்லவேயில்லை" எனும் மிரட்டல் கேள்வி தவறாமல் வரும் ஆண்கள் எதையாவது தெரியாத்தனமா மறந்து தொலைத்தால். அதே விஷயத்தை மனைவி சொல்லாமல் இருந்தால், "ஆமா.. நீங்க எப்போ வீட்டுக்கு வரீங்க, எங்கே பேசறீங்க... இதையெல்லாம் சொல்ல ?"எனும் பதில் தானே வழக்கம் !
இப்படியெல்லாம் எதிரும் புதிருமாக இருந்தாலும், இணைந்தே வாழ்வதில் தான் குடும்ப வாழ்க்கை அர்த்தமடைகிறது. ஆண் எனும் பாத்திரத்தில் ஊற்றி நிரப்பும் பானமாக பெண் இருப்பதும், பெண் எனும் பாத்திரத்தில் நிரம்பித் தளும்பும் பானமாக ஆண் இருப்பதுமே வாழ்வின் அழகு.

ஒருவருடைய தவறை அடுத்தவர் எளிதாக எடுத்துக் கொள்வதும், வெற்றிகளை இணைந்தே ரசிப்பதும், ரசனைகளை மதிப்பதும், தனிப்பட்ட நேரங்களை ஒதுக்குவதும், விவாதங்களில் தோற்பதை வெற்றியாய் நினைப்பதும் குடும்ப வாழ்க்கையின் தேவைகள்.
ஒரு குழந்தை சமூகத்தில் சரியான இடத்தை அடைய ஒரு தந்தையின் அருகாமையும் வழிகாட்டுதலும் மிகவும் அவசியம் என்கின்றன ஆய்வுகள். தாயின் அன்பை விட தந்தையின் அன்பு இதில் அதிக முக்கியம் என்கின்றன சில ஆய்வுகள். கணவன் மனைவி உறவு இறுக்கமாய் இருந்தால் தான், தாய் தந்தை பொறுப்புகளும் செவ்வனே நடக்கும்.
ஆண்கள் மரியாதையை எதிர்பார்க்கிறார்கள், பெண்கள் அன்பை எதிர்பார்க்கிறார்கள் என்று உளவியல் சொல்வதுண்டு. உண்மையில் பெண்கள் மட்டுமல்ல, ஆண்கள் எதிர்பார்ப்பதும் அன்பு மட்டுமே. அன்பு அடுத்தவரை மரியாதை குறைவாய் நடத்தாது என்பது மட்டுமே புரிந்து கொள்ள வேண்டிய விஷயம்.
கணவனிடம் மனைவிக்கும், மனைவியிடம் கணவனுக்கும் அன்பும் பகிர்தலும் தொடர்ந்து இருக்க வேண்டியது மிகவும் அவசியம். அங்கே ஏதேனும் இடைவெளி விழும்போது தான் வேறு ஏதேனும் ஒரு உறவு வந்து நுழைந்து விடுகிறது. அது குடும்ப வாழ்க்கைக்கு கண்ணிவெடியாய் மாறிவிடுகிறது.
பெண்பாவம் பொல்லாததாய் இருக்கலாம்! ஆண்பாவம் சொல்லாததாய் இருக்கலாம் ஆனால் இதயத்தில் அன்பு இல்லாததாய் மட்டும் இருக்க வேண்டாம்.


## யேர்மன் தமிழ் வர்த்தக சங்கம்

**எதிர்காலத்தை வளமாக்க ஒன்று கூடுவோம்**

**20.12.2015 ஞாயிறு மாலை 5.00 மணி**

யேர்மனி வாழ் அனைத்து வர்தகர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்புடன்
ஞானம் (Gopara gnanam )
ஸ்ரீதரன் (S.K.Silks & Gold Paraadise
ரஜீவன் மகாலிங்கம் (Mayraa)

இடம்: தமிழர் அரங்கம்
Rheinische Str.72
44137 Dortmund




# 500 டாக்டர்களை உருவாக்கியது என் குற்றமா?

**அன்று சித்திர புத்திரனுடன் அமரர் கனக்ஸ் நடத்திய விவாதம்!**

## 2103 இல் நான் பேசுகின்றேன்

நடைபெற்ற காலம் : கி.பி 2103: நடைபெற்ற நாடு : கற்பனையூர்

கி. பி 2103 புரட்டாதி மாதம் 4ம் தேதி அதிகாலை விசாலமான ஒரு வீதி வழியாக நான் நடந்து செல்கிறேன். அட பாவி! உனக்கு இப்பவே (அதாவது 2007ல்) 72 வயது கிழவனாகி விட்டாய். இன்னும் நூறு வருடங்கள் இருக்க வேணும் என்ற ஆசையா பாவி என்கிறீர்களா! ஏனையா அவசரப் படுகிறீர்கள், யாரையா சொன்னான் நான் உயிரோடு இருப்பதாக. நான் செத்துச்சாம்பலாகி எழுபத்தி ஐந்து வருடங்காகிவிட்டது. அங்கே நான் போனதும், சித்திர புத்திரன் எழுதிவைத்த குற்றப் பட்டியலை வாசிக்குமாறு இயமதர்மராஜன் உத்தரவு போட்டார். "இந்தத் தடியன் செய்த எல்லாக் குற்றங்களிலும் பாரிய குற்றம் ஒன்று உள்ளது தர்மராஜாவே" என்ற முன்னுரையுடன் சித்திர புத்திரன் ஆரம்பித்தான். காலன் ஒரு உறுமல் விட்டான். எனக்கு ஐஞ்சும் கெட்டது அறிவும் கெட்டது. " இவன் குறைந்தது ஐநூறு டொக்டர்களையாக்கிலும் உருவாக்கியிருப்பான்.

அந்தப் பாவிகளால் எமது கிங்கரர்கள் தமது கடமையை ஒழுங்காகச் செய்ய முடியவில்லை. நாம் தயாரித்த பட்டியல் படி பூலோக வாசிகளை இங்கே கொண்டு வர முடியவில்லை. அங்கோ பாவாத்மாக்களின் தொகை அதிகரித்துக் கொண்டே போகிறது. பூமியின் பாரம் தாங்க முடியவில்லை எனச் செல்வி பூமாதேவி குறைகூறுகிறார். நமது கிங்கரர்கள் கையூட்டு ஏதாயினும் வாங்கிக் கொண்டு தமது கடமையில் கவனம் செலுத்தாமல் தட்டிக் கழித்தார்களோ என்ற சந்தேகம் ஏற்படுவதாக ஒரு பாரிய நினைவூட்டல் கடிதம் ஒன்றும் அனுப்பியுள்ளார் மகராஜா. என்றார்.

இயமன் சித்திரபுத்திரனைப் பார்த்து சிவாஜி கட்டப் பொம்மனில் விட்டது போன்ற ஒரு உறுமலுடன் " இச் சமூகத் துரோகிக்கு என்ன தண்டனை கொடுக்கலாம். நீயே சொல்லு " என்றார். தர்மராஜா." இங்கே என்ன எங்கேயும் இப்போ மடப்பள்ளிதானே பிரச்சினைக்குரிய இடம். அங்கே இருநூறு வருடம் மேற்பார்வை செய்ய வேண்டும் என்று கட்டளை பிறப்பித்தார் சித்திரபுத்திரன் " அப்படியே என்றார் தருமதேவன்.

இதனால் ஒரு இலாபம் வயிற்றுக்கு வஞ்சகம் இல்லாமல் போகுது. அதோடு மாத்திரமல்ல அங்கே மண்ணுலகத்தில் என்னோடு அரட்டை அடித்த பல நண்பர்களும் இங்கே இருப்பதால் அரட்டைக் கச்சேரிகளும் பஞ்சமில்லாமல் தொடருகின்றன. பொழுது உல்லாசமாகப் போகுது. ஒன்றும் பெரிய அளவில் வித்தியாசம் இருப்பது போலத் தெரியவில்லை.
அதலாலென்ன நூறு வருடம் முடிந்ததும் தண்டனையை மீள்பார்வை செய்வார்கள். ஆனால் இடமாற்றம் வராவிட்டால் அதிஷ்டம்.

உங்கு கோவில் குளம் எனத் திரிந்த ஒரு சிலர் இங்கே மேலுலகவாசிகள். அதாவது சொர்க்க வாசிகள். வருடத்தில் ஒரு நாள் இரண்டு உலக வாசிகளுக்கும் இடையேயான ஒரு ஒன்று கூடல் நடைபெறுவதுண்டு.

அன்றுதான் அவர்களைக் காண முடியும். பரிதாபம்! பரிதாபம்! தாடி மீசை, சடாமுடி சகிதம் "சிவ சிவா" என உருத்திராச்சக் கொட்டையை உருட்டியபடி இருந்தனர். பாரக்கவே பரிதாபமாக இருந்தது. சிவசத் தியமாக, ஐயையோ தப்பு! தப்பு! இயம சத்தியமாய்ச் சொல்கிறேன், ஒரு நாள் கூட நான் அங்கே போய் இருக்கச் சம்மதிக்க மாட்டேன்.

**ஓராண்டு நினைவு அஞ்சலி**



**அமரர் பொ.கனகசபாபதி அவர்களுக்கு வெற்றிமணியின் ஓராண்டு நினைவு அஞ்சலி**

இங்கே மடப்பள்ளியில் எனது 75 வருட சேவையைப் பாராட்டி பெரு மனசு வைத்து மூன்று நாள் விடுப்பு தந்தார்கள். எனது பிறந்தகத்தைப் போய்ப்பார்க்க ஆசையாக இருக்கிறது எனக் கெஞ்சிக் கூத்தாடி எப்படியோ உத்தரவு பெற்று வந்ததால் தான் இங்கே நிற்கிறேன். இங்கே நிற்கிறேன் என்று நான் சொன்னால் நீங்கள் நம்பித்தான் ஆகவேணும். நான் அருவமானவன் நரகலோக வாசி ஆகவே என்னை ஒருவரும் பார்க்க மாட்டீர்கள் ஆனால் நான் எல்லோரையும் பார்ப்பேன், எல்லாவற்றையும் பார்ப்பேன். சரி, சரி, பழையபடி ஆரம்பத்துக்கு வருவோம்.

விசாலமான வீதி வழியாக நடந்து சென்றேன் எனக் கூறினேன் அல்லவா? உயர்ந்த மரங்கள் நடுவே பெரிய பல அடுக்குகளைக் கொண்ட மாளிகை ஒன்று காம்பீரமாக நின்றது. மாளிகையின் முன்னே "ஈண் இல்லம்" என்ற பெயர்ப் பலகை இருந்தது. அதன் கீழே இங்கு பிள்ளைகள் பெற்றுக் கொடுக்கப் படும் " என்ற இன்னொரு அட்டையும் காணப்பட்டது. வாயிலில் இருவர் மனித உடலும் நாய்முகமுமாகக் காவல் புரிந்து கொண்டிருந்தனர். அப்போ இவர்கள்தான் காவல்கார வர்க்கமா? மின்னியல் படலை திறந்த பொழுது நான் மெல்ல நழுவி உட்சென்று விட்டேன்.
பெரிய மாளிகை.
உடற்பயிற்சிக் கூடத்திலே
கர்ப்பம் தரித்த பல பெண்கள்
மாடு போன்ற தலையுடன் நின்று
பல்வேறு வகையான அப்பியாசங்களைச்
செய்து கொண்டிருந்தனர்.
இவர்கள் எல்லோருமே
மகப்பேற்றுக்கு அனுசரணையாக
இருக்கும் விதமாய் அப்பியாசங்கள்
செய்து கொண்டிருந்தனர்.
அப்படியே விறாந்தை பக்கமாக
நடந்து சென்று அலுவலக அறை
யினை அடைந்தேன். அதன்
வெளியே பலர் சோடியாகவும்,
தனித்தனியேயும் ஆசனங்களில்
காத்திருந்தனர்.




தொடர்ச்சி 20 ம் பக்கம்

RKL IMMO.de IMMOBILIEN & BAUFINANZIERUNG

Sinnadurai.Kiritharan
Umsatzsteuer ID.-Nr. DE186406298 | Berufserlaubnis erteilt am 08.01.2002
Sinnadurai Kiritharan|Tel. 05723-914519| www.rklimmo.de|info@rklimmo.de
Baufinanzierung / வீடு வாங்குவதற்க்கு தேவையான கடன்கள்:100% Free service
Umfinanzierung / வீடுக்கடனை எம்மிடம் மாற்றுதல் 100% Free service
Ratenkredit / தனிநபர் கடன் 100% Free service
Sonderfinanzierung / பலவிதமான கடன் வசதிகள்
Immobilien / வீடு விற்க இல்லையேல் வாங்குவதற்கான ஒழுங்குகள்
Full Service / முழுமையான சேவை
நம்பிக்கை! உத்தரவாதம்!! 15 வருட அனுபவம்!!!
மேலதிகவிபரங்களிட்கு Tel. 05723-914519 or www.rklimmo.de
or www.lankasri.com

மங்கல இசைக் குழு
நாதஸ்வர இன்னிசைச் செல்வன் N.K.ரகுராமன்


உங்கள் அனைத்து மங்கள வைபவங்களையும்
நாதஸ்வர தவில் கானமழையில் நனைத்திட தவில் மேதை
அளவையூர் குமரகுரு அவர்களின் புதல்வன்
நாதஸ்வர இன்னிசைச்செல்வன்
N.K.Raguraman
Dresdener Str.6
50126 Bergheim
Germany
0049 2271 670236
Mob: 0049 157 89 15 95 71

அனைவருக்கும் எமது நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்கள்
Lebara play
150 க்கும் மேற்பட்ட டிவி அலைவரிசைகள், 3000திற்கும் மேற்பட்ட திரைப்படங்கள்
Miss it? Love it? Play it?
TV
KERVEN GMBH
Rheinische Str.64 Dortmund : DE
www.keerven-Gmbh.com
E-Mail:info@kerven-Gmbh.com
Germany Tel :0231 17721820 Mob: 0151 25406191
France Tel: 09 77 18 59 11 Mob: 0754 11 20 20
UK : 0208 123 7558 Mob: 075 34 037 670
ANDROID APP ON Google play
100% LEGAL
HD/SD QUALITY
lebera.com/play/terms-conditions


# தாயகத்தில் கடைகளில் இனித் தேநீரில் சீனி கலந்து கொடுப்பதற்கு தடை!



## கள்ளச்சாராயத்தில் எது வேண்டுமானாலும் கலக்குங்கள் ஆனால் தேநீரில் சீனி கலக்காதீர்கள்.



இப்போது எல்லாம் ஒருவரது இல்லத்திற்கு விருந்தினராகச் சென்றால் ஒன்று தருவதற்கு நூறு கேள்விகேட்பார்கள். அது ஆரோக்கியமாக இருக்கலாம். ஆனால் இல்லத்தவரது தனித்தவம் மறைந்து விடும். விருந்தினர் வந்ததும் முதல் சொல்வது வாங்கோ வாங்கோ அடுத்து இருங்கோ அதனைத் தொடர்ந்து தேநீரா? காப்பியா? தேனீர் என்றால் பால்விட்டா பால்விடாமலா? பால்காச்சியா? பால்சாச்சாமலா? சீனியா சீனிபோடாமலா? அல்லது சீனி ஒன்றா அல்லது இரண்டா? சுக்கீரனா இல்லைச் சக்கரையா பனங்கட்டியா? கோப்பி என்றாலும் இதே கேள்விகள் அதில் ஒன்று அதிகமாக இருக்கும் அதாவது இலங்கை கோப்பியா அல்லது நெஸ்கோபியா?

இப்படி யா? யா? என்று யார் வந்தாலும் கேட்கும் காலம் வெளிநாடுகளில் ஆரம்பிச்சு வைத்தார்கள் தற்போது நம் நாட்டு படலையையும் தட்டுகிறது இந்தப்பழக்கம். அதுவும் சட்டமாகத் தட்டுகிறது. இனி யாழ்ப்பாணம் தேநீர் கடைக்குப்போனால் குடித்தோமா போண்டா சாப்பிட்டோமா என்று வந்துவிட முடியாது ஒருசில கேள்விகளுக்கு பதில் அளிக்கவேண்டும். அல்லது அவர்கள் சீனியைத் தனியாகக் கொடுக்க வேண்டும். விரும்பியபடி போடுங்கள் என்று. இதோ விரிவான செய்தி யாழ்ப்பாணத்தில் இருந்து விரிவுரையாளர் லலீசன் அவர்கள் தருகிறார்கள்.

தேநீர் வழங்கும் போது,தேநீருக்குள் சீனியை கலக்காது,பிறிதொரு பாத்திரத்தில் சீனியை வைத்து தேவையான அளவு கலந்து கொள்ளும் விதத்தில்,ஹோட்டல்கள், தேநீர்ச்சாலைகள், சிற்றுண்டிண்டிச்சாலைகளில் வழங்குவது அவசியம், என சுகாதார அமைச்சின் விசேட சுற்று நிருபம் அறிவித்துள்ளது

.உலக சிறுநீரக நோயாளர் தினத்தை (14.11.2015) முன்னிட்டு, இவ்விசேட விதிகள் நடைமுறைப்படுத்த உள்ளதாக ,சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் பாலித மகிபால அவர்கள் தெரிவித்துள்ளார். சுகாதார சேவை, மாவட்ட சுகாதார அத்தியட்சகர்கள், சுகாதார நிறுவன முக்கிய ஸ்தர்கள்,சுகாதார வைத்திய அதிகாரிகள்,மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரிகள் போன்றோருக்கு குறைந்த சீனிபாவனையால் நோயற்ற நாட்டை உருவாக்கும் திட்டமாக, இச்சுற்று நிருபத்தில் அறிவுறுத் தப்பட்டுள்ளது. இதன்படி நாளை முதல், சகல அரச நிறுவனங்களிலும் கூட்டங்கள், வைபவங்கள், பயிற்சிப்பட்டறைகள் . நிகழ்வுகள் நடாத்தப்படும் போது, இடம் பெறும் உபசரிப்புகளில் ,சீனி கலக்காத தேனீர்,கோப்பி,பால் கலந்த தேநீர் போன்றன வழங்கப்படல் வேண்டும். அத்துடன் பாட சாலைகள், சிற்றுண்டிச் சாலைகளில் அதிக உப்பற்ற ,அதிக எண்ணெய் கலக்காத ,அதிக சீனி அற்ற உணவு,பானங்கள் வழங்கப்படல் வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. கள்ளச்சாராயத்தில் எது வேண்டுமானாலும் கலக்குங்கள் ஆனால் தேநீரில் சீனி கலக்காதீர்கள். இது மக்களில் சில சந்திப்பேச்சாக உள்ளது.

## பணிவு பக்தி துணிவு

15ம் பக்க தொடர்ச்சி....

மேடையில் வீற்றிருந்த கலைஞர்கள் அத்தனை பேரும் முப்பது முப்திமூன்றைத் தாண்டாத இளம் முத்துக்கள். இவர்களைப் பார்க்கும்போது நாம் அன்று தாயகத்தில் இப்படி முற்றிலும் இளைஞர்களாக அமர்த ஞாபகம் இல்லை.அதற்கு காரணம் கலைகளில் அதிகம் ஈடுபட்டால் கல்வி கலைந்துவிடும் என்ற ஒரு வித அச்சம் அன்றய சூழலில் நம்மைச் சூழ்ந்தே இருந்தது. இன்று அங்கு இருந்த அந்த அச்சம் இங்கு இல்லை. அதனால் மேலைத்தேசத்தில் அதாவது இங்கு, இளையவர்கள் மேடையில் கலை மேதைகளாக இருக்கும் பாக்கியம் கண்டு இங்கு உள்ள பெற்றோர்கள் பெருமிதம் கொள்ளவேண்டும். எப்படி சங்கீதரத்தினம் ச.பிரணவநாதன் அவர்களுக்கு ஒரு மாணவனாக அனுசாந்த் வாய்த்தாரோ! அதுபோல் அனுசாந்துக்கும் சங்கர்ஷன்சர்மா ஒரு சிறந்த மாணவனாக வாய்த்துள்ளார்.

ஒரு மாணவனுக்கு குருவும், குருவிற்கு மாணவனும் சிறப்பாக அமைவதென்பது பூர்வபுண்ணியமாகும். இங்கு அந்தப் புணியத்தின் பயன் அரங்கேற்றத்தில் தெரிந்தது.

சங்கர்ஷன் சர்மாவின் விரல்களுக்குள் மிருதங்கத்தின் ஒலி துல்லிய மாக விளையாடியதை அவதானிக்க முடிந்தது. பணிவு ஆர்வம் குருபக்தி இவை சங்கர்ஷன்சர்மா சிறந்த அணிகலங்கள். குருவான அனுசாந்த் அவர்களிடம் இளம் வயதாக இருந்தாலும், ஒரு முதுபெரும் கலைஞனுக்குரிய பரிவு பாசம் அக்கறை இவற்றை தனது மாணவன்மீது காட்டியதை மேடையில் பல நேரங்களில் அவதானிக்க முடிந்தது. அரங்கேற்றம் சிறப்புற நிறைவுற்றதை உறுதிப்படுத்தி சான்றிதழை எசன் நுண்கலைக்கல்லூரி சங்கர்ஷன் அவர்களுக்கு வழங்கியது.

வெற்றிமணி பத்திரிகை சங்கர்ஷன்சர்மா அவர்களுக்கு 65 வருட வரலாறு கொண்ட வெற்றிமணி வளர்கலை விருது கொடுத்துக் கௌரவித்தது. அரங்கேற்ற நாயகன் சங்கர்ஷன் சர்மா கலைவாழ்வில் சிறக்க பல ஆலயங்களின் நிர்வாகசபையினரும் உலகக்கோவில் இணையத்தளம் இன்னும், பல கலை நிறுவனங்களும் கௌரவம் செய்து மகிழ்ந்தனர்.

**படங்கள் : கோணேஸ் செந்தில்.**







18ம் பக்க தொடர்ச்சி....

# 500 டாக்டர்களை ......



முதல் எண் அழைக்கப் பட்டதும் இரு இளவயதினர் எழுந்தனர். மிக்க நெருக்கமாக ஒருவரை ஒருவர் தழுவியபடி சென்றதோடல்லாமல் இருந்த இடத்திலிருந்து அலுவலகத்தின் உள்ளே புகுவதற்கு முன் ஒருவரை ஒருவர் மூன்று முறையாகிலும் முத்தம் கொடுத்திருப்பார்கள்.

அவ்வளவு அந்நியோன்யமான தம்பதிகள் போலும் ஆனால் இருவருமே ஆண்கள். எனவே என்ன நடக்கப் போகிறது எனத் தெரிந்து கொள்ளும் ஆவலிலே நானும் தொடர்ந்தேன். உள்ளே சென்றார்கள். அலுவலர் இவர்களை முகமன் கூறி வரவேற்றதும் வந்த விஷயம் பற்றி விசாரித்தார். அவர்களில் கணவன் போன்றவர் தமக்கு ஒரு குழந்தை வேணும் எனக் கூறினார் உடனே அலுவலர் கணினியின் ஒரு பொத்தானை அமுக்க, பெரிதாக திரையிலே காட்சி.
உங்கள் உடற்கலம் ஒன்றினை எடுத்து முளைவகையாக்கல் ( cloning) மூலம்விருத்தியுறச் செய்தல். இக் குழந்தை எப்பொழுதும் ஆண்குழந் தையாகவே பிறக்கும்.
ஒரு பெண்ணிடம் முட்டை ஒன்றினை விலைக்கு வாங்கி அதனை உங்கள் ஒருவரின் விந்துவால் கருக்கட்ட வைத்து விருத்தியுறவைத்தல். இக்குழந்தை ஆணாக வருமா பெண்ணாக வருமா எனச் சொல்வதற்கில்லை.

ஒரு பெண்குழந்தை வேண்டுமாயின் பெண் ஒருவரிடம் முட்டை ஒன்றினை விலைக்கு வாங்கி அம் முட்டையைக் கன்னிப்பிறப்பின் ( Parthenogenisis) மூலம் விருத்தியுறவைக்க வேண்டும்.
விருத்தி தூண்டப்பட்ட இம் முளையங்கள் மேற்கொண்டு விருத்தியை நடத்துவதாயின் அவை பதிக்கப்படல் வேண்டும். அதனை
உங்கள் உடற் குழியின் உள்ளே பதித்து குறிப்பிட்ட காலத்தில் அறுவைச் சிகிச்சை மூலம் வெளியே எடுக்கலாம்.
ஈன்றாள் ( Surrogate) ஒருத்தியுடன் ஒப்பந்தம் செய்து அவளிடத்தில் முளைய விருத்திக்கான பொறுப்பினை ஒப்படைக்கலாம்.

அலுவலர் தமது ஈண் இல்லம் இத்தகைய தொண்டாற்றுதற்காகவே உருவாக்கப் பட்டது எனவும் அதற்காகவே தாம் மாதச் சம்பளத்தில் ஈன்றாள் பெண்களை வைத்திருப்பதாகவும், வைத்தியர்களுடைய கண்காணிப்பில் அவர்களது ஒவ்வொரு செயலும் நடை பெறும் என்றும் எடுத்துக் கூறினார். அவர்கள்தான் உடற்பயிற்சிக் கூடத்தில் நின்று அப்பியாசம் செய்யும் மாட்டுப் பெண்கள் என அறிந்து கொண்டேன். அதற்கான உத்தேச செலவினையும் எடுத்துக் கூறினார். அப்போ சரியாக நேரம் காலை 10:00 மணி. ஆலயமணியின் ஓசை போன்று மூன்று முறை கேட்டது. உட்காந் திருந்தவர்கள் எல்லோரும் பயபக்தியுடன் எழுந்து நின்றார்கள். தமது தலையினை ஒரு வெண்ணிற கைக்குட்டையால் போர்த்தியபடி ஒரே திசையில் அமைதியாக நடந்து சென்றனர். நானும் பின் தொடர்ந்தேன். அவர்கள் யாபேரும் ஒரு பெரிய விசாலமான ஆலயத்தின் உள்ளே சென்றனர். கறுத்த அங்கி அணிந்த ஒருவரே பூஜ்ஜர். சிறிது நேரத்தில் அவர் பாடத் தொடங்க எல்லோரும் அவருடன் சேர்ந்து பாடினார்கள்.

உலகத்து நாயகனே - எங்கள் நொஸ்றாடேமஸ்
உன்பாதம் சரண்புகுந்தோம் - எங்கள் நொஸ்றாடேமஸ்
எல்லோரும் பக்திசிரத்தையுடன் பாடியபின்னர் மீண்டும் தமது அலுவல கங்களை நோக்கிச்சென்றனர். அனாவசியமாக கூட்டம் கூட்டமாக நின்று பேசி நேரத்தை வீணாக்கவில்லை. எனக்கும் சிறிது சிறிதாக விஷயம் புரியத் தொடங்கியது.
இது ஒரு புதிய சமயம். கிறுக்கன் நொஸ்றோடேமஸ் என்று அன்று ஏளனம் செய்த அவர் இன்று வணக்கத்துக்குரிய தெய்வமாகிவிட்டார். விரைவிலே மனிதன் நீரில் வாழும் மனித இனத்தை ( Aqua- humanis) உருவாக்குவான் என நொஸ்றாடேமஸ் ஆரூடம் கூறினார்.

இதோ என் கண்முன்னே அதற்கான முதல் படிகளாய் மாட்டுத்தலையுடன் மனிதர்களையும் ( Bovi- humanis) நாய்த் தலையுடன் கூடிய மனிதர் களையும் ( Canis humanis) காண்கிறேன். நொஸ்றா டேமஸ் வணக்கத்துக்குரியவர் தான்! மறுப்பதற்கில்லை.!
ஆலயத்தை விட்டு வெளியேறிய நான் சிந்தித்த படியே கால்போன போக்கில் நடந்து செல்கிறேன்.

வேகமாக வந்த மோட்டார் வண்டி ஒன்று ஒரு பெரிய வியாபாரமையத்தின் முன்னர் சடுதியாக நிற்கிறது.
நிமிர்ந்து பார்க்கிறேன். "ஈசன் மனித உதிரிப்பாக விற்பனை மையம்" என்ற பெயர்ப் பலகை காணப் படுகிறது. பல நாடுகளிலே 2050 ஆண்டு வாக்கிலே மருத்துவ முளைவகையாக்கல் (Clinical Cloning) சட்ட இரீதியாக அனுமதிக்கப் பட்டமையால் முளைய விருத்தி நடாத்தப் பட்டு உதிரிப் பாகங்களுக்காகவே முளையங்கள் வளர்க்கப் படுகின்றன.

எந்த உடலுறுப்பும் தேவைக்கு ஏற்றபடி வியாபார மையங்களில் பெறக் கூடியதாக உள்ளது.
மோட்டார் வண்டியில் வந்தவர் விற்பனை மையத்தின் உள்ளே சென்று "O" வகை இடப்பக்க சிறு நீரகம் ஒன்று தரமுடியுமா என சிப்பந்தியிடம் கேட்டார். "O" வகை எடுப்பது கொஞ்சம் சிரமம் என்றும் அதற்கு இரட்டிப்பு விலை கொடுக்க வேண்டும் எனவும் சிப்பந்தி கூறினார். வந்தவர் கொஞ்சம் பசை உள்ள ஆசாமி போலும். விலையைப் பற்றிக் கவலை இல்லை நல்லதாக ஒன்று தரமுடியுமா என்றார். அச்சமயம் அவருடன் ஒட்டி நின்ற அவர் மனைவி அவர் காதினுள் கடித்தார்.

வீதியின் எதிர்ப் புறத்தில் உள்ள விற்பனை மையத்தைக் காட்டி அங்கே சேல் ( sale) நடை பெறுகிறதாம், ஒருக்கால் அங்கேயும் போய்ப் பார்த்து விட்டு வாங்கினால் என்ன என்றார். அதுவும் சரிதான் என அப்பக்கம் நோக்கி இருவரும் நடந்தனர். அந்நேரம் பார்த்து எனது செல்லிட பேசி ( cell phone) "கிணிங் கிணிங்" என்றது. எடுத்துக் காதில் வைத்தால். அங்கே மடப் பள்ளியில் பெரிய ரகளையாம் எனது விடுப்பு இரத்தாகிவிட்டதாம். உடனடியாக வேலைக்கு ஆஜர் செய்யும் படி இயம தர்மராஜனின் உத்தரவு. இனி ஒன்றும் செய்வதற்கில்லை.







கதை சொல்ல ஓர் கதை...




## நம்மால் முடியும்!

ஒரு நிறுவனத்தின் தலைவருக்கு தன் நிறுவனத்தில் சில தவறுகளால் 50 கோடிகள் நஷ்டம் ஏற்பட்டுவிட்டது. மிகவும் சோர்ந்து போய் அருகில் இருந்த பூங்காவிற்கு சென்றுஅங்கிருந்த சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்தார்.

அப்போது சற்று பெரிய மனிதர் போல தோற்றம் உடைய ஒருவர் இவருக்கு அருகில் வந்து அமர்ந்தார். இவர் சோகமாக அமர்ந்திருப்பதை கண்டு " ஏன் சோகமாக இருக்கிறீர்கள் " என்று கேட்டார்.

அதற்கு இவர் " எனது தொழில் நஷ்டம் அடைந்து விட்டேன். மிகவும் மனது உடைந்து போய்விட்டேன் " என்றார்.
" எவ்வளவு ரூபாய் நஷ்டம் ? " என்றால் அவர்.

" 50 கோடி ரூபாய் " என்றார் இவர். " அப்படியா, நான் யார் தெரியுமா ? " என்று கேட்டு அந்த ஊரின் பிரபல செல்வேந்தரின் பெயரை சொன்னார். அசந்து போனார் இவர்...

" சரி 50 கோடி பணம் இருந்தால் நீ சரியாகி விடுவாயா ? " என்று கேட்டார் அவர். உடனே முகமலர்ச்சியுடன் இவர் " ஆமாம் எல்லாம் சரியாகி விடும் " என்றார்.
பின் அந்த செல்வேந்தர் ஒரு செக் புத்தகத்தை எடுத்து கையெழுத்திட்டு இவரிடம் நீட்டி " இந்தா இதில் 500 கோடிக்கு செக், நீ கேட்டதைவிட 10 மடங்கு அதிகமாக கொடுத்திருக்கிறேன். எல்லாவற்றையும் சமாளி. ஆனால் ஒருவருடம் கழித்து இந்த பணத்தை எனக்கு திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். அடுத்த வருடம் இதே நாளில் இங்கே நான் காத்திருப்பேன் " என்று சொல்லி விட்டு செக்கை இவர் கைகளில் திணித்து விட்டு சென்றார் அவர்.

பின் அந்த நிறுவனத்தின் தலைவர் வேகமாக அலுவலகத்திற்கு சென்றார். தன் அறைக்குள் சென்று அந்த செக்கை
தனது பீரோவில் வைத்து பத்திரமாக பூட்டினார்.



பின் தனது உதவியாரை அழைத்து அனைத்து ஊழியர்களை நிர்வாக கூட்டத்திற்கு அழைத்து வர ஏற்பாடு செய்ய சொன்னார். ஊழியர்கள் அனைவரும் கூட்டத்தில் அமர்ந்திருந்தனர்.

இந்த நிறுவனத்தின் தலைவர் பேச ஆரம்பித்தார். " நண்பர்களே, நமது நிறுவனத்தில் 50 கோடி நஷ்டம் ஏற்பட்டுள்ளது. ஆனால் இப்போது என்னிடம் 500 கோடி ரூபாய் உள்ளது ஆனால் அந்த பணத்தை தொடமாட்டேன். இந்த நஷ்டம் எப்படி

ஏற்பட்டது ? எதனால் ஏதற்காக ஏற்பட்டது ? என்று ஆராய்ந்து அதை களைந்து நமது நிறுவனத்தை வெற்றிகரமாக
செயல்படுத்த நீங்கள் அனைவரும் ஒத்துழைப்பு கொடுங்கள் " என்று கேட்டுக் கொண்டார்.பின்னர் வேலைகள் வேகமாக நடந்தன.

தவறுகள் கண்டுப் பிடிக்கபட்டு களையப்பட்டன. மிக சரியாக அனைத்து ஊழியர்களையும் ஒத்துழைக்க வைத்தார். அவருடைய பேச்சு மூச்சு செயல் சிந்தனை தூக்கம் அனைத்து அவருடைய தொழிலை பற்றியே இருந்தது.

மிக சரியா ஒரு வருடம் கழிந்தது. கணக்குகள் அலசப்பட்டன. மிக சரியா 550 கோடி ரூபாய்கள் லாபம் ஈட்டி இருந்தது இவருடைய நிறுவனம். அடுத்த நாள் விடிய காலை அந்த செல்வேந்த கொடுத்த 500 கோடிக்கான செக்கை எடுத்துக் கொண்டு அந்த பூங்காவிற்கு விரைந்தார்.

தொடர்ச்சி 23ம் பக்கம்

## நானே ஒரு பீரங்கி..





மாவீரன் நெப்போலியன் வீரம் இன்றும் அணையாது பிரான்ஸ் நாட்டில் அணையாத தீபமாகச் மக்கள்மனதில் சுடர்விட்டவண்ணம் இருக்கிறது. அந்த வீரனைச் சிறைப்பிடித்த வேளை அவனது வீரத்தைக் கொச்சைப் படுத்த எண்ணிய எதிரிகள், ஒரு திட்டம் தீட்டினர்.

அதாவது அவரை ஒரு பயந்தாங்கொள்ளியாக எள்ளிநகையாட ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தினர்.
அவருக்கு ஒருவர் தேனீரை ஒரு கோப்பையில் அவரின் கையில் கொடுக்கும் போது, அவர் அருகில் மறைத்துவைத்த ஒரு பீரங்கியை வெடிக்கவைக்க வேண்டும் என்பதே அத்திட்டம்.

அப்படி அப்பீரங்கியானது திடீர் எனவெடிக்கும் போது உண்டாகும் பயங்கரச் சத்தத்தில் தேனிரை நெப்போலியன் நடுக்கத்தில் போடுவார், அப்போது எல்லோரும் அவரைக் கேலிசெய்வோம், எனத் திட்டம் தீட்டிச் செயல்பட்டனர். ஒருவர் தேனீருடன் வந்து நெப்போலியனுக்கு அதனைக் கொடுக்கும் நேரம் பிரங்கி சொல்லிவைத்தாற்போல் வெடித்தது. ஆனால் கேலிசெய்யத்தான் எவரும் நிற்கவில்லை. வெடிக்கப் போகின்றது என்று முன்கூட்டியே தெரிந்த மற்றவர்கள் எல்லாம் நடுங்கி நிலத்தில் சரிய, நெப்போலியன் மட்டும் நிமிர்ந்தே நின்றார்.
அப்போது அவர்கள் ஆச்சரியத்துடன் எப்படி இந்த திடீர் சத்தத்தை அதாவது பிரங்கியின் வெடிச்சத்தத்தை உங்களால் தாங்க முடிந்தது என்று வினாவினர். அவர் இறுமாப்புடன் பதிலளித்தார்.
இப்போ வெடித்ததே நான் என்றார். நானே ஒரு பிரங்கி எனக்கு நடுக்கமா? என்று கேலிபண்ணக் காத்திருந்தவர்களை கேலியாகப்பார்த்துச் சிரித்துக் கொண்டார். அந்த மாவீரனுக்கு நஞ்சு ஊட்டப்பட்டு பின்னர் கொலை செய்யப்பட்டதாக கருதப்படுகிறது.



# யாரைத்தான் விட்டுது முதல் காதல்!




தன்னுடைய முதல் காதலை என்னால் என்றுமே மறக்க முடியாது என்று தமிழ் சினிமாவின் முன்னணி நடிகைகளில் ஒருவரான நயன்தாரா கூறியிருக்கிறார். தமிழ் சினிமாவில் ஹாட்ரிக் நாயகி என்ற அந்தஸ்தை தக்க வைத்துக் கொண்டிருக்கும் நயன்தாரா கைவசம் தற்போது ஏராளமான படங்கள் உள்ளன.

நடிக்க வந்து 12 வருடங்களுக்கு மேல் ஆனாலும் ,ன்னும் முன்னணி நடிகையாக திகழ்ந்து வரும் நயன்தாரா சமீபத்தில் தனது முதல் காதல் குறித்து மனந்திறந்து கூறியிருக்கிறார். நயன் தாராவின் முதல் காதலைப் பற்றி இங்கே காணலாம்.

முதலில் சிம்புவைக் காதலித்து அந்தக் காதல் என்ன காரணத்தினாலோ முறிந்து போனது. பின்னர் தன்னை விட 1 மடங்கு வயது அதிக மான பிரபுதேவாவை காதலித்தார். எல்லாம் நன்றாகப் போய் திருமணம் செய்யும் சமயத்தில் பிரபுதேவா தனது குழந்தைகளை மறக்க முடியவில்லை என்று கூறியதால் 2 வது காதலும் முறிந்து போனது. தற்போது 3 வதாக இயக்குநர் விக்னேஷ் சிவனைக் காதலித்து வருகிறார். இந்த நிலையில் தனது முதல் காதல் அனுபவம் பற்றி நயன்தாரா மனம் திறந்து கூறியிருக்கிறார்.

முதல் காதல் "ஆணாக ,இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் அவர்களின் முதல் காதல் எப்போதும் மனதில் நிற்கும். எந்த வயதிலும் அந்த காதல் வரலாம். வாழ்நாள் முழுவதும் அந்த காதலை மறக்க மாட்டார்கள்

என்னுடைய முதல் காதல் எனக்கும் சிறு வயதில் அப்படி ஒரு காதல் அனுபவம் ஏற்பட்டது. அப்போது நான் மூன்றாம் வகுப்பு படித்துக் கொண்டு இருந்தேன். அந்த பள்ளிக்கூடம் ஆண் களும், பெண்களும் சேர்ந்து படிக்கக் கூடியது. நான் பையன்கள், பெண்கள்

எல்லோரிடமும் சகஜமாக பழகுவேன். இதனால் எனக்கு நிறைய நண்பர்கள் இருந்தனர். ஒரு பையனைத் தவிர அனைவரும் என்னுடன் நட்போடு பழகினார்கள். நான் வகுப்புக்கு செல்லும் போதெல்லாம் எனது இருக்கை முன் உள்ள மேஜையில் ஒரு காதல் கடிதமும், ரோஜாப்பூவும் இருக்கும். முதல் நாள் அதை பார்த்து பதற்றமாக ,இருந்தது. தோழியிடம் சொன்னேன். பெரிது படுத்தாதே விட்டுவிடு என்றாள்.

பள்ளி முதல்வரிடம் புகார் முதல் நாளோடு நிற்கவில்லை, மறுநாளும் அதேபோல் ரோஜாவும் காதல் கடிதமும் மேஜையில், இருந்தது. ஒவ்வொரு நாளும் ,இது தொடர்ந்தது. ,இதனால் பயந்து போனேன். வீட்டில் எனது அம்மா, அப்பாவிடம், இதனை சொன்னேன்.

அவர்கள் பள்ளிக்கு வந்து முதல்வரிடம் புகார் செய்தார்கள். அவர் விசாரணை நடத்தி ஏழாம்




வகுப்பில் படிக்கும் மாணவன் ஒருவன்தான் தினமும் காதல் கடிதமும் ரோஜாப்பூவும் வைத்த வன் என்று கண்டுபிடித்தார். அவனை கடுமையாக திட்டி கண்டித்தார்.

முகத்தைத் திருப்பிக்கொண்டு அதன்பிறகு அவன் என் வழிக்கே வரவில்லை.

என்னைப் பார்க்கும் போதெல்லாம் முகத்தை திருப்பிக்கொண்டு போய்விடுவான்.
அந்த வயதில் அவனுக்கு காதல் பற்றி என்ன தெரியும். அதை, இப்போது நினைத்தாலும் எனக்கு வியப்பாக ,இருக்கிறது. அதை என்னால் மறக்கவே முடியாது"". ,இவ்வாறு நயன்தாரா தனது முதல் காதல் குறித்து வெளிப்படையாக கூறியிருக்கிறார்.

எனது முதல் காதலை எப்போதும் மறக்க முடியாது அட அப்படி என்றால் சிம்பு முதல்காதல் இல்லையா?
சரி சரி இப்ப சும்மா இருந்த அந்த ஏழாம்வகுப்பு பையனை மறக்கமுடியாது என்று சொல்லி அவனை மீண்டும் உசுப்பேத்தியிருக்கிறாரா நயந்தரா..



# யேர்மனியில் மாணவர்களின் கல்வியும் கலையும்!

**றஜினா தருமராஜா**

கல்வியும் கலையும் நம் இரு கண்கள் என்ற எங்கள் தமிழாலயத்தின் ஒரு மணிவரியுடன் ஆரம்பிக்கின்றேன்.
தமிழ்க்கல்விக் கழகத்தில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ்மாணவர்கள் பலர் தமிழ்மொழியை விரும்பிக் கற்கின்றார்கள். அவர்கள் அங்கு தமிழ்திறன் போட்டிகளான திருக்குறள் ஆத்திசூடி கொன்றை வேந்தன் போன்ற மனனப்போட்டிகள் எழுத்துப்போட்டிகள் உரையாற்றல், கவிதை ஓவியம் போன்றவற்றில் பங்குபற்றி தங்கள் திறமைகளை வெளிக்கொண்டுவந்து வெற்றி பெறுகின்றார்கள்.
இவ்வெற்றியானது தமிழ்மொழிக்கு மட்டுமல்லாது அவர்களது வாழ்வின் வழியிலும் வெற்றியைக்குவிக்கவல்லனவாக அமைகின்றன.
மனனப்பாடம், மனதை ஒழுங்குபடுத்தவும். ஞாபக சக்தியை வலுப்படுத்தவும். பேருதவி புரிகின்றது. தமிழ்மொழியில் சிந்திப்பது அதாவது தாய் மொழியில் சிந்திப்பதும் அவர்களுக்கு ஒருவித நம்பிக்கை கலந்த உத்வேகத்தை கொடுக்கின்றது.
மேலும் தமிழ் கற்பவர்கள் பல்கலைக்கழகங்களில் மேலும் மேலும் ஜொலிப்பதை இன்று காணமுடிகின்றது. அது மட்டுமன்றி நம்மில் பலர் மிருதங்கம் புல்லாங்குழல் வீணை நாடகம். சங்கீதம் போன்ற பல கலைகளிலும் வளர்ச்சி உற்றுவருவது மகிழ்ச்சிக்குரியது.

பல நெருக்கடிகள் மத்தியிலும் மாணவர்கள் கல்வியும் கலையும் இருகண்களாக போற்றிக் கற்றுவருகின்றனர்.
உண்மையில் இக்கலைகள் வெறும் கற்பனைகள், ஒப்பனைகள் உடன் மட்டும்தான் சம்மந்தமாக உள்ளது என எண்ணவேண்டாம். உண்மையில் கல்விக்கு அத்தியாவசியமானது கலை. ஏன் எனில் கலைகள் மனிதனின் நுண்ணிய அறிவாற்றால் வளர்ப்பதும். ஆவதானிப்பு சக்தியைப் பெருக்குவதும் இந்தக்கலையே. இதனை விஞ்ஞானமும் ஒப்புக்கொள்கின்றது. மனதை ஒரு நிலைப்படுத்த யோகபோன்று இந்தக்கலையும் உள்ளது இங்கு கவனிக்கத்தக்கது. கலைகளுக்குள் மூழ்கினால் கல்வி அழிந்துவிடும் என்ற எண்ணம் புலம்பெயர்நாட்டில் தவிடுபொடியாக்கப்பட்டு கல்வியும் கலையும் கைகோர்த்து வளர்வதைக் காணமுடிகிறது.
எதிர் காலத்தில் வளரும் தலைமுறையும் தமிழ்மொழியையும்,கலை கலாச்சாரத்தையும் பின்பற்றி நடந்து வந்தால் எமது தாய் மொழி பாதுகாக்கப்படும்.

21 ம் பக்கத் தொடர்ச்சி...

## நம்மால் முடியும்!



காலை நேரம் ஆதலால் பனி மூட்டத்துடன் காணப்பட்டது. சற்று நேரம் கழித்து தூரத்தில் அந்த செல்வேந்தரும்
அவருக்கு அருகில் அவரை கைகளால் பிடித்துக் கொண்டு ஒரு பெண்மணியும் வந்தது பனி மூட்டத்தின் ஊடே தெரிந்தது.
சில விநாடிகள் கழித்து பார்த்தால் அந்த பெண்மணி மட்டும் வருகிறார் அந்த செல்வேந்தரை காணவில்லை.
இவர் சென்று அந்த பெண்மணியிடம் " எங்கே அம்மா உங்கள் கூட வந்தவர் ? " என்றார்
அதற்கு அந்த பெண்மணி பதட்டத்துடன் " உங்களுக்கு அவர் ஏதாவது தொந்தரவு கொடுத்து விட்டாரா? " என்றார்
இவர் " இல்லை அம்மா, ஏன் கேட்கிறீர்கள் ?" என்றார்.
அந்த பெண்மணி " இல்லை அய்யா அவர் ஒரு பைத்தியம் அதாவது மனநிலை சரி இல்லாதவர், செக்கு தருகிறேன் என்றுசொல்லி இங்கு இருப்பவர்களிடம் தனது பழைய செக்கை கிழித்து கையேழுத்திட்டு கொடுத்து விடுவார் " என்றார்.

ஒரு நிமிடம் அந்த நிறுவன தலைவருக்கு பேசமுடியவில்லை. அப்போ நம்மால் முடியும் என்று நினைத்தால் நிச்சயம் முடியும். அதுவே நம்மை காப்பாற்றி இருக்கிறது என்று நினைத்தார்.
இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்வென்றால் எந்த ஒரு விசயமும் நம்மால் முடியும் என்று முதலில் நம் நம்பவேண்டும் அப்போதுதான் நாம் நமது வாழ்வில் முன்னேற முடியும்.
" வாழ்வில் நீ முன்னேறு - நாளை நீ வரலாறு. " என்ற கூற்று நிச்சயம் ஒருநாள் உண்மையாகும்




### கதையும் கடிதமும்

செல்வா மீது அவனது மாமா மாமி கடும் கோபம் கொண்டிருந்தார்கள்.

செல்வா தனது சிறுகதை ஒன்றில் மாமனராப் பற்றி தரக் குறைவாக எழுதியதே அதற்குக் காரணம். அதற்கு மாமனார் தனது எதிர்ப்பை இப்படித் தெரிவித்தார்.

' தம்பிக்கு என்னைப் பற்றித் தெரியேல்லை. என்ரை மகளைப் பற்றி ஒரு கடிதம் உவருக்குப் போட்டன் எண்டால், உவற்ரை குடும்பம் பிரியும்.'--------------------

நீங்கள் புதிய மனை அமைக்கவோ, கடன் பெறவோ, எதுவானாலும் உடனடி உதவி எங்களிடம் உண்டு
சுபா(Schufa) தடங்கல் இருந்தாலும் உங்கள் புதிய முயற்சிக்கு நாங்கள் இருக்கின்றோம்!
தற்போதைய வீட்டுக்கடனை அல்லது (தனிநபர்)கடனை குறைந்த வட்டிக்கு மாற்றுதல்
"Umschuldung"
வீட்டுக்கடன்
1,6%
வட்டிவீதத்திலிருந்து
உங்கள் சொந்த வீட்டை புதிய தரத்திற்கு மாற்ற விரும்பினால், 60.000€ வரை உடனடி கடன் உதவி!
தொடர்புகளுக்கு:
gothab Finance
Rheinische Str. 72, 44137 Dortmund
0231/53375365
0231/13029415
0231/10876361
0152/53961138
Th. Gobinath






















**Nirubagini Magendiran LL.M.**
Vereidigte Dolmetscherin und Übersetzerin

Tamil- Deutsch
Deutsch- Tamil

மொழிபெயர்ப்பாளர்
தமிழ் – யேர்மன்
யேர்மன் – தமிழ்

Mobil: +49176-24012135
Email: nirumagendiran@hotmail.com




அனைவருக்கும் எங்கள் இனிய நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்கள்

# அடுப்படி 15




புவனம் தர்மரட்ணம்

## மட்டின் றைஸ்

**Lamb**

தே.பொருட்கள்

சம்பா அரிசி 500. கிறாம்
சீரகப் பவுடர் 1 மே.க
ஏலக்காய் 5
கராம்பு 5
கறுவா 1 அங்குல. நீளம்
கறிவேப்பிலை சிறிது

சீரகப் பவுடரைத் தவிர. மற்றப் பொருட்களைப் பவுடராக்கவும்

நெய் 2. மே.க
உப்பு தேவைக்கு ஏற்ப
Oxo. கியூப்ஸ் 2
மட்டன் எலும்பு 500.கிறாம்

**செய்யும் முறை**

எலும்பைக் கழுவி தண்ணீர் விட்டு, அவித்து தண்ணீரை எடுத்து வைக்கவும். அரிசியை நன்கு கழுவி தண்ணீரை வடிய விடவும். பின் ஒரு பாத்திரத்தில் நெய் விட்டு காய்ந்ததும் அரிசியை போட்டு 3. நிமிடம் கிளறி அதன் பின் உப்பு, எல்லா பவுடர் களையும் அரிசியுடன் சேர்த்து 2. நிமிடம் கிளறி Exo. கியூப்ஸ் ,அரிசியையும், அவித்த. மட்டன் தண்ணீருடன் அரிசி வேகும் அளவிற்கு போதுமான தண்ணீர் விட்டு மெல்லிய தீயில்வைத்து வெந்ததும் இறக்கி விடவும்.

**அலங்கரிக்க**

தே.பொருட்கள்
முட்டை 5
சோளமா முட்டை தோய்ப்பதற்கு தே.அளவு
கயூ 25
எண்ணெய் பொரிக்க. தே.அவு
றஸ்க் தூள் தே.அளவு

**செய்யும் முறை**

முட்டையை அவித்து தோல் நீக்கி குச்சியால் இடைக்கிடை குத்தி விடவும். சோளமாவை முட்டை தோய்ப்பதற்கு பதமாக கரைத்து, இதில் முட்டையைத் தோய்த்து றஸ்க் தூளில் பிரட்டி எண்ணெய் காய்ந்ததும் பொன்னிறமாக பொரித்து எடுக்கவும்.

கடைசியாக ஒரு பிளேற்றில் சாதத்தைப் பரவி முட்டையை இடைக்கிடை முழுதாக நேராக வைக்கவும். கயூவையும் லேசாக பொரித்து தூவி அலங்கரிக்கவும்.

## செல்பி சோதிடம்






கிளிச் சோதிடம்,படுக்கும் விதத்தை வைத்து சோதிடம், மற்றும் மச்சபலன் என்று எல்லாம் வந்து, இப்போ செல்பி சோதிடத்தில் வந்து நிற்கிறது உலகம்.உலகம் முழுவதும் செல்பி மோகம் பல உயிர்களை பறித்துவருகிறது. மனிதர்களின் செல்பி மோகம் ஒரு மனநோயாக மாறிவிட்டதா? என்ற நோக்கில் உலகம் முழுவது ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.

நிலைமை இப்படி இருக்க, சிங்கப்பூரை சேர்ந்த நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆய்வில், ஒருவர் எடுக்கும் செல்பி அவரது குணநலன்களையும், தற்போதைய மனநிலையையும் பிரதிபலிக்கும் என தெரியவந்துள்ளது.
செல்பியில் உங்கள் உதடுகளை குவித்துக்கொண்டு போஸ் கொடுத்திருந்தால், நீங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த முடியாதவராகவும், மனம் தொடர்பான பிரச்சனைகளை கொண்டவராகவும் இருக்கலாம்.

செல்பியை பகிரும்போது உங்கள் இருப்பிடத்தை குறிப்பிடாவிட்டால் தனிப்பட்ட வாழ்க்கையை பற்றிய விபரங்களை பொதுவெளியில் வெளியிட விரும்பவில்லை என்று அர்த்தம். கேமராவை தாழ்த்தி (லோ அங்கிள்) வைத்தபடி செல்பி எடுக்கப்பட்டிருந்தால் அவர் பழகுவதற்கு இனிமையானவர்.
செல்பியில் சிரித்தபடி இருந்தால் நீங்கள் புதிய அனுபவங்களை தேடுபவர் என்று அர்த்தம். கேமராவை நேரடியாக பார்த்தால் நீங்கள் அதிக தன்னம்பிக்கை கொண்டவர் என்று பொருள்.
உங்களுக்கு பின்னால் தூரத்தில் ஒரு அழகியையோ அல்லது அழகனையோ மங்கலாக என்றாலும் தெரியும்படி எடுத்தால் உங்கள் மனதில் சலனபுத்தி அதிகம் என்று பொருள்.
எங்கு போனாலும் எவருடன் என்றாலும் உடன் செல்பி எடுக்க மனம் பதறினால் உங்கள் மனதில் எவரும் நிலையாக நிலைக்கமாட்டார்கள் என்று பொருள்..
எனவே அடுத்த முறை செல்பி எடுக்கும்போது, நீங்கள், உங்களின் புறத்தை மட்டும் அல்ல அகத்தையும் சேர்த்தே பதிவு செய்வதை மறக்கவேண்டாம்.

## யேர்மனியில் கல்வியில் சாதனை படைக்கும் மாணவன்!



**செல்வன் ஜெறோஷன் ஜெயசிங்கம்**


ஈழத்தமிழ் மக்களிற்கு பெருமை சேர்க்கும் மற்றுமொரு மாணவனாக ஜெறோஷன் ஜெயசிங்கம்.

Düren Stiftisches Gymnasium பாடசாலையில் 12ம் வகுப்பு (A/L) படித்துவரும் மாணவனான செல்வன் ஜெறோஷன் ஜெயசிங்கம் 2015ம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் (900/848) 1.0 புள்ளிகள் அடிப்படையில் திறமைச் சித்தி பெற்றமை, அவர் வாழும் யேர்மனி டியூறன் நகரத்து மக்களிற்கு மட்டுமல்லாமல் ஈழத்தமிழ் மக்கள் அனைவருக்கும் பெருமை சேர்க்கிறது. இவரை இந்த நிலைக்கு கொண்டுவர ஊக்கமளித்த அவரது பெற்றோர்களாகிய திரு திருமதி ஜெலசிங்கம் அமுதா தம்பதியரை, தந்தையின் பிறந்தகமான முல்லைத்தீவு மண்குடியிருப்பு மக்களும் தாயின் பிறந்தகமான இளவாலை மாரீசன்கூடல் மக்களுடன் ஜெரோஷனின் சகோதரர்களும் இணைந்தே வாழ்த்துகின்றனர்.

செல்வன் ஜெறோஷன் ஜெயசிங்கம் ஏற்கனவே கணிதம் இரசாயனவியல் பாடங்களில் ஜெர்மனி தழுவியரீதியில் சிறந்த மானவர்களில் ஒருவராக தேர்ந்தெடுக்கப்பட்டு சான்றிதழ்களையும் பெற்றுள்ளார். அத்துடன் தமிழ்ப் பாடசாலையிலும் 12ம் வகுப்பில் திறமைச் சித்தி பெற்றுள்ளார். அது மட்டுமல்லாமல் காற்பந்தாட்டத் துறையிலும் சுரத்தட்டு இசைவாத்தியக்கருவி வாசிப்பதிலும் இவரது கல்வியோடு கலையார்வமும் கைவரப்பெற்றவராகத் திகழ்கிறார்.

மேலும் Münster Wetfälischs Wilhelm Universität (WWU) பல்கலைக் கழகத்தில் மருத்துவத் துறையில் தனது கல்வியைத் தொடரும் ஜெறோஷன் ஜெயசிங்கம் அவர்களை வெற்றிமணி தன் வாழ்த்தினைத் தெரிவித்து மகிழ்கிறது.


VTM MiniMarkt und Kiosk



துரித பணமாற்றுச் சேவை!
Ria MONEY TRANSFER
உலருணவுப் பொருட்கள்
கடலுணவுப்பொருட்கள்
உடன் மரக்கறி வகைகள்
இலங்கை, இந்தியா உட்பட உலகின் எந்தப்பாகளுக்கும் அதிகூடியவீதத்தில் பணப்பரிமாற்றம் செய்ய இன்றே நாடுங்கள் NSB,BOC,HNB போன்ற வங்கிகளில் நேரடியாகவும் மற்றும் அனைத்து வங்கிக்கணக்குகளுக்கும் பணமாற்றம் செய்யலாம்.
Tel 0203/98418781
E.mail :- vtm2012@hotmail.de
Neudorferstr 173
47057 Duisburg
inh:Pon.Vijayakumar
Buschhausener Str.16/18
46049 Oberhausen
Tel:0208 468 444 21



# மனமே Relax !!!

சுவீக்கா.பிரதாப் (இங்கிலாந்து)





இன்று ஆரோக்கியத்தின் மேல் அக்கறை கொள்ளாதவர்கள் யாராவது உண்டா? ஆனால் பாதி உடல் ஆரோக்கியத்தின் மட்டும் தான் நாம் அக்கறை கொள்கின்றோம். ஆம் முழு உடல் ஆரோக்கியத்திற்கு தேகப்பயிற்சி மட்டும் போதாது மனதிற்கான பயிற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.
இதற்கு எந்த பயிற்சி நிலையத்திற்கு செல்ல வேண்டும் எவ்வளவு செலவு செய்ய வேண்டும் என்று எண்ண வேண்டாம். நாம் நம் வாழ்க்கை முறையில் சில மாற்றங்களை மேற்கொள்வதன் மூலம் மன ஆரேக்கியத்திற்கு வழி செய்யலாம்.

தினமும் நாம் உடல் பயிற்சி மேற்கொள்ள வேண்டும். தேகப் பயிற்சி உடல் ஆரேக்கியத்தோடு மனதையும் சுறுசுறுப்படையச் செய்து புத்துணர்வு அளிக்கின்றது. இதற்காக நாம் கடினமான உடற்பறிச்சி மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. நடைப்பயிற்ச்சியை நமது வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவதன் மூலம் பல பயன்களை நாம் அடையலாம். எடுத்ததற்கும் வாகனங்களை பயன் படுத்தாமல் நம் ஆரோக்கியத்தை மனதில் கொண்டு நடந்து செல்லக் கூடிய இடங்களுக்கு நடந்து செல்லுங்கள்.

**தியானம்**


மனதிற்கு மட்டும் அல்ல உடம்புக்கும் தெம்பு ஊட்டுகின்றது. தியானப் பயிற்சியை தினமும் மேற்கொள்வதன் மூலம் பல அதிசய பலன்களை நமது உடலும் உள்ளமும் பெறுவதை உணரலாம். இப்போ தான் இன்ரனெட், யூரியூப் *(youtube)* இருக்கிறதே! இதில் பலர் இலவசமாகவே சொல்லிக்கொடுக்கிறார்கள். வீட்டில் இருந்தே தியானம் செய்வது எப்படி என்று அறிந்து முறைப்படி செய்யலாம். தியானத்துடன் சேர்த்து யோகாசனத்தையும் பழகிக்கொண்டு செய்து வந்தால் இன்னும் உடல் ஆரோக்கியத்திற்கு பலன் அழிக்கும்.

**சுற்றுலா**

நேரம் கிடைக்கும் போது குடும்பத்தாரோடு அல்லது தனியாக நண்பர்களுடனோ அல்லது தனியாகவோ சுற்றுலா செல்வது நமது மனதையும் உணர்வுகளையும் புத்துணர்ச்சி அடையச் செய்யும். இத்தகைய பயணம். மனதின் அழுத்தத் தைக் குறைத்து புதுவிதமான அனுபவத்தையம் நமக்கு அளித்திடும்.
நமது சுற்றுச் சுழலும், மன அழுத்தத்தை உண்டாக்கும். அத்தகையச் சூழலை தவிர்தது நமது மனதிற்கு இன்பம் அளிக்க கூடிய சூழலை நாம் அமைத்துக் கொள்ள வேண்டும்.
மது அருந்துதல், புகை பிடித்தல் போன்ற பழக்கங்கள் உடலுக்கு மட்டும் அல்ல மன ஆரோக்கியத்தையும் பாதிக்கும்.
அதிகப் படியான குடிப் பழக்கம் மூளையைப் பாதிக்கும் என்று அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர் ஆகையால் அத்தகைய பழக்கங்களை தவிர்ப்பதும் நல்லது. இந்த மாற்றங்களை நமது வாழ்க்கையில் நடைமுறைப் படுத்தி உடல் மற்றும் மன ஆரோக்கியத்தோடு சிறப்பாக வாழ்வோமாக!.





# 1 திருமந்திரமும் வாழ்வியலும்

(சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி)

**இந்நூலில் சிவம் எனவரும் சொல்லுக்கு இறைவன் என்னும் கருத்தைக் கொள்வோமானால் இந்நூல் எல்லா மதத்திற்கும் பொது நூலாக அமைவதைக் காணலாம்.**

ஒரு நூலில் கூறியுள்ள விடையத்தைப் பற்றி நாம் தெரிந்து கொள்வதற்கு முன்பாக அந்நூலைப் பற்றியும் அதை ஆக்கியவரைப் பற்றியும் தெரிந்து கொள்வது மிகவும் அவசியமானதொன்றாகும். "திருமந்திரம்" நூலைப்பற்றிப் பார்ப்போமானால் திருமந்திரத்திற்கு ஒரு மந்திரம் இல்லை என்பது முன்னோர் வாக்கு. திருமந்திரம் அன்பே சிவம் என்னும் தத்துவத்தின் மூலம் எமது அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளை மிகவும் சிறப்பாக விளக்குகிறது.

உலகில் உள்ள சகல உயிர்களிடத்திலும் அன்பு செலுத்தக் கற்றுத் தருகிறது. ஆன்மீக வாழ்க்கைக்கும் சரியை, கிரியை, யோகம், ஞானம் மூலம் இறைவனைச் சேர வழி காட்டுகிறது. எமது உடலை முறையாகப் பேணுவதற்குப் பிராணாயாமம் (மூச்சுப் பயிற்சி), யோகாப்பியாசம், வைத்தியம் உட்பட பல விடையங்களைக் கூறுகின்றது. சைவம், தமிழ் ஆகிய இரு பெரும் துறைகளில் தலைசிறந்த மும்மணிகள் எனக் கூறப்படும் நூல்களுள் திருக்குறள், திருவாசகம் ஆகியவற்றுடன் திருமந்திரமும் ஒன்றாகும். சைவசமய நூல்களில் மந்திரம் எனக் கூறப்படும் ஒரே நூல் திருமந்திரமாகும்.

இந்நூல் சைவசித்தாந்த சாத்திரமாகவும், இறைவன் திருவருளைப் போற்றிப் பரவும் தோத்திரமாகவும் போற்றப்படுகின்றது. இந்நூல் தமிழ் மூவாயிரம் எனவும், திருமந்திர மாலை எனவும் அழைக்கப்படுகிறது. இந்நூல் பத்தாம் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளது.

இந்நூலில் சிவம் எனவரும் சொல்லுக்கு இறைவன் என்னும் கருத்தைக் கொள்வோமானால் இந்நூல் எல்லா மதத்திற்கும் பொது நூலாக அமைவதைக் காணலாம்.

சங்ககாலப் புலவரும், முருகப்பெருமானின் அருள் பெற்றவரும், முருகப்பெருமானை நேரில்த் தரிசித்தவருமான ஒளவையார்

"தேவர் குறளும் திருநாள் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒருவாசகம் என்று உணர்."

எனப் பாடியுள்ளார். இதன் பொருள் திருக்குறள், நான்கு வேதங்கள், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோரின் படைப்புக்கள், அகத்தியரின் நூல், திருஞானக்கோவை, திருவாசகம் ஆகிய அனைத்துமே திருமூலர் கூறும் ஒரு வாசகத்திற்கு இணை என்பதாகும். இக்கூற்றிற்கு மேலாகத் திருமந்திரத்தைப் பற்றிக் கூறவேண்டிய அவசியமில்லை என நினைக்கின்றேன்.

திருமந்திரத்தை அருளிய திருமூல நாயனாரைப் பற்றிப் பார்ப்போமானால் அவர் அட்டமா சித்திகள் பெற்ற தவயோகி. அவரின் இயற்பெயர் சுந்தரநாதன் எனக் கூறப்படுகின்றது. அவர் கி.பி. 4 ஆம் ,5 ஆம் நூற்றாண்டில் மூவாயிரம் வருடங்களாக யோக நிலையிலிருந்து ஆண்டுக்கொருமுறை விழித்து ஒவ்வொரு பாட்டாக (மூவாயிரம் பாடல்களை) தமிழில் திருமந்திரத்தைப் பாடியதாக வரலாறு கூறுகின்றது. (திருமந்திரம் "செப்பும் சிவாகமம்..." எனத்தொடங்கும் பாடல் எண் 74 இலிலும், "இருந்தேன் இக்காயத்தே .." எனத்தொடங்கும் பாடல் எண் 80 இலும் திருமூலநாயனாரே இதை உறுதி செய்கின்றார்) அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான இவரைச் சுந்தரமூர்த்தி நாயனார் "நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்" எனத் திருத்தொண்டர் தொகையிலும், சேக்கிழார் பெருமானான் திருத்தொண்டர் புராணத்தில் "கயிலாயத்து ஒரு சித்தர் பொதியில் சேர்வார் காவிரி சூழ் சாத்தனூர் கருதும் மூலன்" எனவும் போற்றியுள்ளார்கள்.

சிவனிடம் மாணவராக இருந்த நந்தியெம் பெருமானிடம் உபதேசம் பெற்ற சுந்தரர் என்னும் யோகி கைலாயத்தில் இருந்து அகத்திய முனிவரைக் காண்பதற்காக தென்நாடு வந்தார். வரும் வழியில் சிதம்பரத்தில் ஆனந்தக்கூத்தையும், திருவாவடுதுறையில் சிவனையும் வணங்கியபின்பு வழியில் மூலன் என்னும் மாடு மேய்ப்பவன் பாம்பு தீண்டி இறந்து கிடக்க அவன் மேய்த்த பசுக்கள் அவன் உடலைச் சூழ்ந்து நின்று கதறிக்கொண்டிருப்பதைக் கண்டார். மாடுகளின் துயரத்தைப் போக்க எண்ணிய யோகி தனது யோக சக்தியால் தனது உடம்பைப் பாதுகாப்பாக வைத்துவிட்டு இறந்து கிடந்த மூலனின் உடலில்ப் புகுந்தார். மூலன் உயிர்பெற்று எழுந்ததால் பசுக்கள் மகிழ்ச்சியடைந்தன. மாலை நேரமானதும் பசுக்கள் வீடு நோக்கிப் புறப்பட்டன. பசுக்களைப் பின் தொடர்ந்த மூலன் உடலில் இருந்த யோகியும் மாடுகள் வீடுகளுக்குள் புகுந்தவுடன் மீண்டும் தன் உடலில்ப் புகுந்து தான் முன்பு இருந்த நிலைக்குத் திரும்ப நினைத்தார். ஆனால் அவர் உடலை விட்ட இடத்தில் அவரின் உடல் கிடைக்கவில்லை. இறைவன் தான் அருளிய ஆகமப் பொருளை தமிழில் வழங்கவே இவ்வாறு செய்தான் என ஞானத்தால் உணர்ந்த யோகி திருவாவடுதுறை சிவன் கோவிலில் உள்ள அரசமரத்தின் கீழ் யோக நிட்டையில் அமர்ந்திருந்தார். அன்றுமுதல் அவர் திருமூலர் என்று அழைக்கப்பட்டார். இக்கதையை திருத்தொண்டர் திரு அந்தாதியில் நம்பி ஆண்டார் நம்பிகள் "குடிமன்னு சாத்தனூர்க் கோக்குலம் மேய்ப்போன் குரம்பை புக்கு" என்னும் வரிகளிலிருந்து உறுதி செய்யக்கூடியதாக உள்ளது

திருமந்திரத்தின் காப்புச் செய்யுளாகிய விநாயகர் காப்பு
"ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்துஅடி போற்றுகின் றேனே".

இப்பாடலின் பொருள், "ஐந்து கைகள், யானை முகம், வெண்ணிலவின் மூன்றாம் பிறைக் கோடு போன்ற ஒற்றைக் கொம்புடையவன், பரம்பொருளின் திருமகன், அறிவின் உச்சியாய் இருப்பவனை (விநாயகப் பெருமானை) சிந்தையில் வைத்துத் தியானித்து அவன் திருவடி போற்றி வணங்குகின்றேன்" என்பதாகும். (இப்பாடல் திருமூலரால் எழுதப்படவில்லை எனச் சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.)
இக்கட்டுரையில் குறிப்பிடப்படும் பாடல் எண்கள் கவிஞர்கோ ஞா. மாணிக்கவாசகன் அவர்களால் உரை எழுதப்பட்ட நூலில் உள்ளபடி எடுக்கப்பட்டுள்ளன. வேறு சில புத்தகங்களில் இவ் எண்கள் மாறுபட்டுள்ளன.

## வெற்றிமணி வழங்கிய வளர்கலை விருது







மிருதங்க அரங்கேற்றம் 01.11.2015

செல்வன். ஷங்கர்ஷன் சர்மா . ஜெயந்திநாதக்குருக்கள் அவர்களுக்கு 65 வருட வரலாறு கொண்ட "வெற்றிமணி வளர்கலை விருது" கொடுத்துக் கௌரவித்தது.

திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றது விழா ஒழுங்கமைப்பு எம்மிடம் நிச்சயிக்கப்படுகின்றது!






றோர்மொண்ட்(நெதர்லாந்து)
தமிழ்க் கலாச்சார உதவி நற்பணி மன்றம்

# வாணி விழா



படங்கள்:Dirushan Video







## செல்வி அனிற்ரா சிவகுமாரன்

2014 - 2015 கல்வியாண்டில் நடைபெற்ற அனைத்துலகப் பொதுத்தேர்வில் (லிம்பேர்க் மாநிலத்தில் முதலாவது மாணவராக) வளர்நிலை 12 ஐ பூர்த்தி செய்த எமது றோர்மொண்ட் தமிழ்ப் பாடசாலை மாணவி செல்வி அனிற்ரா சிவகுமாரன் அவர்களை 7- 11- 2015 ல் நடைபெற்ற வாணி விழாவில் வைத்து திருவள்ளுவர் கல்விக் கழகத்தினரும், தமிழ்க் கலாச்சார உதவி நற்பணி மன்றமும் கௌரவித்த பொழுது எடுத்த படங்கள்.




றோர்மொண்ட்(நெதர்லாந்து) தமிழ்க் கலாச்சார உதவி நற்பணி மன்றம் நடாத்திய தமிழ்ப் பாடசாலையின் வாணி விழா( 07- 11- 2015) நிகழ்வுகளின் ஒரு தொகுப்பு.

## 1930- 1980 வரை பிறந்த நம்மை, இந்த காலப் பிள்ளைகள் நம்மைபற்றி என்ன நினைத்தாலும் நாம் மிக அதிர்ஷ்டகாரர்களே..!



தனி படுக்கையில் அல்ல அம்மா அப்பாக்கூட படுத்து உறங்கியவர்கள் நாம் தான்
எந்த வித உணவுப் பொருட்களும் நமக்கு அலர்ஜியாக இருந்ததில்லை.
அடுப்படி அலமாரிகளில் சமைத்து ஒரு வருடமான உணவு இருந்ததில்லை.
பள்ளியில் இருந்து வீட்டிற்கு வந்தது முதல் இருட்டும் வரை ஒரே விளையாட்டுதான் அறைக்குள் அடைந்து உலகத்தை பார்ப்பதில்லை.
நாங்கள் விளையாடியது நிஜ நண்பர்களிடம் தான் நெட் நண்பர்களிடம் இல்லை.
தாகம் எடுத்தால் கிணற்றடியில் ஒரு வாளி தண்ணி எடுத்து குடிப்போம் ஆனால் பாட்டில் வாட்டர் தேடியதில்லை.
ஒரே ஜூஸை வாங்கி நாலு நண்பர்களும் மாறி மாறி குடித்தாலும் நோய்கள் எங்களை வந்தடைந்ததில்லை. காலில் ஏதும் அணியாமல் இருந்து நாள் முழுவதும் சுற்றி வந்தாலும் காலுக்கு ஏதும் நேர்ந்ததில்லை. சிறு விளக்கு வெளிச்சத்தில் படித்து வந்தாலும் கண்ணாடி அணிந்ததில்லை.
உடல் வலிமை பெறஊட்டசத்து பானங்கள்அருந்தியதில்லை .மிஞ்சிய சாதத்தில் ஊற்றி வைத்த நீரைச் சாப்பிட்டே உடல் வலிமை பெற்றவர்கள்.
எங்களுக்கு வேண்டிய வீளையாட்டு பொருட்களை நாங்களே உருவாக்கி விளையாடி மகிழ்வோம். எங்களது உணர்வுகளை போலியான உதட்டசைப்பினால் செல்போன் மூலம் பறிமாறவில்லைஉள்ளத்தில் இருந்து வரும் உண்மைகளை எழுத்தில் கொட்டி கடிதமாக எழுதி தெரிவித்து வந்தோம். அதனால் சொன்ன சொல்லில் இருந்து என்றும் மாறியதில்லை.
எங்களிடம் செல்போன் டிவிடி, ப்ளை ஸ்டேஷன், எக்ஸ்பாக்ஸ், வீடியோ கேம் பெர்சனல் கம்பியூட்டர், நெட், சாட் போன்றவகள் இல்லை ஆனால் நிறைய உண்மையான நண்பர்கள் இருந்தனர்
வேண்டும் பொழுது நினைத்த நண்பர்கள் வீட்டிற்கு சென்று உணவுண்டு உரையாடி மகிழந்து வந்தோம். அவர்கள் வீட்டிற்கு போவதற்கு போனில் அனுமதி பெற தேவையில்லை.
உறவுகள் அருகில் இருந்தது உள்ளம் நன்றாக இருந்ததால் உடல் நலம் காக்க இன்சூரன்ஸ் எடுத்தத்தில்லை
இந்த காலங்களில் பிறந்து வளர்ந்த வந்த நாங்கள் அதிர்ஷ்ட சாலிகளா இல்லையா என்பதை இப்ப சொல்லுங்கள்..








# தமிழர் மரபுத்திங்கள் – மார்கழி.

**(முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்)**

தமிழர் காலக்கணிப்பில் ஓர் ஆண்டின் நிறைவான திங்கள் மார்கழியாகும். பன்னிரண்டாவது திங்களாகும்.இத்திங்களின் தொடக்கத்தை ஆண்டாள் தனித்துவமாகப் பதிவு செய்துள்ளாள்.அவள் பாடிய திருப்பாவைப் பாடலின் தொடக்கமாக அதை அமைத்துள்ளாள்.அது வருமாறு அமைந்துள்ளது.

“மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்
சீர்மல்கும் ஆயர்பாடிச் செல்வச் சிறுமீர்காள்.” (திருப்பாவை:1:1-3)

இப்பாடல் வரிகள் தான் முதன்முதலாக மார்கழித்திங்கள் பற்றிய விளக்கத்தைத் தருகின்றன.மதியின் தோற்றம், வளர்ச்சி, நிறைவு கொண்டு 'திங்கள்' எனக் காலக்கணிப்பு நடைபெற்றதை எமக்கு உணர்த்துகின்றன. தொடர்ந்து வரும் திங்கள் பற்றிய குறிப்பையும் 'நாச்சியார் திருமொழி' எனப் பாடிய பாடல்களில் பதிவு செய்துள்ளமையும் இங்கு குறிப்பிடப்படவேண்டிய ஒன்றாகும்.
ஆயர்பாடி மக்களின் வழிபாட்டு மரபிலே இத் திங்கள் முழுவதும் நோன்புக் காலமாக இருந்துள்ளது. குறிப்பாகப் பெண்களின் வழிபாட்டு மரபாக நிலவியமை உணர்த்தப்பட்டுள்ளது. நாடு மழைவளம் பெற்று, விளைநிலம் சிறந்து எல்லோரும் மகிழ்வாக வாழ வேண்டும் என வழிபாடு செய்யும் திங்களாக மார்கழித்திங்களை ஆண்டாள் கூறியுள்ளாள். 30 நாட்கள் தொடரும் நோன்பு நீண்டதொரு வழிபாட்டு நடைமுறையாக இன்றும் தொடர்கிறது. இந்த வழிபாட்டு நடைமுறை திருப்பாவைப் பாடலிலே மார்கழி நோன்பு என விளக்கப்பட்டுள்ளது. மார்கழி நோன்பு நடைமுறை பற்றி மாணிக்கவாசகருடைய திருவெம்பாவைப் பாடலும் குறிப்பிடுகிறது. ஆனால் அவர் இருபது பாடல்களே பாடியுள்ளார். அதனால் மார்கழித்திங்களில் முப்பது நாட்களை வரையறை செய்து ஆண்டாள் அக்காலத்துக் காலக் கணிப்பீட்டையும் விளக்கியுள்ளாள்.

இவரது வழிபாட்டு நடைமுறையில் ஒரு வேறுபாடு உண்டு. ஆண்டாள் கண்ணனை வழிபடும் மரபை ஆவணப்படுத்த மணிவாசகர் சிவனை வழிபடும் மரபை ஆவணப்படுத்தியுள்ளார். எனினும் இருவரும் பெண்களே இந்த வழிபாட்டில் முக்கிய பங்கு ஏற்றதை விளக்கியுள்ளனர். மேலும் பெண்கள் வீட்டு வழிபாடு செய்யும் நடைமுறைக்கு அப்பால் திருக்கோயில் வழிபாட்டு நடைமுறையிலும் பங்கு ஏற்றமை பதிவு செய்யப்பட்டுள்ளது. கூட்டுநிலையான வழிபாட்டை எல்லோரும் மேற்கொள்ளவும் இருவரும் வழிகாட்டியுள்ளனர்.

வழிபாட்டு நடைமுறையில் நீராடல் என்னும் உடல் தூய்மை பற்றி விரிவாக விளக்கப்பட்டுள்ளது. 'மார்கழிநீராடல்' ஒரு சிறப்பான நீராடலாகப் பண்டு தொட்டு இருந்ததை அறிய முடிகிறது. தைநீராடல்,மாசிக்கடலாட்டு என்பனவும் இத்தகைய உடல் தூய்மை செய்யும் நடைமுறை இருந்ததை விளக்கும் வழிபாட்டு நடை முறைகளாகும்.
மார்கழித்திங்களில் வரும் ஞாயிற்றுக்கிழமை சிறப்பான நோன்புநாளாக இன்று வரை பேணப்படுகிறது. மார்கழித்திங்களில் வரும் திருவாதிரை நட்சத்திரத்தன்று நடைபெறும் ஆருத்திரா தரிசனம் சிறப்பான வழிபாட்டு நாளாகும். அன்றைய நாளில்தான் திருவாசகம் நடராஜருடைய காலடியிலே கண்டெடுக்கப்பட்டதாகச் செய்தி உண்டு.இதே போன்று மார்கழித்திங்களில் வளர்பிறை பதினோராம் நாள் ஏகாதசி நாளும் சிறப்பான நோன்புநாளாகும். அன்று 'சொர்க்கவாசல்' திறக்கப்படும் சிறப்பு நாளாகத் திருமாலை வழிபடும் தனித்துவ நாளாக அமைந்துள்ளது.இந்நாளை 'வைகுண்ட ஏகாதசி' என்றும் சிறப்பாக அழைப்பர்.
மழை பொழியும் மார்கழித்திங்கள் ஒரு சிறப்பான வழிபாட்டு த் திங்களாக மழையை வேண்டி வழிபடும் திங்களாக அமைந்திருப்பது உலகு தழுவிய ஒரு கருத்தாக அமைந்துள்ளது. ஆண்டாள் பாடலில் 'வையத்து வாழ்வீர்காள்' என உலக மக்கள் அனைவரையும் அழைத்துப் பாடுவது இதற்குச் சான்றாக உள்ளது.மழையையும் 'உலகினிற் பெய்திடாய்!' என்றே கேட்கிறாள்.வழிபாடு தன்னலம் கருதாத பொது வழிபாடாக அமைய வேண்டும் என்பதையே ஆண்டாள் வலியுறுத்துகிறாள் உலக மக்கள் எல்லோரையும் ஒன்றிணைக்க வழிபாடே ஏற்றதொருசெயற்பாடாகும். இயற்கையின் கொடையான மழை வளம் குன்றினால் உலகம் இயங்காது.இதனை உலகப் பொதுமறையான திருக்குறள் 'வான்சிறப்பு'என ஓர் அதிகாரம் அமைத்துச் சிறப்பாக விளக்கியுள்ளது.

“வான் நின்று உலகம் வழங்கி வருதலான்
தான் அமிழ்தம் என்று உணரற் பாற்று” (குறள்:11)

மழை இடையறாது பெய்வதால் தான் உலகிலே உயிர்கள் நிலைபெற்றுள்ளன.ஏனெனில் மழைநீர் உயிர்களுக்கெல்லாம் அமுதம் போன்றது.எனவே மழை என்னும் இயற்கையின் கொடையை வழிபாட்டால் அனைவரும் பெற வழிகாட்டிய ஆண்டாளும் மணிவாசகரும் மார்கழித்திங்களின் சிறப்பை உலகறிய வைத்தவர்களாகும்.நீரின்று உலகு அமையாது.எனவே மாரியை வேண்டி வழிபடும் மார்கழித்திங்கள் தமிழர் மரபுத்திங்கள்களில் தனிச்சிறப்புப் பெற்றிருப்பது யாவராலும் உணரப்பட வேண்டிய விடயமாகும். இத்திங்கள் முழுவதும் காலையில் வீட்டுவாயிலில் மாக்கோலம் போடும் மரபு உண்டு.அரிசிமாவினால் போடப்படுகின்ற கோலம் ஊர்ந்து திரியும் எறும்புகளுக்கு மழைக்கால உணவாகப் பயன்படுகிறது.இது ஒரு உணவுக் கொடையை நாம் செய்ய வழிகாட்டுகிறது.எதற்கும் விஞ்ஞான பூர்வமான விளக்கம் வேண்டுமென விரும்பும் இன்றைய இளந்தலைமுறை இக் கொடை பற்றி நன்குணர்ந்து செயற்படவேண்டும். கோலம் என்பது வெறுமனே ஒரு கவின் தரும் செயற்பாடன்று.அதில் ஒரு கலை நுட்பமும் இணைந்துள்ளது. புள்ளிகளை இட்டு அவற்றைக் கணக்கிட்டு இணைக்கும் வரைபட ஆற்றல் இளைய தலைமுறையினருக்குச் சிறந்ததொரு கணக்கிடும் பயிற்சியாகவும் அமையும்.மார்கழித்திங்கள் ஓராண்டின் மிக உச்சமான வழிபாட்டுக்காலம் என்பதை உணர்த்தும் மாக்கோலம். அதன் நடுவே சாணத்தில் பிள்ளையார் பிடித்து வைத்துப் பூசனிப்பூவைச் சூடி வைப்பது ஒரு திருக்கோயில் அமைக்கும் உள்ளப் பக்குவத்தைத் தரும்.மதிய வேளையில் எறும்புகள் வந்து குறுணலை உண்டு இரவு உணவுக்காகவும் அவற்றைச் சுமந்து வரிசையாகச் செல்லும் போது ஒரு பெரிய உணவுக் கொடையைச் செய்த மன நிறைவு ஏற்படும்.இதுவே மார்கழித்திங்களில் நாம் அநுபவிக்கும் உச்சமான மகிழ்ச்சி என்பதில் ஐயமில்லை.






ஸ்ரீ கனகதுர்க்கா
அம்பாள் ஆலயம்
துர்க்கா பூஜா துரந்தரர்
சிவசாமிக்குருக்கள்
ஜெயந்திநாதக்குருக்கள்
Tel: 02304- 910 9445
0177 20 16 941
Tel: 02304/ 16721 Robert koch Str.5- 58239 Schwerte

யேர்மனியில் பிராங்பேட் நகரில்
JAFFNA BASAR
உரிமையாளர்: நடராஜா சுதன்
Tel: 069 25 62 63 53
மாதம் மாதம் மாதரைக்கவரும்
புத்தம் புது டிசைன்களில்
தங்க நகைகள்
ஒரே இடத்தில்
தரம் மிக்க தங்க நகைகள்
பயணங்களை இனிமையாக்கும்
குறைந்தவிலையில்
பயணச்சீட்டுக்கள்
மற்றும் இலத்திற்குத்
தேவையான மளிகைப் பொருட்கள்
அனைத்திற்கும் நாடுங்கள்
Kaiserstr.64 (ladan Nr.22) 60329 Frankfurt/Main



சித்திரம் Tv
எம்மிடம் கிடைக்கும்



நமது வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எங்கள் இனிய
நத்தார் புத்தாண்டு
வாழ்த்துக்கள்



# ஒரு நாளில் – இரு மழை

நெடுந்தீவு முகிலன்

மழை 01.
அடை மழை பெய்கிறது.
கூரைகள் வழியாக ஒழுகும் மழை நீருக்கு
குழந்தைகள் பாத்திரம் வைக்கிறார்கள் .
மின்சாரம் தடைப்படுகிறது .
விறகுகள் நனைந்து விட மதிய உணவும்...
கனவாகி விடுகிறது.
நாய் பூனை கோழிகள் எல்லாம் நனைந்து
நனைந்து நடு வீட்டிற்குள் வருகின்றன.
கிணறு நிரம்பி பக்கத்து வாய்க்காலோடு கலக்கிறது.
சாக்கடை நீர் மணக்கிறது.
பாடசாலை கொப்பி புத்தகங்கள் பாதுகாப்பிற்காக
அடுப்படி பறணில் வைக்கப்படுகிறது.
கோதுமை மா பையை தலையில் போட்டுக் கொண்டு... காயவிடப்பட்ட
துணிகள் எடுக்கப்படுகின்றன.
மரங்கள் முறிவதும்.... தவளைகள் கத்துவதும்....
கேட்டுகேட்டு அலுத்து விடுகிறது.
இரவுப் படுக்கைக்கு பக்கத்து கோயிலுக்கு போவதாக...
எல்லோரும் முடிவு எடுக்கிறார்கள்.

மழை -02
அடைமழை பெய்கிறது
குளிரென்று கொஞ்சம் ஏசியை குறைத்துக் கொள்கிறார்கள்.
மின்சார அடுப்பில் அவசர அவசரமாக....
சூடான கோப்பி தயாரிக்கப்படுகிறது.
குழந்தைகள் காகிதக் கப்பல்களை..
சரி செய்கிறார்கள்.
யன்னல்கள் சாத்தப்பட்டு தூவானத்திற்கு...
எதிராய் திரைச் சீலையும் மாட்டப்படுகிறது.
வாகனங்கள் உள்ளுக்கு எடுத்து விடப்படுகின்றன.
வானிலை அறிக்கைகள்...
ரீ.வியில் பார்க்கப்படுகிறது
இனிய மழை நாளைப்பற்றி...
உறவுக் காரர்களோடு "ஸ்கைப்பில்" பேசப்படுகிறது
சாதுவாய்த் தூக்கம் வந்ததும் கம்பளியைப் போட்டுக் கொண்டு
கதவுகளை அடித்துச்..
சாத்திக் கொள்கிறார்கள்.
வெளியே முத்ததங்களினது சத்தம் மழையின் இரைச்சலைத்
தாண்டியும் கேட்டுக் கொண்டிருந்தது -



## நீ என்னை விட்டு நிரந்தரமாக போகலாம்.

நீ என்னை விட்டு நிரந்தரமாக போகலாம்.
எல்லா வாசலின் கதவுகளையும்....நான்
உனக்காகவே திறந்துவிட்டிருக்கிறேன்.

என்னிடம் இருந்து உனக்கு என்ன தேவைப்படுகிறதோ...
அவைகளையும் எடுத்துக்கொண்டு போ.... ஆனால்
என் நினைவுகளை மட்டும் விட்டுப்போ...
.
ஒரு போதும் என்னிடம் திரும்பி வர நினைக்காதே...
நான் திருந்தி வாழ நினைக்கிறேன்.
உனக்கும் எனக்கும் இடையிலான தவிப்பையோ...
அந்தரங்கங்களையோ அதன் ஆதாரங்களையோ
யாரிடமும் காண்பித்து அனுதாபம் வாங்காதே...
அது உன்னையே உருக்குலைய செய்யும்.

எனக்கு தற்சமயம் ஒரு வருத்தமுமில்லை
உன்னோடு வாக்குவாதப்பட விருப்பமுமில்லை
உன் சுகந்திரத்தை அடைவதற்கு ஒரு போதும் பயப்படாதே...
நான் அதற்கு தடையுமில்லை...


நாட்கள் கடந்த பின்னர் என் ஞாபகம்
உனக்கு வராமலிருப்பதற்காக - இப்பவே
வேறோர் விடையத்தில் அக்கறைப்படு.

மற்றவர்களை கவருவதற்கு உன்னிடம்
நிறைய இருக்கிறது - அதற்காக
உன்னை விலை கொடுத்து வாங்க அனுமதிக்காதே...

நான் உன்னை நம்பியதுபோல் - நீ
யாரையும் நம்பி ஏமாராதே .. விரும்பியவர்களிடம்
நடிக்காமல் முகத்துக்கு முன் சந்தேகப்படு.

என்னோடு இருந்த நாட்களில் நீ என்மீது
செலுத்திய அன்புக்கும் அரவனைப்புக்கும் நன்றிகள்.

நீ நியாயமாகத்தான் யோசிப்பாய் - என்னோடான
உறவை நிறுத்தியதிலே அதை உறிதிப்படுத்திவிட்டாய்.



உன்னை பற்றி ஒன்று மட்டும் எனக்கு
நன்றாகவே தெரியும்
"துக்கங்களில் இருந்து நீ இலகுவில்
வெளிவருவாய்" - ஆதலால்
என் மரணத்துக்காகவேனும்
உன்னிடம் இருந்து...
ஒரு துளி கண்ணிரேனும் செலவாகாது.

என்னிடம் திரும்பி வரமாட்டாய்
என்பதை முழுமையாக நம்பித்தான்
உன்னை அனுப்புகிறேன்.

ஓவியம்: வதனி குமார்






# தெறி

படத்தில் இருப்பது போல் தெறி படத்தில் மூன்று வேடத்தில் விஜய் நடிக்க இருக்கிறாரா என்பது குறித்து அப்பட இயக்குநர் அட்லி விளக்க மளித்துள்ளார். ராஜாராணி படம் மூலம் ரசிகர்களின் மனதில் குறிப்பிடத்தக்க இயக்குநராக இடம் பிடித்தவர் அட்லி.

இவர் தற்போது விஜயை வைத்து இயக்கி வரும் படத்திற்கு தெறி எனப் பெயரிடப்பட்டுள்ளது. தேறிக்கவிடலாமா என்று வேதாளத்தில் தலை பேசியவசனம் இன்னும் இரசிகர் மனதில் தெறித்துக்கொண்டே இருக்கும் போதே இளையதளபதி அதனை தனது படத்தின் தலைப்பாக்விட்டார்.

இவை அன்று சிவாஜி எம்.ஜி.ஆர் காலத்திலும் வந்தவைதான். சிறிது வித்தியாசம். சிவாஜி என் தம்பி என்று படம் நடித்தால் எம்.ஜி.ஆர். என் அண்ணன் என்று நடிப்பார். சிவாஜி ராமன் எத்தனை ராமனடி என்று நடித்தால் எம்.ஜி.ஆர் ராமன் தேடிய சீதை என்ற நடிப்பார். இந்த நிலை இப்பொழுதும் தொடர்கிறது.

போலீஸாக விஜய்... மேலும், இப்படத்தில் விஜய் உணர்வுப்பூர்வமான போலீஸ் அதிகாரியாக நடித்துள்ளாராம். விஜயை பார்த்தால் யாரோ ஒரு போலீஸ் போன்ற உணர்வு இருக்காதாம். நமது குடும்பத்தில் ஒருவர் என உணரும் வகையில் இருக்குமாம்.

மூன்று வேடம்? இப்படத்தில் விஜய் போலீசாக நடிக்கிறார் என்பது படத்தைப் பார்த்தாலே தெரிகிறது. ஆனால், மூன்று வித தோற்றத்தில் தோன்றுகிறாரா, அல்லது மூன்று தனிப்பட்ட பாத்திரங்களில் நடிக்கிறாரா என்பதை சொல்ல மறுக்கிறார் அட்லி.
அது இரகசியம்.. 'எல்லாவற்றையும் இப்போதே சொல்லிவிட்டால் படம் எப்படி சுவாரஸ்யமாக இருக்கும். அதற்கான சர்ப்ரைஸ் படத்தில் வைத்திருக்கிறேன்" என்கிறார் அவர்.அதோடு, இப்படத்தில் இரண்டு நாயகிகளான எமி ஜாக்சனும், சமந்தாவும் கவர்ச்சிக்காக அல்ல... , கதையை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச்செல்லும் கருவியாக பயன்படுத்தப் பட்டுள்ளார்களாம்.

## அஜித்

அஜித் குமார் தென்னிந்திய தமிழ்த் திரைப்பட நடிகர் ஆவார். அமர்க்களம் திரைப்படத்தில் நடிக்கும் போது நடிகை ஷாலினி யைக் காதல் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு அனோஸ்கா என்ற பெண் குழந்தை உள்ளது. அஜித் குமாரின் ரசிகர்கள் அவரை "அல்டிமேட் ஸ்டார்" என்றும் "தல" என்றும்பட்டப்பெயர்களுடன் அழைக்கிறார்கள். அஜித் குமார், கார் பந்தய வீரராகவும் அறியபடுகின்றார்.




அஜித் குமார், இந்தியாவின் ஐதராபாத் நகரில் ஒரு தமிழ் தந்தைக்கும் ,ஒரு சிந்தி தாயிற்கும் இரண்டாவது மகனாகப் பிறந்தார். இவர் திரைப்படங்களில் நடிப்பதன் மூலமே தமிழ் பேச கற்றுக்கொண்டார். 1986 இல் உயர்தர கல்வியைப் பூர்த்தி செய்யாமலே கல்வியை இடைநிறுத்தினார். தமிழ்த் திரையுலகில் அறிமுகமாகும் முன்னர், 1992 இல் பிரேம புஸ்தகம் என்ற தெலுங்குத் திரைப்படத்தில் அறிமுகமானார்.




இதன் பின்னர் தான் அமராவதி என்ற தமிழ்த் திரைப்படத்தில் நடிக்க வாய்ப்பு கிடைத்தது. முதல் படம் வெற்றி இல்லை. அடுத்த ஆண்டிலே பாசமலர்கள், பவித்ரா, ராஜாவின் பார்வையிலே ஆகிய திரைப்படங்களில் நடித்தார். இதில் பவித்ரா திரைப்படம் இவருக்குக் குறிப்பிடத்தக்க திரைப்படமாக அமைந்தது.
அஜித் குமாரின் முதல் வெற்றித் திரைப்படம் ஆசை திரைப்படமாகும். இடையில் மோட்டார் பந்தயம் ஒன்றில் போட்டியிட்டுப் படுகாயமடைந்தார். இதனால் நடிப்பில் தடை ஏற்பட்டது. அதன் பின்னர் சரணின் காதல் மன்னன் எனும் திரைப்படத்தில் நடித்தார். இவர் பல நல்ல காரியங்களுக்கு உதவிகள் செய்துள்ள இவர், 2014ஆம் ஆண்டு தனது வீட்டில் வேலை செய்பவர்கள் 12 பேருக்கு வீடுகள் கட்டிக்கொடுத்து உதவி செய்துள்ளார். பாதுகாப்பான பயணத்தை வலியுறுத்தி மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் 2013 ஆகஸ்டு 18 அன்று சென்னை முதல் பெங்களூர் வரையிலான இருசக்கர வாகன விழிப்புணர்வு பேரணியில் பங்கேற்றார்.2014-ம் ஆண்டு புனே முதல் சென்னை வரையிலான இருசக்கர வாகன விழிப்புணர்வு பேரணியில் பங்கேற்றார். 2015 அவருக்கு வேதளம் படம் பெரும் வெற்றியைத் தேடிக்கொடுத்து. தெறிக்கவிடலாமா? பஞ் டயலக்காக அமைந்தது அது.



உலகு எங்கும் வலம்வர
தரமான விமானப் பயணத்தற்கு

# EurAsian - Tours

Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965

VALUTRANS MONEY TRANSFER
துரித பண
மாற்றுச் சேவை!

LITTLE INDIA வின் மற்றுமொரு சேவை...
Tel: 02131 273 692

நமது வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எங்கள் இனிய
நத்தார் புத்தாண்டு
வாழ்த்துக்கள்

Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84
Further Str. 156
41462 Neuss
இந்தியா– இலங்கை– விசா பெற்றத்தரப்படும்!
info@eurasian-tours.com

---

என்றும் மலிவாக
தரமாக திருமணப்
பட்டுப்புடவைகள் மற்றும்
பாட்டிசாறிகள்,
சிறுவர்களுக்கான ஆடைகள்,
பஞ்சாபிகள்,
அனைத்தும் புத்தம்,
புது டிசைன்களில்,
எம்மிடம் உண்டு.
நம்மை நாடிவரக்
காரணம், அதுவே!
ஜஸ்மின் சில்க் ஹவுஸ்

# Jasmine Silk House

08.12.2015 திகதி முதல் 09.02.2016 வரை
எமது நிறுவனம் திருத்வேலைகளுக்காகப்
பூட்டப்பட்டு இருக்கும்வாடிக்கையாளர்கள்
உங்கள் தேவகளுக்கு முந்துங்கள்
10.02.2016 புதுப்பொலிவுடன்
ஆரம்பமாகும்

HP:0173 1937 325
Tel:02102 844744
Jasmin Silk House
Fester Str.50
40882 Ratingen
T.Mohanadas

நமது வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எங்கள் இனிய
நத்தார் புத்தாண்டு
வாழ்த்துக்கள்

---

# ASIA BAZAR

Ria Money Transfer
MoneyGram
VALUTRANS MONEY TRANSFER

துரித பண மாற்றுச் சேவை!
ஆசிய, ஆபிரிக்கஉணவுவகைகள்
வியாழன்சனிக்கிழமை தோறும்
இலங்கை, இந்திய உடன்
மரக்கறிவகைகள்
கடல் உணவுப் பொருட்கள்.
இன்னும் பல...

உரிமையாளர்:
பா.கணேஷ்

நமது வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எங்கள் இனிய
நத்தார் புத்தாண்டு
வாழ்த்துக்கள்

An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282

---

புதிய இலங்கை உணவகம்
Dortmund நகரில்...

# NEW CEYLON IMBISS

நமது வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எங்கள் இனிய
நத்தார் புத்தாண்டு
வாழ்த்துக்கள்

இலங்கை உணவை
சுத்தமாக
சுவையாகச்
சுவைக்க
நாடுங்கள்

திங்கள் முதல்
சனிவரை
காலை 11.30 முதல்
மாலை 22.00 மணிவரை
ஞாயிறு மற்றும்
விடுமுறை நாட்களில்
16.00 -22.00 மணி வரை

Tel: 0231 72 52 859
0171 6157 130
Annen Str.1
44137 Dortmund

---

100% SATISFACTION GUARANTEE

Online: asiamarkt24.com
Phone: +49 231 330 46 798
ANDROID APP ON Google play

# asiamarkt 24

Go shop online: Desktop / Mobile / App

நமது வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எங்கள் இனிய
நத்தார் புத்தாண்டு
வாழ்த்துக்கள்

வேகமான டெலவரி - சிறந்த விலை உத்தரவு - சகல பொருட்கள் - சுலபமான ஆர்டர்செய்தல்
fast delivery - best price guarantee - wide selection - easy ordering

---

யேர்மனியில் தரம்மிக்க ஓர் மொத்த வியாபார நிலையம்!
மரக்கறி கடலுணவுப் பொருட்களின் மொத்த இறக்குமதியாளர்கள்

# StaR - Impex

StaR-Impex
Asia & Afro Großhandel & Einzelhandel

Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00
Mobil: 0172/2183703
e-mail: star-impex@live.de
StaR Impex : Inh :K.Sivasubramaniam

நமது வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எங்கள் இனிய
நத்தார் புத்தாண்டு
வாழ்த்துக்கள்

Tel:0231 860 26 96 Fax: 0231/8602698 Kipper Str.3 44147 Dortmund Germany